நகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 05 வெள்ளிக்கிழமை (19.03.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 113

## இனி நடைபெறும் பேச்சுக்களின் போது

# விடுதலைப்புலிகள் கேட்டதை தமிழ்க் கட்சிகள் கேட்கமுடியாது!

### சமஷ்டி என்பது பிரிவினையுடன் தொடர்புபட்டது என்கிறார் ஜனாதிபதி



சிங்கப்பூர், மார்ச் 19

எதிர்காலத்தில் தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுக்களை மேற்கொள்ள நான் உத்தேசித்துள்ளேன். அப்போது அவர்கள் விடுதலைப்புலிகள் கேட்டதை எல்லாம் கேட்க முடியாது.

வடக்குக் கிழக்கை நான் ஒருபோதும் இணைக்கப்போவதில்லை. மாகாணங்களின் முதலமைச்சர்களுக்கு முழுமையான அதிகாரங்கள் வழங்குவது ஆபத்தானது.

சமஷ்டி என்பது இலங்கையைப் பொறுத்தவரை மிகக் கேவலமானது. அது பிரிவினையுடன் தொடர்புபட்டது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சிங்கப்பூரின் 'ஸ்ரெய்ட்ஸ் ரைம்ஸ்' பத்திரிகைக்கு வழங்கியுள்ள நீண்ட பேட்டியில் மேற்கண்டவற்றைத் தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது பேட்டியில் முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகாவிற்கு இப்போது மன்னிப்புக் கிடையவே கிடையாது என்றும், அரசியலுக்குத் தன்னைத் தயார்ப்படுத்தத் தவறிய முட்டாள் என்றும் விமர்சித்துள்ளார்.

(21 ஆம் பக்கம் பார்க்க)

### மனோ எம்.பியின் ஆதரவாளர் மீது கண்டியில் குண்டர்கள் கைவரிசை

கொழும்பு, மார்ச் 19

மனோகணேசனின் ஆதரவாளர்கள் இருவர் நேற்றுமாலை குண்டர்களால் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் கண்டி, கலஹா பகுதியில் இடம்பெற்றுள்ளது. எஸ்.பி. திஸாநாயக்காவின் கண்டி (24 ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச் சுடர்

உள்ளே

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயார்ப்படுத்தும் முன்னோடிப் பரீட்சை -04

### 'சனல்-4' சேவைக்கு பொன்சேகா அளித்த பேட்டி குறித்து அரசுத் தரப்பு கடுஞ்சீற்றம்!

கொழும்பு, மார்ச் 19

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை விமர்சித்து தடுப்புக்காவலில் உள்ள ஜெனரல் சரத் பொன்சேகா 'சனல் - 4' தொலைக்காட்சிக்கு வழங்கியுள்ள பேட்டியை அரசு கடுமையாகக் கண்டித்துள்ளது.

இலங்கை இராணுவம் தமிழ் இளைஞர்களைச் சுட்டுக்கொல்வது போன்ற வீடியோவைத் தயாரிப்பதற்கு சரத் பொன்சேகாவே 'சனல் - 4' தொலைக்காட்சிக்கு உதவியிருக்கலாம் எனத் தற்போது தான் சந்தேகிப்பதாகவும் அரசு குற்றம்சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் (24 ஆம் பக்கம் பார்க்க)

### வேட்பாளரின் பெயர், இலக்கம் பொறித்த உடை அணியத் தடை!

கொழும்பு, மார்ச் 19

வாக்குச் சாவடிகளுக்கு வாக்களிக்க வருபவர்கள், தங்கள் உடைகளில் குறிப்பிட்ட வேட்பாளரின் பெயரையோ அவரது விருப்பு வாக்கு எண்ணையோ பொறித்த உடைகளை அணிந்துவரத் தடை விதிக்கப்பட்டுள்ளது எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்த தடை பற்றி பிரதேச தெரிவத்தாட்சி அலுவலகங்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும், சுயேச்சை வேட்பாளர்களுக்கும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்தது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களை எவரும் விலைக்கு வாங்கிவிட முடியாது

## உரிய வேளையில் தகுந்த பதிலை அளிப்பார்கள்



### வழக்கம்பரைப் பிரசாரக் கூட்டத்தில் சம்பந்தன் தெரிவிப்பு

வழக்கம்பரை, மார்ச் 19

எமது மக்களுக்கு அற்ப சொற்ப சலுகைகளைவழங்கிஅவர்களை எவராலும் விலைக்கு வாங்கிவிட முடியாது. அவர்கள் உரிய வேளையில், சரியான-தகுந்த- திடமான பதிலை அளிப்பார்கள்.

அதே சமயம் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறையைத் தமிழ் மக்கள் ஏற்கத்தயாரில்லை. அதனை கடந்த ஜனாதிபதித் தேர்தலின் மூலம் நாம் தெளிவாக எடுத்துரைத்தோம். இந்த நாடாளுமன்றத் தேர்தல் மூலமும் அனை மீண்டுமொரு தடவை வெளிப்படுத்துவோம்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட கூட்டமைப்பின் தலைமை வேட்பாளருமான இரா.சம்பந்தன்.

(24 ஆம் பக்கம் பார்க்க)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புங்குடுதீவு கிழக்கு கலட்டியம்பதி (கலட்டிப் பிள்ளையார் கோயில்)

**ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்**

**மஹோற்சவப் பெருவிழா -2010**

- ★ கொடியேற்றம்: நாளை (20.03.2010) சனிக்கிழமை
- ★ துவஜாரோகணம்: பகல் 12 மணிக்கு.
- ★ வேட்டைத் திருவிழா: 27.03.2010 மாலை 4 மணிக்கு (தெங்கத்திடல் விநாயகர் ஆலயத்தில்)
- ★ சப்பறத் திருவிழா: 27.03.2010 இரவு 8 மணிக்கு
- ★ தேர்த் திருவிழா: 28.03.2010 பகல் 11 மணிக்கு
- ★ தீர்த்தத் திருவிழா: 29.03.2010 காலை 9 மணிக்கு
- ★ கொடியிறக்கம்: திருவூஞ்சல்
- ★ துவஜா அவரோகணம் : மாலை 6.30 மணிக்கு

துவஜாரோகண பிரதம குரு:
சந்ஜோயாது சிவாச்சாரியார் சிவஸ்ரீ
வாமதேவ கைலாஷராஜிக் குருக்கள் (நயினை)

தினமும் காலை 8.30 மணிமுதல் 12.30 மணிவரை பகல் திருவிழாவும், மாலை 6 மணிமுதல் இரவு 9 மணிவரை இரவுத் திருவிழாவும் நடைபெறும்.

இறைபணியில் நிற்கும்:

*"சிவாச்சார்ய கலாநிதி" சிவாச்சார்ய குலபூஷணம்,*
*சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக்குருக்கள்*
*(ஜயாமணி ஐயா),*
*(ஆலய முதல்வர், ஆலய பிரதம குரு)* (95669)

---

# COMPUTER COURSES

Diploma in Computerized
**Accounting** — Tally, Quick Book, Accpac M.Y.O.B

Diploma in
**Video Editing** — Premiere Pro CS4, particleillusion, Pinnacle Studio, Adobe After Effe. Nuendo,

Diploma in
**AutoCAD** — 2D & 3D Modeling

Adv. Dip. in
**Hardware & Networking**

புதிய பிரிவுகள் ஆரம்பம் 100%

மேலதிக விபரங்களுக்கு

DMI COMPUTER EDUCATION
NO. 113, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். Tel: 021-222 4403

---

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம். மார்ச் 19

'நெஸ்லே நிறுவனத்தின் அனுசரணையுடன் கடந்த 6ஆம் திகதி நடைபெற்ற 'நெஸ்ரமோல்ட்' மரதன் ஓட்டப் போட்டியில் அலுவலர்களாகக் கடமைபுரிந்தவர்களுக்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் மெய்வல்லுநர், தொழில்நுட்ப அலுவல்கள் மற்றும் சங்க உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவல்கள் சங்கம் கேட்டுள்ளது. (ஒ-10)

## முறைசாராக் கல்விப்பிரிவு மீள் பரீட்சை

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் சிங்களம், கணனி ஆகிய பாடங்களுக்கான மீள்பரீட்சை நாளையும், நாளை மறுதினமும் நல்லூர் ஸ்தான சீ.சீ.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மீள் பரீட்சைகள் மு.ப 9 மணி தொடக்கம் 12 மணிவரையும் நடைபெறவுள்ளன.

பரீட்சைக்கு மாணவர்கள் ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதி அட்டையின் பிரகாரம் தோற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கேட்டுள்ளார். (ஒ-10)

## திருமறைக் கலாமன்ற அரங்கில் 'வெள்ளியில் ஞாயிறு'

திருமறைக் கலாமன்றத்தினரால் தவக்கால ஆற்றுகை நிகழ்வாக 'வெள்ளியில் ஞாயிறு' என்னும்திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 28ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை நடைபெறவுள்ளன.

தொடாந்து ஏழு நாள்கள் நடைபெறவுள்ள இந்நிகழ்வு மாலை 6.45 மணிக்கு திருமறைக்கலாமன்ற அரங்கில் நடைபெறும் என்றும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மட்டும் 7.30 மணிக்கு ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

---

**PERSONAL CLASSES**
364 Stanly Rd (Near DMI)

**GAQ/BA-I/BA FINAL**

தமிழ் - K.[illegible]
ENG. - Mr.Maheswaran
Pol.Sci. - Mr.[illegible]
Hin.Cul. - Mr.[illegible]
Eco. - [illegible]

Sinhala - K.[illegible]
புதிய பிரிவு 20.03.2010
Sat/Sun [illegible]

---

## எனக்கு நேர்ந்த பெரும் இழப்பைப் பூர்த்தி செய்த அன்புள்ளம் கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கட்கு!



ஐயா!

நெற்றி வியர்வை சிந்த
நிலத்திலே உழைத்தவரை
சோற்றினைப் பெறுவதற்காய்-எம்
சோதரரைக் கரையேற்ற
மாற்றியே எம் வாழ்வை-நல்மனதாய்
மலரவைக்க
ஆற்றியே பல கருமம்- எமக்கு
ஆறுதலைச் செய்தவனே
எனது இதயத்தில் வேர் ஊன்றி பதிந்தவனே
எனது வேதனையைத் தீர்த்தவனே
ஏற்றிவைப்பேன் உன்னை- வெற்றியின்
ஏணிப்படிகளுக்கே -என்மூச்சுக்
காற்றிலே கலந்து முழுநிலவாய் நிற்கின்ற
ஐயா டக்ளஸ் தேவானந்தா என்ற தென்றலுக்கு.

அச்சுவேலி. லாலா சோப் உரிமையாளர். (அ/565917)

---

## கண்ணீர் அஞ்சலி



### பொன்னையா இராமச்சந்திரன்

*(முன்னாள் முகாமையாளர், வலி.கிழக்கு பல.நோ.கூ.சங்கம்)*

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சுவிஸ் வாழ் ஒன்றுவிட்ட சகோதரர்கள்:**
நியாகராசா, இந்திரன், செல்வராஜா, பரஞ்சோதிராசா மற்றும் நண்பர்கள். (95687)

---

## மரண அறிவித்தல்கள்

### *இராமுப்பிள்ளை வேலுப்பிள்ளை (பொன்னம்பலம்)*

காரைநகர், களபூமி, குண்டங்கரையைப் பிறப்பிடமாகவும் விளானையை வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை வேலுப்பிள்ளை நேற்று (18.03.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் கணவரும், தனபாலன், சவுந்தலாம்பிகை ஆகியோரின் பாசமிகு தந்தையும், சின்னம்மா, காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம், ஆறுமுகம், சுப்பிரமணியம் மற்றும் கே.ஆர். கந்தசாமி, கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2010) வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தில்லை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளானை, களபூமி,
காரைநகர். (95672)

தகவல்:
இ.கந்தசாமி (சகோதரர்)

### சின்னப்பு பொன்னுத்துரை

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பு பொன்னுத்துரை நேற்று (18.03.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, பரமேஸ்வரி, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், குணவதியின் அன்புக் கணவரும், குணபாலசிங்கம் (ஜது அச்சக உரிமையாளர்), குணஈஸ்வரன் (காணி நிர்வாகத் திணைக்களம், வடமாகாணம்), குணசீலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பவானி, கஸ்தூரி, பிரசாந்தன் ஆகியோரின் மாமனாரும், ஜதுசா, சர்மினி, அபி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2010) வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டுவன்வீதி,
ஏழாலை வடக்கு, ஏழாலை. (95681)

தகவல்:
குடும்பத்தினர்.

---

சித்தி விநாயகர் துணை

## புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

**SHENTHURIE** MULTI PURPOSE MART
செந்தூரி மல்ரி பேர்ப்பொஸ் மார்ட்
Electronics, Electricals, Fancy Goods, Sale's & Repair
இலத்திரனியல் பொருட்கள், மின்சார உபகரணங்கள், அழகு சாதனப் பொருட்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், விற்பனையாளர்களும், பழுது பார்ப்பவர்களும்.
பிரதான வீதி (இலங்கை வங்கி அருகில்) அச்சுவேலி. Tel: 021 3734131. E-mail :kavinaya20@gmail.com

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விரோதி வருடம் பங்குனி 5ஆம் நாள் இன்று (19.03.2010) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிமுதல் 10.30 மணி வரையான சுப முகூர்த்த வேளையில் எல்லாம்வல்ல சித்திரவேலாயுதரின் திருவருளால்

# SHENTHURIE MULTI PURPOSE MART
# செந்தூரி மல்ரி பேர்ப்பொஸ் மார்ட்

என்னும் புதிய தாபனத்தை இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளை முகாமையாளர் திரு.ரி.புவனேந்திரம் அவர்களினால் திறந்து வைத்து நடத்தவுள்ளோம் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது தாபனத்துக்கு தங்களின் நல் ஆசிகளையும், ஒத்துழைப்புக்களையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்ட 14"- 21"-25", 29" T.V. கள், DVD Players, சலவை இயந்திரம், குளிர்சாதனப்பெட்டிகள், அம்பிளிபயர், Box வகைகள், 2வருட உத்தரவாதத்துடனும், அதிரடி விலைக் கழிவுடனும் எமது ஸ்தாபனதிறப்பு விழாவை முன்னிட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

சுடிதார், சேட்ஸ், ஜீன்ஸ், ஸ்கேட் & பிளவுஸ் வகைகளும் சிங்கப்பூர், சீனா, இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டுள்ளன.

இலத்திரனியல் பொருள்கள், மின்சார உபகரணங்கள், அழகு சாதனப் பொருள்கள், வீட்டுப் பாவனைப் பொருள்கள் விற்பனையாளர்களும், பழுதுபார்ப்பவர்களும்.

உரிமையாளர்:
ந.சிவகுமார்,
ராஜன் எலக்ரோனிக்ஸ்,
வல்லை வீதி, அச்சுவேலி.

*இலங்கை வங்கி அருகில்,*
*பிரதான வீதி, அச்சுவேலி.*

Tel.No: 021 3734131
E.mal: Kavinaya 20@ gmail.com
(95667)

---

## மரண அறிவித்தல்

### தம்பிமுத்து விநாசித்தம்பி



சாவகச்சேரி வடக்கு, கிராம்புவில்லைச் சேர்ந்த தம்பிமுத்து விநாசித்தம்பி நேற்று (18.03.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து-பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை-மாணிக்கம் தம்பதியரின் மருமகனும். காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, சிவகாமி, கார்த்திகேசு, சின்னப்பிள்ளை, ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், Dr.வனஜாராணி (UK), சிவநேசன் (சுவிஸ்), சிறிதரன் (விரிவுரையாளர், வணிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.கதிர்காமவாசன் (UK), கோமகள் (சுவிஸ்), சுதா (சமுர்த்தி முகாமையாளர், கொடிகாமம் சமுர்த்தி வங்கிச் சங்கம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தேவனி (UK), சாகரா, விசேகா, விசாகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப்பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2010) சனிக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1ஆம் கட்டை வீதி.
சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி. (95678)

தகவல்:
சிறிதரன் (மகன்)
தொ.பே.இல: 021 321 4611

---

## நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2010

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு சார்பில் தமிழரசுக்கட்சி பிரமுகர்கள் கலந்துகொள்ளும்

**பொதுக்கூட்டம்**

காலம்: இன்று (19.03.2010) வெள்ளிக்கிழமை பி.ப 4 மணிமுதல்

இடம்: பாரதியார் சனசமூக நிலையம்; தாமரை வீதி, வண்ணார்பண்ணை மேற்கு (ஆறுகால்மடம்), யாழ்ப்பாணம்.

தலைமை: வைத்தியக் கலாநிதி சி.யமுனானந்தா.

உரையாற்றுவோர்: இரா.சம்பந்தன், மாவை.சேனாதிராசா, சுரேஸ்பிரேமச்சந்திரன், அ.விநாயகமூர்த்தி, பேராசிரியர் சிவசந்திரன், சீ.வி.கே.சிவஞானம், ஏ.என்.இராசேந்திரன், எஸ்.குலநாயகம், ஈ.சரவணபவன், சி.சிறீதரன், பொ.ஐங்கரநேசன், ச.அருந்தவபாலன், மு.றெமீடியஸ் மற்றும் வைத்திய கலாநிதி ஜெயகுலராஜா, சுமந்திரன்.

**அனைவரும் அணிதிரளுங்கள் வெற்றியை நமதாக்குங்கள்.**

ஒழுங்கமைப்பு: பேராசிரியர் சிவசந்திரன்






நாமும் வாக்களிப்போம் நம்மவரையும் வாக்களிக்க வைப்போம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஐ.நா.செயலரின் இந்த முயற்சி காலம் பிந்தியாவது பலன் தருமா?

இலங்கையில் இறுதி யுத்த காலத்தில் இடம்பெற்றவை எனக் கருதப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றங்கள் ஆகியவற்றுக்குப் பொறுப்புக் கூறும் விவகாரம் தொடர்பில் தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு நிபுணர் குழு ஒன்றைத் தாம் நியமிக்கின்றமையைத் தாமதப்படுத்தப் போவதில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தியிருக்கின்றார் ஐ.நா.செயலாளர் நாயகம் பான் - கீ - மூன்.

இது விடயத்தில் இலங்கையின் ஆட்சேபனையையும் அணிசேரா அமைப்பின் அதிருப்திக் கருத்தையும் அவர் வெளிப்படையாகவே புறம் தள்ளிவிட்டார் என்பதும் தெளிவு.

தாம் இந்த நிபுணர் குழுவை நியமிப்பதற்குப் பின்புலமாகவிருந்த முக்கிய அம்சத்தையும் செயலாளர் நாயகம் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இலங்கையின் இறுதி யுத்த காலத்தில் - கடந்த ஆண்டு ஜனவரி முதல் மே நடுப்பகுதி வரை - நடைபெற்ற மோசமான யுத்தத்தில் அப்பாவித் தமிழர்களுக்கு எதிராக மிகக் கொடூரமான மனித உரிமை மீறல்களும், கோரமான படுகொலை நடவடிக்கைகளும், யுத்தக் குற்றங்களும் அளவுகணக்கின்றி புரியப்படுகின்றன என்ற குரல் அந்தச் சமயத்தில் பல தரப்பினாலும் எழுப்பப்பட்டது.

அப்பாவிகளுக்கு எதிரான அந்தப் பேரழிவு - நாச - நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு உலக நாடுகளின் பொதுமன்றமான ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச சமூகம் காத்திரமான - ஆக்கபூர்வமான - பங்குபணி ஆற்றவில்லை என்பதும், அந்தக் கொடூரங்கள் நிகழாமல் தடுப்பதற்கான சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்தவில்லை என்பதும் ஈழத் தமிழர் தரப்பின் ஆதங்கமாகவும், விசனமாகவும், சீற்றமாகவும் கூட இருந்து வருகின்றன.

யுத்தக் கொடூரம் பெரும் வன்முறைப் புயலாக ஈழத் தமிழர்கள் மீது கட்டவிழ்ந்த வேளை அதைத் தடுக்கத் திராணியற்று, செயலற்றிருந்த ஐ.நா. செயலர் கூட, யுத்தத்தில் தமிழர்களை வென்று, இறுதி வெற்றியை ஈட்டி விட்டதாக இலங்கை அரசு தன்னைத்தானே மெச்சிக் கொண்டபோது, அந்த வெற்றியை அங்கீகரித்துப் புகழ்வது போல நடந்து கொள்வதற்காக, யுத்தம் முடிந்து, தமிழர் தாயகம் மீதான தனது இராணுவ மேலாதிக்கத்தைக் கொழும்பு அரசு உறுதியாக நிலைநிறுத்தியதும் இலங்கைக்கு 'விசிட்'அடித்தார்.

இலங்கை அரசின் யுத்த வெற்றியை அங்கீகரிப்பதற்காக ஐ.நா.செயலாளர் நாயகம் மேற்கொள்ளும் இலங்கைப் பயணம் எனக் கருதப்பட்ட அந்த விஜயத்தின் போது, தாம் இலங்கை ஜனாதிபதியுடன் சேர்ந்து விடுத்த கூட்டறிக்கையின் அடிப்படையிலேயே இப்போது நிபுணர் குழு அமைக்கும் நடவடிக்கையைத் தாம் முன்னெடுக்கின்றார் என்றும் ஐ.நா.செயலாளர் நாயகம் விளக்கமளித்திருக்கின்றார்.

''நான் நியமிக்கும் குழு, நமது கூட்டு அறிக்கையில் [illegible]க்கப்பட்டபடி - பொறுப்புச் சொல்லும் தன்மைக்கு வழிகாட்டுகின்ற - சர்வதேச அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட - தராதரங்கள், குறிக்கோள்கள், வழியலகுகள் ஆகியன குறித்து எனக்கு ஆலோசனை கூறுவதாக இருக்கும்.

''ஐ.நா.செயலாளர் நாயகம் என்ற முறையில் எனக்கு இத்தகைய ஆலோசனையை அளிக்குமாறு இவ்வாறான குழு ஒன்றை நியமித்துக் கோரும் அதிகாரம் எனக்கு உண்டு. அதை எவரும் மறுக்க முடியாது. இந்த நிபுணர் குழு நேரடியாக என்னிடமே அறிக்கை சமர்ப்பிக்கும். ஆகவே, எனது இந்த நடவடிக்கை எந்த வகையிலும் இலங்கையின் இறைமையை மீறுவதாகக் கூறமுடியாது.'' - என மிகத் தெளிவாகவும், சூடாகவும் பதில் தந்திருக்கின்றார் ஐ.நா. செயலாளர் நாயகம்.

வன்னி யுத்தக் குற்றங்கள், போரின் போதான மோசமான மனித உரிமைகள் மீறல் போன்றவை குறித்து இலங்கை நீதி, நியாயமான விசாரணை ஒன்றைத் தானும் நடத்துவதற்கு முன்வருவதாக இல்லை. பிற தரப்புகளின் விசாரணைக்கும் இடமளிப்பதாகவும் இல்லை.

ஒருபுறம் முப்பதாயிரம் பொதுமக்கள் வரை மோசமாக - கொடூரமாக - கோரமாக - குரூரமாக - படுகொலை செய்யப்பட்டனர் என்று தமிழர் தரப்புச் சீறுகின்றது. ஆனால் கொழும்பு அரசோ ஒருவர் கூட கொல்லப்படவில்லை, ஒரு யுத்தக் குற்றம் கூட இடம்பெறவில்லை என்று வெறுமனே வாயால் பீற்றிக் கொள்கிறது - உண்மையான, நேர்மையான, நீதியான பகிரங்க விசாரணை ஒன்றுக்கு இணங்க மறுத்தபடியே.

அதேவேளை, யுத்தக்குற்றம் ஏதும் இடம்பெறவேயில்லை என்ற தனது அரசியல் பேச்சுகள் மூலமே, தன் மீதான யுத்தக் குற்றங்களை மூடி மறைக்கவும் அது எத்தனிக்கின்றது.

ஆனால் அரசின் இந்தப் பருப்பு இனி சர்வதேசத்திடம் அநேகமாக வேகாது என்பது இப்போதைக்கு ஓரளவுக்கு உறுதியாகி வருகின்றது.

இலங்கை அரசு, அணிசேரா அமைப்பின் அலுவலகம் ஆகியவற்றின் ஆட்சேபனையைப் புறக்கணித்துவிட்டு நிபுணர் குழு நியமிப்பதில் ஒரே உறுதியாக நிற்கும் ஐ.நா. செயலளரின் கூற்று அதனையே வெளிக்காட்டி நிற்கின்றது.

எது, எப்படியென்றாலும் உண்மை அம்பலத்துக்கு வந்து நீதி நிலைநாட்டப்பட்டால்'சரி. ஐ.நா.செயலாளர் நாயகத்தின் காலம் பிந்திய இந்த முயற்சியாவது பலன் தருமா? பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதையை போக்குவரத்துக்கு திறந்து உதவுங்கள்

## ஆளுநரிடம் பூநகரி, ஆசிரியர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 19

கேரதீவு - சங்குப்பிட்டி பாதையை திறந்து பொதுமக்களின் போக்குவரத்து வசதியை இலகுபடுத்துமாறு வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பூநகரிப் பிரதேசத்தில் கடமையாற்றும் ஆசிரியர்கள் ஒரு மணித்தியாலத்தில் செல்ல வேண்டிய பயணத்தைத் தாம் ஏ-9 பாதையூடாக மூன்று மணித்தியாலம் செலவிட்டு, கால நேரத்தை வீணடிக்க நேரிடுவதாக பூநகரிப் பிரதேசத்தில் கடமையாற்றி வரும் ஆசிரியர்கள் ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரிக்கு ஏ-9 வீதியில் பரந்தன் மார்க்கமாக 105 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து நாம் பயணிக்க வேண்டியுள்ளது. கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதை திறக்கப்பட்டால் 30 கிலோமீற்றர் தூரத்தை (ஒரு மணி நேரத்தில்) இலகுவாகப் பயணித்து எமது கடமையைச் சிறப்பாகச் செய்ய முடியும் என்பதை தங்களின் கவனத்துக்கு கொண்டு வருகின்றோம்.

இவற்றைக் கருத்திற்கொண்டு பூநகரிக்கான கடற்பாதையைத் திறந்து அனைவரும் இலகுவாக - குறுகிய நேரத்தில் - பயணிக்க உதவுவீர்கள் என எதிர்பார்க்கின்றோம் என்று ஆசிரியர்கள் தமது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதிக்கும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஒ)

# நிபுணர் குழு நியமிப்பது பற்றிய சர்ச்சை: ஐ.நா. செயலர் - மஹிந்த கூட்டுச் சதியாம்!

## இப்படிச் சந்தேகம் வெளியிடுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, மார்ச் 19

இலங்கை மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றனவா என்று ஆராய்வதற்காக நிபுணர்கள் குழுவொன்று அமைக்கப்படும் என்று ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ-மூன் கூறுவதும் அதை மஹிந்த ராஜபக்ஷ எதிர்ப்பதும் அவர்கள் இருவரும் சேர்ந்து இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தலை அடிப்படையாக வைத்து நடத்தும் சதியோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

யுத்தத்தின் பின்னர் ஐ.நா.சபையுடன் இலங்கை அரசு செய்து கொண்ட ஒப்பந்தத்தை நாட்டுக்கு வெளிப்படுத்தவேண்டும் என்றும் அக்கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவே மேற்கண்ட விடயங்களைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையின் நிலைமை தொடர்பாக ஆராய நிபுணர்கள் குழுவொன்று அமைக்கப்படவேண்டும் என்று ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் கூறுவதும், அதற்கு மஹிந்த ராஜபக்ஷ எதிர்ப்புத் தெரிவிப்பதும் வழமையாகிவிட்டன.

ஆனால், தேர்தல் காலங்களில் மாத்திரம்தான் இப்படியான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. தேர்தல் முடிவுற்றதும் அவை ஓய்ந்துவிடுகின்றன. ஜனாதிபதித் தேர்தலின் போது சர்வதேசம் ஒரு பிரச்சினையைக் கொண்டுவந்தது. தேர்தல் முடிந்ததும் அதன் கதை முடிந்துவிட்டது. இப்போது நாடாளுமன்றத் தேர்தல் சந்தர்ப்பத்தில் மற்றுமொரு பிரச்சினை ஐ.நா. சபையால் கிளப்பப்பட்டுள்ளது.

இவ்வாறு தேர்தல் காலங்களில் சர்வதேசம் இலங்கை தொடர்பாகப் பிரச்சினையைக் கிளப்புவதும் தேர்தல் முடிந்ததும் அதை மூடிவிடுவதும் எமக்குப் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன.

தற்போது பான் கீ-மூன் கிளப்பியிருக்கும் பிரச்சினை கூட மஹிந்த ராஜபக்ஷவும், பான் கீ-மூனும் சேர்ந்து செய்யும் சதியோ என்ற நியாயமான சந்தேகம் எமக்குள் எழுந்துள்ளது.

பான் கீ-மூன் இவ்வாறு கூறுவதற்கும் இலங்கை அரசுதான் காரணம். யுத்தத்தின் பின்னர் ஐ.நா. சபைக்கும், இலங்கை அரசுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை இலங்கை அரசு மீறி செயற்படுவதாலேயே பான் கீ-மூன் இங்குள்ள நிலைமையை ஆராய்வதற்குக் குழு அமைக்கத் திட்டமிட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்த நாட்டு மக்களுக்கும், நாடாளுமன்றத்துக்கும் தெரியாமலேயே இலங்கை அரசு ஐ.நாவுடன் இந்த ஒப்பந்தத்தைச் செய்தது. இதை இலங்கை அரசு நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தவேண்டும். - என்றார்.

# ரணில் குழுவினர் இன்று யாழ்.நகர் வருகின்றனர்

## வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு கோரி தேர்தல் பிரசாரம் செய்யும் பொருட்டு அக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, பொருளாளர் டி.எம். சுவாமிநாதன், ரணிலின் துணைவியார் மைத்ரி விக்கிரமசிங்க ஆகியோர் சகிதம் வரும் ரணில், பிற்பகல் இரண்டு மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றுவார்.

யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து ஊர்வலமாக கூட்டம் நடைபெறும் மண்டபத்துக்கு ரணில் குழுவினர் அழைத்துச் செல்லப்படவிருக்கின்றனர்.

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் அணியினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் பொதுக்கூட்டத்தில் மதத் தலைவர்கள், வர்த்தக சமூகத்தினர், சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள், கடற்றொழில், தென்னை, பனைவள அபிவிருத்தி விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் பிரதிநிதிகள், அரச தனியார் ஊழியர் சங்கப்பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஒன்றியப் பிரதிநிதிகள், வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர், தனியார் போக்குவரத்துச் சங்க பிரதிநிதிகள், தேச நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஒ-1)

# தினமும் ஏழு ஆயிரம் போத்தல் கள் நிலத்தில் ஊற்றப்படும் அவலம்

## கொடிகாமம் சங்க தொழிலாளர்கள் பாதிப்பு

நல்லூர், மார்ச் 19

கொடிகாமம் பகுதியில் தினமும் 7,000 போத்தல் கள் நிலத்தில் ஊற்றப்படுவதாகவும் தொழிலாளர்கள் இதனால் பாதிக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

கொடிகாமம் பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தில் மொத்தம் உள்ள 22 கள் விற்பனை நிலையங்களில் 10 விற்பனை நிலையங்கள் மட்டுமே இயங்கி வருவதாகவும்-

ஏனைய 12 கிளைகளும் இயங்கும் பட்சத்தில் நிலத்தில் ஊற்றப்படும் கள்ளை விற்பனை செய்யக் கூடியதாக இருக்கும் எனவும் - சீவல் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பெருந்தொகையான கள் நிலத்தில் ஊற்றப்படுவதால் தொழிலாளர்கள் கணிசமான வருமானத்தை இழக்கின்றனர் - என்றும் தெரிவிக்கப்படுகிறது (ஒ-1-111)

## நல்லூர் கோட்ட தமிழ்த்தினப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 19

நல்லூர் கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள போட்டியாளர்களை அனுப்பி வைக்குமாறு சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களை நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (1-10)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 06 | 20.03.2010 |
| | சனிக்கிழமை |
| திதி: | பஞ்சமி |
| | பி.இ. 04.43 வரை |
| நட்சத்திரம்: | பரணி |
| | மு.ப. 11.24 வரை |
| சுபநேரம்: | 03.18-04.48 வரை |
| ராகுகாலம்: | 09.18-10.48 வரை |
| | கார்த்திகை விரதம் |

# யாழ். தேர்தல் மாவட்டத்திற்கு ஒரு அடி 8 அங்குல நீளமான வாக்குச் சீட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற தேர்தல் வாக்களிப்பின் போது ஒரு அடி எட்டு அங்குல நீளமான வாக்குச் சீட்டு பயன்படுத்தப்படும்.

அதற்கான நடவடிக்கையை தேர்தல் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் முறை 15 அரசியல் கட்சிகளும் 12 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. இதன்காரணமாகவே ஒரு அடி 8 அங்குலமான வாக்குச் சீட்டு பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஒ-1-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 503
சீட்டிழுப்பு திகதி: 17.03.2010

வெற்றி எழுத்து: F வெற்றி இலக்கங்கள்: 19 47 56 59

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 12,600,758.40 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 09 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 202 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 418 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 10375 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 50/- | 5922 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 149734 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 30/- | 23984 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 7,319,800.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க விசேட்ட திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தொலைநகல் 4607000, 2433631
இணையத்தளம்:www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.12,768,423.20



சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2105 திகதி 17-03-2010

ஆங்கில எழுத்திற்கும் W
வெற்றி எண்கள்
21 36 40 68
போனஸ் இல: 67

ஜக்பொட் பரிசு ரூ. 11,951,625/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 182048 | 20/- | 3,640,960/- |
| 2 இல | 12988 | 100/- | 1,298,800/- |
| 3 இல | 282 | 1,000/- | 282,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7311 | 40/- | 292,440/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 477 | 1,000/- | 477,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 03 | 10,000/- | 30,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 11,951,625/- | - |
| 1 இல + போனஸ் இல | 8730 | 100/- | 873,000/- |
| 2 இல + போனஸ் இல | 418 | 500/- | 209,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 310 | 200/- | 62,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 09 | 1,500/- | 13,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| மொத்தம் | | | 8,728,700/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 212592 | | 9,328,700/- |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - L.A. சுபசிங்க - இப்பாகமுவ.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - W.A. விதுர சஞ்சீவ - பிடபந்தர.

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| குருணாகல் | 201716048-1-20 |
| கொழும்பு | 201732629-3-01 |
| மொணராகலை | 201717779-0-45 |
| கம்பஹா | 201719859-9-25 |
| வவுனியா | 201727550-0-38 |
| மாத்தளை | 201720563-2-15 |
| மாத்தறை | 201718581-3-46 |
| கண்டி | 201722136-9-14 |
| கேகாலை | 201732081-9-23 |
| அம்பாந்தோட்டை | 201729065-3-38 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ.12,448,300/-

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை


## மூத்த பிரஜைகள் கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம்,மார்ச் 19

யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவையினால் மூத்த பிரஜைகளை வாழ்த்திப் பாராட்டும் நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு மானிப்பாய் 'சாந்திமாலா' இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 25 ஆண்டுகள் சமூக சேவைகள் செய்த 80ஆவது அகவையை நிறைவு செய்யும் லயன் வல்லிபுரம் பரமசிவம் (ஜே.பி), 78ஆவது அகவையை நிறைவு செய்யும் லயன் சீமாட்டி சரஸ்வதி பரமசிவம் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (50-06-201)

## டிராக்டர் மோதி ஒருவர் பலி!

யாழ்ப்பாணம்,மார்ச் 19

லொறியில் மண் ஏற்றிக் கொண்டு நின்றவரை டிராக்டர் மோதியதில் அவர் பலியானார்.

இச்சம்பவம் குடத்தனை 6ஆம் கட்டைப் பகுதியில் நேற்றுக்காலை 8.30 மணிக்கு இடம்பெற்றது. சம்பவத்தில் வன்னியிலிருந்து மீளக்குடியேறியிருந்த கே.வரதராஜா (வயது 32) என்பவரே பலியானவராவார். (6-78)

## சாவகச்சேரி நகரசபை முகாமைத்துவ போட்டியில் இரண்டாம் இடம்

யாழ்ப்பாணம்,மார்ச் 19

வடக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் உள்ளூராட்சி சபைகளிடையே நடத்தப்பட்ட 2005, 2006 ஆகிய ஆண்டுகளுக்கான முகாமைத்துவப் போட்டியில் சாவகச்சேரி நகரசபை இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

## தொடர் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,மார்ச் 19

பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு பண்ணாகம் அண்ணா கலைமன்றம் நடத்தும் தெய்வீகத் தொடர் சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெறவுள்ளது.

'திருவிளையாடற்புராணம்' என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் இந்தச் சொற்பொழிவு தினமும் மாலை 6 மணிக்கு நடைபெறும். (209)


காணி, வீடு விற்பனைக்கு

கொழும்பு, தெஹிவளையில் தொடர் மாடிக் கட்டடத்தில் அமைந்துள்ள 30 வீடுகள் 60 லட்சத்தில் இருந்து விற்பனைக்குண்டு.

தொடர்பு: Alconn Construction (Private) Limited,
34, 3 rd Floor, Galle Rd, Dehiwala, SriLanka.
Tel - 0094-77-3028400
Web - www.alconn constructions.com
E-mail - ceo@alconnconstructions.com
(95902)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19 ★ 11 ★ 1946

மறைவு 02 ★ 04 ★ 2006

**அமரர் செல்வராசா சரஸ்வதி**

திதி: சதுர்த்தி (19.03.2010)

நான்கு ஆண்டுகள் போனதம்மா
ஆறவில்லை உம் துயரம்
அவனியில் உன் அரவணைப்பின்றி
அல்லல்படுகின்றோம் அறியாயோ நீ
உன் ஆத்மா சாந்தியடைய தினம்
தினம் பிரார்த்திக்கின்றோம் அம்மா.

108/9, கச்சேரி - நல்லூர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (95663)

பாசநினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 25 ★ 07 ★ 1976

உதிர்வு 30 ★ 03 ★ 2009

**தசக்கிரீபன் சுபாசினி**

திதி:சதுர்த்தி

அன்பின் பிறப்பிடமாய்
அறிவின் திருவுருவாய்
பொறுமையின் ஆழ் கடலாய்
எம்மை அரவணைத்து ஆளாக்கி
எம்மை விட்டுப் பிரிந்து
ஓராண்டு சென்றதுவோ?
எம்மால் நம்ப முடியவில்லை
ஆனாலும் இயற்கையின் நியதியை
ஏற்றுக் கொண்டு உங்கள்
ஆத்மா ஆண்டவன் திருவடியை
பூவாக சென்றாயினும்
சாந்தியடையப் பிரார்த்திக்கும்

175, சிவன்பண்ணை வீதி,
கொக்குவில் யாழ்ப்பாணம். (சி/565914)

குடும்பத்தினர்.


B.Sc (Hons) - பிரிவு - ii ஆரம்பம்!!

B.Sc (Hons) in Multimedia - First Year in Jaffna
(உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிகூடிய வேலை வாய்ப்பை பெற்றுத்தரும் சர்வதேசக் கற்கை நெறி)
முதல் வருடம் எமது நிறுவனத்தில் கற்று 2nd & 3rd Year U.K , NEW ZEALAND, NETHERLAND , AUSTRALIA , MALTA ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் பகுதி நேர வேலை வாய்ப்புடன் தொடர முடியும்.
(Visa மற்றும் Part time Job அனைத்தும் எம்மால் செய்து தரப்படும்)

எமது நிறுவனத்தில் முதல் வருடம் இக் கற்கைநெறியை கற்று தற்பொழுது New Zealand & UK நாடுகளில் பகுதி நேர வேலை வாய்ப்புடன் உள்ள எமது யாழ்ப்பாணத்தை சேர்ந்த மாணவர்கள் சிலர்:-




(100% Visa உத்தரவாதம்)
நூற்றுக்கணக்கான மாணவர்கள் பயணித்த வெற்றிப்பாதையில் நீங்களும் இணையுங்கள் !!!

வகுப்பு ஆரம்பம் :- 20/03/2010
நேரம் :- காலை 10 மணி

மேலதிக விபரங்களுக்கு :- UNI & NOTTINGHAM COLLEGE OF LONDON
ICT CAMPUS
No :- 83, Palaly Road, Kantharmadam, Jaffna. T.P :- 021 321 6433 / 0777 110 862


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்புரத்தில் ஒரு மில்லியன் ரூபா செலவில் நவீன சந்தைக் கட்டடத் தொகுதி

## 'வேல்ட் விஷன்' வதிவிடப் பணிப்பாளர் திறந்து வைத்தார்

யாழ்ப்பாணம், மார்ச் 19

தொல்புரம் மத்தியில் ஒரு மில்லியன் ரூபா செலவில் நவீன சந்தை கட்டடத் தொகுதி நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

தொல்புரம் மத்தி ச.ச.நிலைய் தலைவர் தலைமையில் திறப்புவிழா இடம் பெற்றது.

'வேல்ட்விஷன்' நிறுவனத்தின் இலங்கை வதிவிடப் பணிப்பாளர் சுரேஷ் பாட்லர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, கட்டடத்தை திறந்து வைத்தார்.

வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி, கிராம அதிகாரிக.கணேசலிங்கம், தொழில்நுட்ப அதிகாரி சி.புவேந்திரன், தொழில்நுட்ப அதிகாரி ரி.ஞானேந்திரன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட 'வேல்ட் விஷன்' வதிவிடப் பணிப்பாளர் சுரேஷ் பாட்லர் கட்டடத் தொகுதியை நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

'வேல்ட் விஷன்' நிறுவனம் கடந்த 30 ஆண்டு காலத்தில் 350 மில்லியன் ரூபாவை யாழ்.மாவட்டத்தில் செலவழித்ததாகவும் விரைவில் சிறுவர் நல அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்கவுள்ளதாகவும் சுரேஷ் பாட்லர் தெரிவித்தார்.

இறுதியில் சந்தை தொடர்பான உட்கட்டுமான அபிவிருத்தியில் சிறப்பாக செயற்பட்டவர்களுக்கான பரிசில்களை பிரதேசசபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி, 'வேல்ட் விஷன்' வதிவிட பிரதிநிதி சுரேஷ் பாட்லர் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

'வேல்ட் விஷன்' நிறுவன சார்பில் க.இக்னேசியஸ், கி.வசந்தன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (50-302)

# 'ஹட்ச்' தொலைத் தொடர்பு நிறுவனத்தின் கோபுரங்கள் விரைவில் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,மார்ச் 19

'ஹட்ச்' தொலைத் தொடர்பு நிறுவனம் யாழ். மாவட்டத்தில் 10 இடங்களில் தொலைபேசிக் கோபுரங்களை விரைவில் அமைத்துச் செயற்படவுள்ளது. அதன் மூலம் பாவனையாளர் வினைத்திறனான சேவையை பெறுவர்.

இவ்வாறு 'ஹட்ச்' தொலைத் தொடர்பு நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளர் துசித. டி.சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வடக்கிற்கான பாரிய 100 அடி அளவிலான 'ஹட்ச்' தொலைபேசிக் கோபுரம் கொடிகாமம் பகுதியில் அமையும்.

இதனையடுத்து 70 அடி உயரமான கோபுரங்கள் புலோலி, உடுப்பிட்டி, சிறுப்பிட்டி, நல்லூர், கோண்டாவில், சுழிபுரம் பகுதிகளில் அமையும்.

இதனைவிட மானிப்பாய், சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் சிறிய கோபுரங்கள் அமைக்கப்படும் - என்றார். (50-302)

# கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தொழிற் பயிற்சி நிலையம் திறப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 19

மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பினால் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்பயிற்சி நிலையம் நீர்வேலி தெற்கு பூதர்மடம் வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிலையத்தின் ஊடாக இப்பகுதி இளைஞர் மற்றும் யுவதிகளுக்குத் தொழிற்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (50-224)




## நாகேஸ்வரத்தில் ஸ்ரீராம நவமி பூஜை

வண்ணை,மார்ச் 19

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை ஸ்ரீராமநவமி பூஜை சிறப்பாக நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையுடன் பூஜை ஆரம்பமாகும். 9 மணிக்கு சிறப்பு சமயச் சொற்பொழிவு நடைபெறும். தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெற்று ஸ்ரீராமசுவாமி சீதாப்பிராட்டி சகிதம் வீதியுலா எழுந்தருள்வார். (ஒ-160)

## அரச அலுவலர்களுக்கான ஆக்கத்திறன் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 19

அரச அலுவலர்களுக்கு இவ்வருட ஆக்கத்திறன் போட்டிகள் கலாசார அலுவலர்கள் மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சினால் நடத்துவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பாடல், கவிதை, சிறுகதை, சிறுவர் கதை, குறுநாடகம்,சித்திரம் ஆகிய போட்டிகளுக்கு அரச அலுவலர்கள் விண்ணப்பிக்கலாம்.

தென்மராட்சிப் பிரதேச அரச அலுவலர்கள் தமது ஆக்கங்களை எதிர்வரும் மே 20 ஆம் திகதிக்கு முன்னர் நிறுவனத் தலைவர் ஊடாக பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (ஒ-207)

## நெடுந்தீவு-குறிகாட்டுவான் சேவைக்கு புதிய படகு விரைவில் வரும்

நெடுந்தீவு, மார்ச் 19

நெடுந்தீவு-குறிகாட்டுவான் படகுச் சேவையில் ஈடுபடுவதற்கு புதிய படகொன்று விரைவில் கொண்டு வரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இச்சேவையில் ஈடுபடும் குமுதினிப் படகு திருத்த வேலைகளுக்காக காரைநகர் நீலங்காட்டுக்கு கொண்டு செல்லப்படும் எனக் கூறப்பட்டபோதும் தொடர்ந்தும் அது நெடுந்தீவு துறைமுகத்திலேயே நங்கூரமிட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (50-6-111)

## சின்னப்பொடி வேலுவின் 40 ஆவது சிரார்த்த தினம்

சாவகச்சேரி, மார்ச் 19

இலங்கை போக்குவரத்துச் சபையின் சிறந்த சாரதியும், தொழிற் சங்கத்தின் தலைவராகவும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினருமான மறைந்த கொடிகாமம் ஐயா அண்ணன் என அழைக்கப்படும் அமரர் சின்னப்பொடி-வேலுவின் 40 ஆவது சிரார்த்த தினம் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொடிகாமம் பொதுச்சந்தை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

## அஞ்சல் அலுவலகங்களில் விற்பனை நிலையங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்.குடாநாட்டில் உள்ள சகல அஞ்சல் அலுவலகங்களிலும் விற்பனை நிலையங்களைத் திறப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தில் இந்த விற்பனை நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளதாக யாழ். பிரதம தபாலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விற்பனை நிலையங்களில் தபால் உறைகள், முத்திரைகள், கல்வி உபகரணங்கள் என்பன விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (50-6-224)

# வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு உளவள ஆற்றுப்படுத்தல் மிகவும் அவசியம்

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 19

கடந்தகால யுத்த அனர்த்தத்தின்போது வன்னிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்.மாவட்டத்தில் மீளவும் குடியமர்ந்துள்ள மாணவர்களுக்கு பாடசாலை மட்டத்தில் உளவள ஆற்றுப்படுத்தல் வழங்க வேண்டிய தேவை உணர்ந்தறியப்பட்டுள்ளது.

அதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு எமது கல்விச் சமூகத்துக்கு உதவிகளை வழங்க முன் வாருங்கள்.


இவ்வாறு ஜேர்மனிய பிரெட்றிக் ஈபேர்ட் மன்றத்தின் வதிவிட பிரதிநிதி யோக்கிம் ஸ்லூற்றர்க்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் சுட்டிக்காட்டப்பட்டது.


யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் கல்விச் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் த.மகாசிவம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சுட்டிக்காட்டப்பட்ட ஏனைய விடயங்கள் வருமாறு:-

* இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த பாட சாலை மாணவர்களின் நலனைக் கருத்தில் கொள்வதற்கென யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் இதுவரை எவ்வித விசேட பிரிவும் ஏற்படுத்தப்படவில்லை.
* அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களால் பாடசாலை மாணவர்களுக்கு என வழங்கப்படும் உதவிகள் போதுமானவையல்ல என்பது மட்டுமன்றி அவை உரிய முறையில் ஒருங்கிணைக்கப்பட்டு வழங்கப்படுவதுமில்லை.
* வன்னிப் பகுதியிலிருந்து மீளக் குடியமர்ந்த மாணவர்களில் அதிக எண்ணிக்கையானோர் தமது உடல் அவயவங்களை இழந்துள்ளனர். அது மட்டுமன்றி அவர்களின் உடம்பில் குண்டுச் சிதறல்கள் இன்னமும் இருக்கின்றன. இவர்களுக்கென விசேட தளபாட வசதிகள் மற்றும் மலசல கூட வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.
* பாடசாலை நேரங்களில் வெளி நிகழ்வுகள் பாடசாலையில் இடம்பெற்று வருகின்றன. இதனால் பாடசாலை மாணவர்கள் தமது கல்விச் செயற்பாட்டை முன்னெடுப்பதில் சிரமங்கள் உள்ளன.
* தகவல் தொடர்பாடல் கல்வி வழங்குவதற்குத் தேவையான வளங்கள் ஏற்படுத்தித் தரவேண்டும்.
* வெளி நிகழ்வுகளுக்கும், அரசியல் சார் நிகழ்வுகளுக்கும் பாடசாலை மாணவர்களை அழைத்து நிகழ்வுகளை அலங்கரிக்கும் செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமுள்ளன.
* கிராமப்புறப் பாடசாலைகள் உள்ளிட்ட அனைத்து பாடசாலைகளிலும் தளபாடப் பற்றாக்குறை உள்ளது. அத்துடன் சில பாடங்களுக்கு நிரந்தரமான ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.
* பாடசாலை மாணவர்களுக்கென சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத் துச் சபையின் பேருந்து சேவைகள் போதுமானதாக இல்லை. ஆசிரியர்களில் சிலர் கடந்த காலங்களில் இனந்தெரியாத நபர்களினால் அச்சுறுத்தப்பட்ட மற்றும் கொல்லப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரெட்றிக் ஈபேர்ட் மன்றத்தின் திட்ட இணைப்பாளர் எ.எம்.எச். மொகமெட்டும் கலந்து கொண்டார். (50-14)





யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற "ஆறுதல்" உளவியல் சஞ்சிகையின் அறிமுக விழாவில் தேசிய கல்வியியற் கல்லூரியின் அதிபர் எஸ்.கே.யோகநாதன் தலைமையுரை ஆற்றுவதையும், ஆறுதல் நிறுவனத்தின் இணைப்பாளரும் முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளருமான சுந்தரம் டிவகலாலா ஆறுதல் சஞ்சிகையை கல்வியியற் கல்லூரியின் பதிவாளர் எஸ்.சிவநாதனுக்கு வழங்குவதையும் படங்களில் காணலாம்.
*(படங்கள்: அச்சுவேலிச் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகி அறக்கொ
# சொர்ணாம்பி
# திறப்பு விழாச் சிற

## ஏழையின் சிரிப்பில் இறைவனைக் க

## தியாக தீபம்- தியாகேந்திரன்



நாம் வாழும் பூமிப் பந்து உருவாகிய காலத்தில் இருந்து இன்றுவரை இப்புவியில் பல கோடிக் கணக்கான மக்கள் பிறந்து வாழ்ந் திருக்கின்றார்கள். இவர்களில் வாழ்வியற் துன்பங்களால் வருத்தப்பட்டு துன்பப்பட்டு நிற்கும் மக்கள் மனங்கள் மகிழ வேண்டும் என்று தமது நேரத்தையும் பொருளாதாரத்தை யும் செலவிட்டு வாழ்ந்த மகான்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே வாழ்ந்திருக்கின்றார்கள். இவர்களில் ஒருவராக திகழ்பவர் தான் இலங்கை உட்பட உலகின் பல நாடுகளிலும் வாழும் வாழ்வாதாரம் குறைந்த மக்களாலும் ஏனையோராலும் அன்பாக அழைக்கப்படும் தியாகி என்ற தியாகேந்திரன் ஆவார்.

தமிழுக்கும் சைவத்திற்கும் பெருமை சேர்த்த நாவலர் பெருமான் அவர்கள் வாழ்ந்த நாவலர் வீதி, அத்தியடியைப் பிறப்பிடமாகக் கொண்டு வாழ்ந்த தியாகி அவர்கள், 1951ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 2ஆம் திகதி பிறந் தார். யாழ்.பரியோவான் கல்லூரியிலும், யாழ்.மத்திய கல்லூரியிலும் தனது கல்வியைக் கற்று முடித்தார். கல்வியை முடித்த பின்னர் பல நாடுகளின் கப்பல்களில் பணியாற்றினார். 1981 இல் திருமணம் முடித்துக் கொண்ட இவர், 1984ஆம் ஆண்டு குடும்பமாக சுவிற்சர்லாந்து நாட்டில் குடியேறி தொழில்புரிந்து வந்தார்.

சுவிற்சர்லாந்து நாட்டில் இரண்டு பெண் குழந்தைகளை மருத்துவராகவும் அருமை மகனை வர்த்தகத் துறையிலும் வளர்த்து விட்ட இவர், தனது உழைப்பின் பெரும் பகுதியை யுத்தத்தினால் சிதைந்து போன மனங்களைக் கொண்ட மக்களுக்கும் இலங்கை உட்பட இந்தியா வின் தமிழ் நாடு மற்றும் ஏனைய சில மாநிலங்களின் வறியவர்களுக்கும் இவரது உதவிகள் சென்றடைந்து வாழ்வுயர்வு பெற்றிருப்பது அறியக் கூடியதாக உள்ளது.

தியாகி அவர்களின் பிறப்போடு ஞான வைரவரின் சக்தி இரத்த கலங்களோடு சேர்ந்து இயங்கும் மகிமையை நான் அவதானித்தேன். அவர் எதை நினைக்கிறாரோ அவை செயல் வடிவம் பெறுகின்றன. அவர்கரம் பட்டு உதவி பெறுபவர்கள் உயர்வடைகிறார்கள். இது மனிதப் பிறப்பில் சிலருக்கு மட்டுமே கடவுளால் கொடுக்கப்படும் அபூர்வ வரம் என்றால் யாரும் மறுக்க முடியாது.

சிறிய வயதில் இருந்தே அல்லற்படும் மக்களின்பால் இரக்கம் கொண்டவராக வாழ்ந்த தியாகேந்திரன் அவர்கள், தனது சொந்த உழைப்பு நிதி கிடைத்தபோது மற்றவர்கள் எவருக்கும் தெரியாது அல்லற்படும் மக்களுக்கு உதவி செய்ய எடுத்த தீர்மானம் ஆனது பல ஆயிரம் மக்களின் வாழ்வாதாரத்தை இந்த அளவுக்கு உயர்த்தும் என்று அவர் அன்று எண்ணிப் பார்த்திருக்கவே மாட்டார்.

மாபெரும் கொடைவள்ளல் கர்ணனைப் போல் ''வலது கை கொடுப்பதனை இடது கை அறியாது''. 1989ஆம் ஆண்டு தொடக்கம் சுவிஸ் நாட் டில் இருந்தவாறே இங்குள்ள அல்லற்படும் மக்களை இனங்கண்டு உதவிகளைப் புரிந்து வந்தார். இதனால் திருமணம் இன்றி இருந்த பல ஏழைகள் வாழ்வு பெற்றதுடன் மருந்துக்கு காசு இன்றி இருந்த பலர் சுகவாழ்வு பெற்றனர்.

2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தியாகேந்திரன் அவர்கள் தான் பிறந்து வளர்ந்து கல்விகற்ற யாழ்ப்பாண மண்ணில் நீண்டகாலத்தின் பின்னர் காலடி எடுத்து வைத்தார். கொடிய யுத்தத்தினால் சின்னாபின்னமான கட்டடங்களையும், அதனிடையே அகப்பட்டு வாழ்விழந்த, சுகமிழந்த மக்களையும் கண்டு மனமுருகினார்.

ஞானவைரவரின் சக்தி,அவருக்கு ஒரு புதிய உந்து சக்தியைக் கொடுத்தது. தனித்தனியாக என்னால் செய்யப்படும் உதவியை, ஒரு நிறுவனமயப் படுத்துவதன் மூலம் சரியான வழியிலும் உரியவர்களுக்கு உரிய நேரத்தில் தொடர்ந்தேர்ச்சியாக கிடைக்கக் கூடிய வழி ஏற்படும் என்ற எண்ணத்தைக் கருவாகக் கொண்டு 2002 ஆம் ஆண்டு பல புத்திஜீவிகளின் ஆலோசனையுடன் தியாகி அறக்கொடை நிறுவனம் என்ற பெயரில் இல.527,நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் இயக்குநர் சபையில் 8 அங்கத்தவர்கள் அங்கம் வகிப்பதுடன் அங்கத்தவர்கள் அடிமட்டத்திலிருந்து செயற்திட்டங்களைப் பெற்று ஆய்வு செய்து செயற்படுத்தும் செயற் திட்டமாக மாற்றி செயற்படுத்துகின்றன. இதன் தலைவராக இருக்கின்ற தியாகி அவர்களின் அனுமதியுடன் பணிப்பாளராகக் கடமையாற்றி வரும் திரு.சொ.கமலநாதன் அவர்களின் வழிகாட்டலில் சிறப்பாக கடந்த ஏழு ஆண்டுகளாக தியாகி அறக்கொடை நிலைய செயற் பாடுகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

### இந்நிறுவனத்தின் நோக்கக்கூற்று

கல்வி கற்பதற்கான வசதிகள் இன்றி கஸ்ரப்பட்டவர்களாக விளங்கும் மாணவர்களை இனம் கண்டு நன்கு படித்தவர்களாக மாற்றுவதுடன் ஆண்துணை இன்றி பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதும் ஆகும்.

### பணிக்கூற்று

★கஸ்ர நிலையிலுள்ள மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவியளித்தல்.

ஆண்கள் இல்லாத பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் தேவை, ஆரோக்கியம், வருமானத்தை உருவாக்கும் செயற்பாடுகள், வாழ்க்கைத் தரத்தை அபிவிருத்தி செய்தல்.

★கை, கால் வழங்காதவர்களினதும் விஷேட தேவை உடையவர்களினதும் தேவையை இனங்கண்டு தேவையறிந்து உதவி செய்தல்.

★மனித வளங்களை அபிவிருத்தி செய்வதுடன் விஷேடமாக வலுவிழந்த குழுக்களுக்கு வருமானம் தரக்கூடிய செயற்பாடுகளில் பயிற்சியளித்தலும் தொழில் வழங்கலும்.

★தாய் தந்தையர்களை இழந்து ஆதரவற்றிருக்கும் பிள்ளைகளின் கல்வி, சுகாதரம், வாழ்வாதார மேம்பாடுகளை உயர்த்துதல்.

★தொடர் சுயசெயற்பாட்டுக்கான வருமானம்தரும் செயற்திட்டங்களை முன்னெடுத்தல்.

தியாகி அறக்கொடை நிலையச் செயற்பாடுகள் இனம், மதம், மொழி என்பனவற்றைக் கடந்து மனித நேயத்திற்கு மட்டும் முக்கியத்துவம் அளித்து செயற்பட்டுவருவது கல்வியியலாளர்களாலும், மற்றவர்களா... உள்ளது.

தியாகி அவர்கள் இலங்கையின் யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்டவராக இருந்தபோதும் தன் ன... தமிழ் நாட்டின் ஒருதொகை ஏழைச் சிறார்களுக்கும், ஆந்திராவின் ஒரு தொகை ஏழைச் சிறார்களுக்கும் அன்னார் அவர்களால் என்றும் மறக்க முடி யாததாகும்.

பிரதேச மொழி, இனவாதங்கள், மதவாதங்களால் சின்னாபின்னமாக்கப்பட்டுக் கொண்டி...ம் எம் மனித... தியாகி அவர்கள் இவை யாவற்றையும் கடந்து மனிதனின் மனிதத்துக்கு மட்டும் மதிப்புக் கொடுத்து தனது சொந்த உ... சகல இன மக்களின், சகல சமய மக்களின் உதவி தேவைப்படும் மக்களுக்காக செலவு செய்து வாழ்வாதாரத்தினை... டிருப்பது என்பது எம்மால் பல கோடி முறை சிந்தித்து விடைகாணப்பட வேண் டிய விடயமாக உள்ளது.

இவர் தனது மனிதநேயக் கொடையினை ஆரம்பித்த 2003- 2004 ஆம் காலத்தில் வடமாகாணம், மேல் மாகாணம், மலையகம் உட்பட்ட இலங்கையின் பல்வேறு பாகங்களின் தம் தொண்டர்கள் மூலம் இனங் கண்ட வாழ்வாதாரம் தேவைப்பட்ட தமிழ், முஸ்லிம், சிங்கள மாணவர்கள் இனங்காணப்பட்டு, கல்வி மேம் பாட்டுக்கான உதவிகள் இவரால் வழங்கப்பட்டுள்ளமை சிறப்பிடம் வகிப்பதாக உள்ளது. இத்தகைய உதவிகளை அன்றைய காலத்தில் 3000 இற்கும் மேற்பட்டவர்கள் அவரது உதவிகளைப் பெற்றுக்கொண்டனர்.

தியாகி அவர்களின் சமூக மேம்பாட்டுச் செயற்றிட்டங்களில் முக்கியமான சில எடுத்துக்காட்டப்படவேண் டியன. அந்த வகையில் கீழ்வருவன முக்கியம் பெறுகின்றன.

★ஆரம்பத்தில் யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் அதிபர்களினால் தெரிவு செய்யப்பட்ட கல்விக்கு உதவிதேவைப்படும் வறிய மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையாக ரூபா 250 மாதாந்தம் வழங்கப்பட்டு வந்ததுடன், தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

★யாழ்.குடாநாட்டின் 139 குடும்பங்களின் வாழ்வாதார உயர்வுக்காக மாதாந்தம் ரூபா 500 வழங்கப்பட்டு வந்ததுடன், இன்னும் அதிகரித்த நிலையில் தற்போது தொடர் செயற்றிட்டமாக உள்ளது.

★ பொறுப்பான காரணங்கள் இன்றிச் சிறையில் வாடும் குடும்பத் தலைவர்களின் குடும்பங்களுக்கு மாதாந்தம் ரூபா 500 வழங்கப்பட்டதுடன், தொடர்ந்தும் புதியவர்கள் இணைக்கப்பட்டு வருகின்றனர். ஆரம்பத்தில் 11 குடும்பங்கள் இணைக்கப்பட்டிருந்தன.

★ கல்வி அபிவிருத்தியின் ஒரு அங்கமாக விளங்கும் நூலகங்களுக்கு பல்லாயிரம் ரூபா பெறுமதி யான புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

★ நலிவுற்ற குடும்பங்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு மாதாந்தம் ரூபா 500 வழங்கப்பட் டுள்ளது குறிப்பிடத்தக்கது.

★அன்னார் கல்வி கற்ற பரியோவான் கல்லூரியின் ரெனிஸ் விளையாட்டுத் திடல் உருவாக்க...திற்காக ரூபா 100 ஆயிரம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

★2004ஆம் ஆண்டு சுயதொழிற் கடனாக ரூபா 17 லட்சம் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்டு ஊக்கு விக்கப்பட்டது.

★ சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கச்சாய்க் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கான காணிக் கொள்வனவிற்காக தியாகி அவர்களினால் ரூபா 10,000 அன்பளிப்புச் செய் யப்பட்டுக் காணிக் கொள்வனவு செய்யப்பட்டது.

**இல.527, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள
தியாகி அறக்கொடை நிறுவன வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்க...
சொர்ணாம்பிகை மண்டபத்தை இன்று(19.03.2010) வெள்ளிக்கி...
பி.ப.2 மணிக்கு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேத...
திறந்து வைக்கிறார். இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

★ கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் நலிவுற்ற மக்களின் சுயதொழில் செய்கைக்காக ரூபா 10 லட்சம்அன்பளிப்பினை தியாகி அறக்கொடை நிலையம் வழங்கியது மறக்க முடியாத தொண் டாகும்.

★மலையகத்தில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட, 100 பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்பட்டது.

★ 2003ஆம் ஆண்டு தரம் 5 இல் கல்வி கற்று வந்த 125 தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு மாதாந்தம் ரூபா 200 வீதம் வழங்கப்பட்டு வந்ததுடன், இத்தொகை அவர்களின் உயர்கல்வி நிறை வடையும் வரை வழங்கப்பட்டு வருகின்றது.

★ மகரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் ஆதரவற்ற நோயாளிகள் 40 பேருக்கு மாதாந்தம் ரூபா 400 வழங்கப்பட்டது. தொடர்ந்தும் இத் திட்டத்தில் சிலர் உள்ளனர்.

★ மாணவர்களுக்கும், பாடசாலையை விட்டு விலகியவர்களுக்குமான இலவச ஆங்கிலக் கல்வி புகுத்தப்பட்டு வருகின்றது.

★ பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர முடியாத வறிய மாணவர்களுக்கான உதவிகள் செயற் படுத்தப் பட்டு வருகின்றது.

★ மிக மிக வசதி குறைந்த பாடசாலைகளில் கடமையாற்றிவரும் தொண்டர் ஆசிரியர்களுக்கு மாதாந்த உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

★ மிக மிக பின்தங்கிய கிராமங்களின் மருத்துவ முகாங்கள் நடத்தி, மக்களின் ஆரோக்கியம் பேணப் பட்டு வருகின்றது.

★ தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஆரோக்கியம் குறைந்த மாணவர்கள் இனங்காணப்பட்டு, சத்துணவு வழங்கப்பட்டு வந்தது.

★ புற்றுநோய், இதயமாற்றுச் சிகிச்சை, சிறுநீரக மாற்றுச் சிகிச்சை தேவைப்படும் நோயாளர்களுக்கு சிகிச்சை பெறுவதற்காக கொழும்பு சென்று திரும்பி வருவதற்கான பிரயாணச் செலவுகளை இந்நிறுவனம் யாழ்.குடாநாட்டின் வறுமையான குடும்பங்கள் சிலவற்றுக்கு வழங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இன அடையாளங்களை அழிக்கும் முயற்சிகள் மும்முரம்; தமிழர்கள் இப்போதே விழிப்படையாவிடில் பேராபத்து!

*தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட வேட்பாளராக போட்டியிடும் யாழ் நகர முன்னாள் ஆணையாளரான சி.வி.கே சிவஞானம் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தலைவராகவும் இருந்தவர். ஈழவிடுதலைப் போராட்டத்தில் பல்வேறு பணிகளை செய்ததுடன் தமிழ் அரசுக் கட்சியின் நீண்டகால உறுப்பினர். தமிழ் தேசியக் கொள்கையில் மிகுந்த பற்றுக்கொண்ட இவர் அரச சார்பற்ற நிறுவனங்களின் மூலம் வன்னி மாணவர்களுக்கும் உதவியிருந்தார்.*

**கேள்வி:** யுத்தத்தின் பின்னர் இன்று தமிழ் அரசியலில் பிளவுகளும் சிதைவுகளும் உடைவுகளும் ஏற்பட்டு மக்களை கடுமையான குழப்பத்திற்கும் துயரத்திற்கும் உள்ளாக்கியிருக்கின்றன. ஈழப்போராட்டத்தின் ஆரம்ப காலம் முதல் இந்த விடயங்கள் எங்களை தோல்வியுறச் செய்திருக்கின்றன என்று நினைக்கிறேன். ஈழ அரசியலில் மிகுந்த பற்றுக் கொண்ட அர்ப்பணிப்புக்களைச் செய்த நீங்கள் இதை எப்படிப் பார்க்கிறீர்கள்?

**பதில்:** இந்தப் பிளவுகளையும் சிதைவுகளையும் உடைவுகளையும் மிகுந்த வேதனையுடன் பார்க்கிறேன். ஆயுதப் போராட்டத்துக்கு முன்பும் ஒற்றுமை நோக்கி தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்டது. அதுவும் சிதைந்து பெயரளவுக் கூட்டணியாக கட்சியாக உள்ளது. ஆயுதப் போராட்ட காலத்தில் உருவாக்கப்பட்ட தமிழ்தேசியக் கூட்டமைப்பும் சிதறிப்போய் மூன்று அணிகளாக நிற்பது கவலைக்குரியதும் ஏமாற்றத்துக்குரியதுமாகும். இவை எமது தமிழ்த்தேசிய உணர்வுகளிலும் முன்னெடுப்புக்களிலும் குறுகியகால பாதிப்புக்களை ஏற்படுத்தலாம்.

**கே :** எங்களுக்குள் நாங்கள் சேறு பூசும் கலாசாரத்தையும் பழிவாங்கும் நோக்கங்களையும் தோற்கடிக்கும் நடவடிக்கைகளையும் எப்படி பார்க்கிறீர்கள்? அதனால் நமக்கு எவ்வாறான இடர்கள் விளையப்போகின்றன?

ப : இந்தப் பிளவுகளின் முதல் விளைவாக நாம் ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தை ஏற்கனவே இழந்து விட்டோம் என்றே நான் நினைக்கின்றேன். நுண்ணிய வார்த்தைப் பிரயோகங்களில் முரண்படுவதும் சேறு பூசுவதும் தமிழ் பேசும் மக்கள் நலன் சார்ந்ததாக அல்ல. இவை மறுதரப்புக்கு உதவுவதாகவே அமையும்.

**கே :** தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஏற்பட்ட பிளவுகள், உடைவுகள் குறித்து உடைந்து அல்லது சிதைந்து சென்றவர்கள் பலவகையில் தமக்கு ஏற்றபடி தங்கள் நியாயங்களை வைத்துப் பேசுகிறார்கள். ஆனால் மக்கள் எந்த உடைவுகளையும் விரும்பாதவர்கள் என்பதை நாம் அறிவோம். தமிழ் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்த இனி எப்படி முன்னெடுக்க முடியும் என நினைகிறீர்கள்?

ப: தமிழ் தேசியக் கூட்டமைப்புத்தான் தமிழ் மக்களின் பாதுகாவல் அரணாக இருக்கின்றது. இனியும் இருக்க வேண்டும் என மக்கள் கருதுகிறார்கள் என்பதுடன் அவ்வாறே தமிழ் தேசியக் கூட்டமைப்பு செயற்படவேண்டும் எனவும் மக்கள் எதிர்பார்க்கின்றுர்கள். அடிப்படை இலட்சியங்களிலிருந்து பிறழாமல் அது இருக்க வேண்டும். அதுவே தமிழ் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்திக் கொண்டிருக்கும்.

## இல்லையேல் இங்கு தமிழினம் இல்லையென்று ஆக்கிவிடுவார்கள்

**கே :** கடந்தமுறை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் நீங்கள் தோல்வியை சந்தித்திருந்தீர்கள். ஆனால் நேர்மையான நீதியான தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும் என்பதை பல வகையில் வலியுறுத்தி வந்தீர்கள். இம்முறை எதிர்கொள்ளப்போகும் தேர்தல் எப்படி இருக்கும்? அல்லது அதை எப்படி எதிர்கொள்ள வேண்டும்?

ப: 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பின்பற்றப்பட்ட வழிமுறைகள் பொருத்தமானவை அல்ல என்பதை பலர் பகிரங்கமாக கூறியுள்ளார்கள். தரும வாக்குகள் பற்றி பேராசிரியர். சி.க.சிற்றம்பலம் அவர்கள் பகிரங்கமாக விமர்சித்திருக்கிறார். இது பற்றி யாருக்கு விமர்சனம் செய்ய வேண்டுமோ அவருக்கு அதை நான் தெளிவாகவும் துணிவாகவும் தெரியப்படுத்தினேன். இந்தத் தேர்தலிலும் மக்கள் தமது பொறுப்புக்களை உணர்ந்து தமது வாக்குகளைப் பிரயோகித்து வேட்பாளர்களை ஒழுங்காக மதிப்பீடு செய்து தெரிவு செய்வதற்கான வாய்ப்பை எதிர்வரும் தேர்தல் வழங்குகிறது. மக்கள் இந்தக் கடமையை சரியாகச் செய்தால் பல குறைபாடுகள் நீங்கும். பிழையான தெரிவுகளை மேற்கொண்டு விட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை காணவில்லை. பிரதேசத்திற்கு வருவதில்லை என்று அங்கலாய்ப்பதிலும் விமர்சிப்பதிலும் குற்றம் சுமத்துவதிலும் தேடித்திரிவதிலும் அர்த்தம் இல்லை.

**கே:** இலங்கை அரசாங்கம் தந்திரோபாய ரீதியாக தமிழ் மக்களின் அரசியல் வலுவை சிதறடித்து வருகிறது என்ற குற்றச்சாட்டுகள் பரவலாக எழுகின்றன. அவை குறித்து என்ன கருதுகிறீர்கள்? அதை எப்படி எதிர்கொள்ள வேண்டும்?

ப: இலங்கை அரசாங்கம் பல வழிளிலும் தமிழ்த் தலைமைகளை பலவீனப் படுத்தி சிதறடிக்க பாரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த முயற்சிகளை முறியடிக்க வேண்டுமாயின் தமிழ் தேசியத் தின் பால் அசைக்க முடியாத பற்றுறுதி கொண்டவர்கள் என நிரூபிக்கப்பட்டவர் களை தெரிவு செய்ய வேண்டும். அவர்கள் அந்த பற்றுறுதி நிலையில் ஸ்திரமாக நின்று கொண்டு வீர வசனங்களை மட்டும் பேசாமல் மக்களது சமூகப் பொருளாதார, வாழ்வாதார, மீள்குடியேற்றம், புணர்வாழ்வு விடயங்களிலும் தீவிர அக்கறை செலுத்திச் செயற்பட வேண்டும்.

**கே:** இனி வரும் காலத்தில் தமிழ் மக்களுக்கு என்ன நடவடிக்கைகளை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில், அர்த்தம் தரும் வகையில் உங்கள் தேர்தல் வாக்குறுதிகள் அமைகின்றனவா?



ப: நான் ஏற்கனவே கூறியது போல அடிப்படை இலட்சியங்களிலும் விட்டுக் கொடுப்ப தற்கு இடமில்லாமல் மக்களின் இயல்பு வாழ்க்கை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் தீவிர அக்கறை காட்டவேண்டும். மக்களோடு மக்களாக உண்மையில் வாழ்ந்து அவர்களது எண்ணங்களையும் எதிர்பார்ப்புக்களையும் பிரதிபலிப்பவை யாக பல்வேறு துறைகள் எதிர் நோக்கும் பிரச் சினைகளுக்கு தீர்வுகாணும் வகையில் எனது தேர்தல் வாக்குறுதிகள் அமைகின்றன.

**கே:** தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை எப்படி உணருகிறீர்கள்? யுத்தத் தில் எப்படி சிதைந்த வடக்கு கிழக்கு என்ற தமிழர் தாயகத்தை எப்படிக் கட்டி எழுப்ப வேண்டும்?

ப: இணைந்த வடக்கு கிழக்கு, அது தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான




வாழ்விடம், அம்மக்களுக்கு தன்னாட்சி மற்றும் சுயநிர்ண உரிமை உண்டு என்ற அரசியல் எதிர்பார்ப்புக்களுடன் விவரிக்க முடியாத மனித அழிவுகளையும் சொத்து இழப்புக்களையும் உட்கட்டுமான இழப்புக்களையும் சீர் செய்யும் வகையில் உரிய திட்டங்களை வகுத்து சர்வதேச உதவிகளுடனும் குறிப்பாக எமது புலம்பெயர் தமிழ் மக்களின் உதவிகளுடன் செயற்படுத்த வேண்டும். வெளிப்படைத் தன்மையுடையதும்

**நேர்காணல் : தீபச்செல்வன்**

(20ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மக்களுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க சகல தமிழ் தலைமைகளும் ஒன்றிணைய வேண்டும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிறில் வேண்டுகோள்



கொழும்பு, மார்ச் 19

''தமிழர்களுக்கு நிரந்தர - நியாயமான அரசியல் தீர்வைப் பெற்றெடுக்க அனைத்து தமிழ்த் தலைமைகளும் - தமிழ் அரசியல் கட்சிகளும் ஒரு கொடியின் கீழ் - ஒரே தலைமையின் கீழ் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இதன்மூலம் எம் மக்களின் தேசிய வாழ்வு பற்றி சர்வதேசத்திற்கும், சிங்கள தேசத்திற்கும் அடித்துக் கூறுவோம்.''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தற்போது அமுலில் உள்ள அவசர காலச் சட்டத்தை நீடிப்பதற்காகக் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை அவசர அவசரமாகக் கூட்டி விவாதங்களையும், பிரதி விவாதங்களையும் நடத்திக்கொண்டிருக்கிறீர்கள். யுத்தம் முடிவிற்கு வந்து 11 மாதங்கள் கடந்த நிலையிலும் இந்த அவசரகாலச் சட்டம் ஏன் என்பதுதான் மக்கள் மத்தியில் கேள்வியாக எழுந்துள்ளது. இது இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ்பேசும் மக்களை அடக்கி, ஒடுக்கி அடிமைப்படுத்தி ஆளுவதற்கான இந்தச் சட்டம் நிரந்தரமாகவே இருக்கவேண்டும் என அரசு விரும்புகிறது. இதை நாம் மிகவும் வன்மையாக எதிர்க்கின்றோம்.

உலகிலே நாம் வாழ்வதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று உரிமை வாழ்வு. மற்றது அடிமை வாழ்வு. உரிமை பற்றி நாய்களுக்கும், நரிகளுக்கும், நத்திப் பிழைப்பவர்களுக்கும் அக்கறையில்லாமல் இருக்கலாம். ஆனால், எமக்கு அக்கறை உண்டு. இந்த அக்கறை காரணமாகவே இன்று நேற்று அல்ல, கடந்த 60 ஆண்டுகளாகவே ஜனநாயக வழியில் - அஹிம்சை வழியில் போராடி வந்திருக்கிறோம்.

உரிமை வாழ்வு என்பது மற்றவர்களை அடக்கி ஒடுக்கி வாழ்வதல்ல. அல்லது மற்றவர்களுக்கு ஒதுங்கி வாழ்வதுமல்ல! மாறாக எமக்கே உரித்தான இந்த மண்ணில் சுதந்திரமாகப் பாதுகாப்பாக பொருண்மிய சுபீட்சத்துடன் வாழ்வதுதான். இதற்காகவே இந்த நாடாளுமன்றிலும் இதற்கு வெளியிலும் குரல் கொடுத்து வந்திருக்கிறோம்.

ஆனால், கடந்த 60 ஆண்டுகளாக இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி புரிந்த சிங்கள அரசியல் கட்சிகள், சிங்கள - பௌத்த அரசியல் தலைவர்கள் எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளை அரசியல் ரீதியாகத் தீர்த்துவைத்தார்களா? இல்லை. ஒன்றுமே நடைபெறவில்லை. மாறாக எமது நிலம் அபகரிக்கப்பட்டு, எமது மொழி புறக்கணிக்கப்பட்டு, எமது கல்வி, வேலை வாய்ப்பு நிராகரிக்கப்பட்டு எமது மக்கள் மொழியின் பெயரால், இனத்தின் பெயரால் ஆயிரமாயிரமாகக் கொன்று குவிக்கப்பட்டார்கள். இதுதான் உண்மை வரலாறு.

இந்த வரலாற்றின் பிரதிபலிப்பும் பின்னணியும்தான் இன்று இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள அவல நிலைக்கும், பொருளாதார வீழ்ச்சிக்கும் காரணமாக அமைந்துள்ளது. இதன் காரணத்தால்தான் தோல்வி அடையும் நாடுகளின் வரிசைகளில் மீண்டும் இலங்கைக்கு உயரிய இடம் உலகளாவிய ரீதியில் கிடைத்திருக்கிறது. இது இந்த நாட்டில் இடம்பெறும் ஆட்சிமுறையின் சீர்த்துவத்தையும், மோசமான பொருளாதாரக் கொள்கையையும் தனது நாட்டு மக்கள் எனத்தான் உரிமை கோரும் ஒரு மக்கள் இனம் மீது அதிகொடிய இனப்பாகுபாடும், பாரபட்சமும், அடக்குமுறையும் காரணமாக அமைந்தது.

இந்த நிலையில் இருந்து சிங்கள தேசம் தன்னை முதலில் மாற்றிக்கொள்ள வேண்டும். மாற்றிக்கொண்டால் இந்த அவசரகாலச் சட்டம் இந்த நாட்டிற்குத் தேவையில்லை என இச்சபையிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வளமாக வாழவேண்டிய இளைஞர்களையும், இளம் பெண்களையும், பச்சிளம் குழந்தைகளையும் எம் கண்முன்னே துடிதுடிக்க இழந்துள்ளோம். எங்களது அரசியல் வேறுபாடுகளும், பேதங்களும், குரோதங்களும், காட்டிக்கொடுக்கின்ற அரசியல் குளறுபடிகளும்தான் இதற்கு இடமளித்துவிட்டன.

இது தமிழரின் வரலாறு அல்லது தலைவிதி என்று கூறிவிட முடியாது. எமது மக்களை இந்தத் துன்பத்திலிருந்து மீட்டு அவர்களுக்கு நிம்மதியானவாழ்வை உறுதிசெய்ய நியாயமான அரசியல் தீர்வைப் பெற்றிட ஜனநாயகம் என்கின்ற பலத்துடன் ஒன்றிணைந்து குரல் கொடுப்பதுதான் இன்றைய அவசியமும் அவசரமான தேவையுமாகும். தமிழ்மக்களின் எதிர்கால நலனிற்காவது ஒன்றிணை வோம்.

காலம் காத்திருக்காது. எனவே, அனைத்துத்தமிழ்த்தலைமைகளும், தமிழ் அரசியல் கட்சிகளும் இன்றாவது ஒரு கொடியின் கீழ் - ஒன்றிணைந்த ஒரே தலைமையின் கீழ் நேரிய தலைமையின் சர்வதேசத்திற்கும், சிங்கள தேசத்திற்கும் எம் மக்களின் தேசிய வாழ்வு பற்றி அடித்துக் கூறுவோம்.

சந்தர்ப்பவாத அரசியல்பேசிபிரிந்து நின்று காலத்தைச் சாகடிப்பதை மக்கள் விரும்பமாட்டார்கள். எமது ஒற்றுமையைத்தான் எமது மக்கள்விரும்பி நிற்கிறார்கள். பிரித்தாளும் அரசியலுக்கு இத்தேர்தல் மூலம் எம் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள். மக்களின் விடுதலைக்காக, நல்வாழ்வுக்காக நானும் இறுதிவரை உழைப்பேன் எனக் கூறிக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன். - என்றார். (சி)


## வீடு விற்பனைக்கு

கச்சேரி - நல்லூர் வீதியில் அமைந்துள்ள வீடு வளவு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0773437701, 0777606033

## கார் விற்பனைக்கு

மாருதி சுசிக்கி அல்ரோ (ALTO) கார் (HR xxxx) விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776199094, 0777747095

## தேவை

புடைவை வியாபார நிலையத்துக்கு புடைவை விற்பனையில் அனுபவமுள்ள ஆண்கள் தேவை.

தொடர்பு: 0778146931

## மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயத் திருவிழா

இடம்: மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயம்
காலம்: 20.03.2010 சனிக்கிழமை
நேரம்: முற்பகல் 10.30

*காணிக்கை அன்னையின் ஆசிரைப் பெற்றுக்கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.*

குறிப்பு:
- கையடக்கத் தொலைபேசிகள் பயன்படுத்தத் தடை.
- சிற்றுண்டிச்சாலை ஒன்று நடத்தப்படும். தனியார் வியாபாரம் அனுமதிக்கப்படமாட்டாது.
- மெழுகுதிரிகள் கோயிலில் விற்கப்படும்.
- வழிபாட்டுக்குப் புறம்பான செயற்பாடுகளுக்குத் தடை.
- தொண்டைமனாறு ஊடாக மட்டும் பக்தர்கள் வழிபாட்டுக்கு வரப்பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
- இல. 751 பாதையூடாகத் தொண்டைமானாறு வரும் பக்தர்களுக்காக, தொண்டைமானாறு - மயிலிட்டி போக்குவரத்துச் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- இல. 750 பாதையூடாக வரும் பக்தர்களுக்காக வல்லைச் சந்தி - தொண்டைமானாறு போக்குவரத்துச் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஆலய சபை,
காணிக்கை மாதா ஆலயம், மயிலிட்டி.
(95993)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன் மார்க்கண்டு தர்சன்
(மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி)
தோற்றம்: 09.06.1988
மறைவு: 20.12.2009

அன்பாய் அடக்கமாய் அமைதியாய்
எப்போதும் எம்மோடு வாழ்ந்தவனே - தர்ஷா!
பாதிவழியில் உன் பயணம் முடிந்ததென்ன?
மீளும் வழியின்றி எமை மாளச் செய்ததென்ன?
நீரோடு நீயோடிப் போய்விட்டாய் - உன்
நினைவுகள் எமைவிட்டுப் போகுமோ ஐயா?
உற்றவர் சுற்றவர் ஊரவர் அனைவரும்
விதியை நொந்தபடி எம் விழிநீரைச் சொரிந்தபடி
கண்ணீரை உனக்கு காணிக்கை ஆக்குகின்றோம்.



மட்டுவில் வாழ் உறவுகள்,
மட்டுவில்.
(சி/565780)

## அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பொதுக் குளிர்த்தி விழா



மேற்படி ஆலயத்தின் வருடாந்த பொதுக் குளிர்த்தி விழா எதிர்வரும் பங்குனி மாதம் 8 ஆம் நாள் (22.03.2010) திங்கட்கிழமை சிறப்பாக நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. அடியார்கள் அத்தருணம் ஆலயத்துக்கு வருகை தந்து விழாவைச் சிறப்பித்து அன்னை அருள் பெற்றேகுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னதானத்திற்குத் தேவையான பொருள்களை முதல் நாளே ஆலயத்தில் கொடுத்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(சி/565800) ஆலய பரிபாலன சபை.

## புங்குடுதீவு மேற்கு பெருங்காடு மதுரையம்பதி அருள்மிகு ஸ்ரீ மீனாட்சியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வர (சிவன்) தேவஸ்தானம் விரோதி வருடம் பெருவிழா விஞ்ஞாபனம்



*சிவன் அடியார்களே!*

*நிகழும் மங்கலகரமான விரோதி ஆண்டு பங்குனித் திங்கள் 6 ஆம் நாள் (20.03.2010) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றமாகி 14 ஆம் திகதி (28.03.2010) தேர்த்திருவிழாவும் 15 ஆம் திகதி (29.03.2010) தீர்த்தத் திருவிழாவும் 16 ஆம் திகதி (30.03.2010) திருக்கல்யாண விழாவும் நடைபெறவுள்ளன. இக்கிரியைகளை கனடாவில் பிரபல்யம் பெற்ற ''சிவாகம கிரியா திலகம்'' சிவஸ்ரீ ஸ்ரீநிவாச சர்வானந்தக் குருக்கள் நடத்தவுள்ளார்.*

*மகோற்சவ குரு ''சிவாகம கிரியா திலகம்'' சிவஸ்ரீ ஸ்ரீநிவாச சர்வானந்தக் குருக்கள்*

கிரியாதத்துவநிதி சிவஸ்ரீ நா.அருணோதயக் குருக்கள், தர்மகர்த்தா.


## மரண அறிவித்தல்

### பொன்னையா இராமச்சந்திரன்

(முன்னாள் முகாமையாளர், வலி.கிழக்கு ப.நோ.கூ.சங்கம்)



சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராமச்சந்திரன் 15.03.2010 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதியினரின் மருமகனும் ஞானேஸ்வரியின் பாசமிகு கணவரும் சுப்பிரமணியம், குமாரசுவாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் குமுதினி, அனுசியா (கனடா), பிரபாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்கந்தவேணு, கௌரிதஞ்சன் (கனடா), ராஜ்குமார் ஆகியோரின் அருமை மாமனும் ஐஸ்வர்யன், தர்மியா, சங்கீத், சரண்ராஜ், சரோண்ராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2010) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி இந்தன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி கிழக்கு,
நீர்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.
T.P.: 0777075131
(95996)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**றைடர்ஸ் பைக்ஸ் நிறுவனமும் இளைஞர்களுக்கான நாளை அமைப்பும் நடத்திய**

# சைக்கிளோட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 19

'றைடர் பைக்ஸ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் 'இளைஞர்க்கான நாளை' அமைப்பு நேற்று முன்தினம் நடத்திய சைக்கிளோட்டப் போட்டியில் 600 இற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்குபற்றினர்.

80கிலோ மீற்றர்கள் தூரத்தைக் கொண்ட இப்போட்டி 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆண், பெண்களுக்கிடையிலான போட்டி, திறந்த பிரிவினர்களுக்கான ஆண்,பெண்களுக்கிடையிலான போட்டி என நான்கு பிரிவுகளிலும் முதல் பத்து இடங்களையும் பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

**19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் வெற்றி பெற்றவர்கள்**

ரி. பிரசாத், எஸ். டிலக்ஷன் , எ.சவக்சஸ், கே. கபில்ராஜ், கே.கமல்ராஜ், எம்.நிசாந்தன் என். தனுசன், ரி. சுதர்சிங் , என். சுதாகரன், எஸ். தினேஸ்.

**பெண்கள் பிரிவு**

எஸ். பத்மசந்தியா, கே.யனுசா, ஆர். தனுசா, எஸ். சகஜினி, ரி. அருள்வாசினி , கே.தனதுர்க்கா , எஸ்.அனுசியா, ரி.வாணி, பி. கீர்த்திகா, பி. சுமிதா

**திறந்த பிரிவினருக்கான போட்டியில் வெற்றி பெற்றவர்கள்**

**(ஆண்கள்)**

து.இராஜீம், இ.றீகன், சி. கஜேந்திரன், தே. சிவகுமார், ர. வசந்தன், ந.டனிஸ்கரன்,தெ. வாசுராஜா, ர.சதீபன்,இ.இதயன், மா. இரஞ்சகுமார்.

**(பெண்கள்)**

திருமதி கோடிஸ், எம்.ஏ. நியுசலா, பி. இராஜசோபனா, ஆர். தினேசா, என்.ஷ்ரீலோஜினி, ரி. குயின்சிகா.

(6-23)



எழுவைதீவு மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டியில் வீதியோட்டத்தில் (பெண்களுக் கான) த.சோபிகா(மூன்றாம் இடம்), மரியகொறற்றி (முதலிடம்),ம.ஜசூரியா(இரண்டாம் இடம்) பெற்ற வீராங்கனைகளைப் படத்தில் காணலாம்.
(படங்கள்:நந்தன்)

# வலி.தெற்குப் பிரதேச செயலர் மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச் 19

வலி.தெற்குப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழா(2010) இன்றும் நாளையும் ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதிநாள் நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2 மணிக்கு உதவிப் பிர தேச செயலர் திருமதி யசோதா தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக வணிகபீடப் பீடாதிபதி பேராசிரியர் தேவராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் இலங்கை வங்கியின் முகாமையாளர் எஸ்.அரசகுமார், உடுவில் கோட்ட கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன், யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி எ.எப்.ரூபசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

காட்சி உதைபந்தாட்டப் போட்டி இடம்பெறும். இதில் உடுவில் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இதில் உடுவில் மகளிர் கல்லூரி மாணவியின் இசையும் அசைவும் நிகழ்வு இடம்பெறவுள் ளது.

(6-23)

# கரவெட்டி பிரதேச செயலக கரப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 19

கரவெட்டிப் பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையேயான பெண்களுக்கான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்ற கழகங்களின் விவரம் வருமாறு.

மைக்கல் விளையாட்டுக் கழகம் (முதலாவது இடம்), சிவகுமரன் விளையாட்டுக் கழகம் இரண்டாவது இடம், பொம்பஸ் விளையாட்டுக்கழகம்(மூன்றாவதுஇடம்).(23)

# 'நாயகர்களின் போர்' 2ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்19

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி-சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிகளுக்கு இடையிலான 'நாயகர்களின் போர்' என வர்ணிக்கப்படும் இருநாள் கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் 2ஆம் ,3ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

10ஆவது ஆண்டாக இப்போட்டி மகாஜனக் கல்லூரியின் மைதானத்தில் நடைபெறவுள்ளது. 4ஆம் திகதி இரு கல்லூரியின் பழைய மாணவர்கள் மோதும் ஒரு நாள் போட்டியும் நடைபெறவுள்ளது. (6)

# மாணவர்களின் உள ஆற்றல்களை வளர்க்கும் வகையில் ஆசிரியர்கள் புதிய விளையாட்டுக்களை அறிமுகப்படுத்த வேண்டும்

## இளையதம்பி வித்தியாலய மெய்வன்மைப் போட்டியில் ஜி.சிவபாலன்தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்19

விளையாட்டுக்களின் ஊடாக மாணவர்களின் உள ஆற்றல் திறன்களை வளர்க்கும் வகையில் புதிய விளையாட்டுக்களை ஆசிரியர்கள் அறிமுகப்படுத்த வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் கல்வித் திணைக்களப் பொறியியலாளர் ஜி.சிவபாலன்.

இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு-

இன்று பாடசாலைக் கல்வியிலே விளையாட்டு முறை ஊடான கற்றல்கள் செயல்முறைகள் பல உள்ளன. அதேபோன்று விளையாட்டு நிகழ்வுகளிலே மாணவர்களின் உள ஆற்றல்களை விருத்தி செய்யும் அம்சங்களைச் சேர்ப்பதன் மூலம் உளத் திறன்களை வளர்க்க முடியும்.

உடல் வளர்ச்சிக்கும் உட்திறன்களின் விருத்திக்கும் விளையாட்டுக்கள் உதவுகின்றன. அதேவேளை விளையாட்டுக்களின் ஊடாக மாணவர்களின் உள ஆற்றல் விருத்திக்கும் உதவ முடியும். அந்த வகையில் ஆசிரியர்கள் புதிய விளையாட்டுக்களை அறிமுகப்படுத்த வேண்டும்.

விளையாட்டுக்களில் ஆரம்பக்கல்வி மாணவர்களில் அனைவரும் பங்குபற்றவும் ஊக்குவிப்பும் பரிசில்கள் பெறவும் ஏற்றவிதமாக விளையாட்டுக்களினை ஒழுங்கு செய்வதன் மூலம் அவர்களின் உள ஆற்றல்களை வளர்க்க முடியும் என்றார்.

(50-6-267)





உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் நடைபெற்ற பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையேயான பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற உடுவில் மத்தி விளையாட்டுக் கழகத்தையும் இரண்டாம் இடத்தைப் பெற்ற சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: நேசன்)

# மென்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச் 19

புத்தூர் ஸ்ரீ பஞ்ஞசீக வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் கு.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல் கலந்துகொள்வார்.

(50-6-201)





# அரையிறுதிப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்19

கரவெட்டி பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதியாட்டங்கள் நாளை, நாளை மறுதினம் இமையாணன் விளையாட்டுக் கழக மைதானத்தில் பிற்பகல் 4 மணியளவில் இடம்பெறவுள்ளது.

சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் நவஜீவன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நவசக்தி விளையாட்டுக் கழகமும் ஞாயிற்றுக்கிழமை இடபெறவுள்ள ஆட்டத்தில் டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யங் கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

(6-23)

# ஊர்காவற்றுறை கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறை,மார்ச்19

ஊர்காவற்றுறைக் கோட்ட மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையே இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

**வலைபந்து**

**15 வயதுப் பிரிவு - பெண்கள்**

யாழ்ற்ரன் கல்லூரி, நாரந்தனை றோ.க. பாடசாலை, கரம்பன் சண்முகநாத வித்தி.

**17 வயதுப் பிரிவு**

யாழ்ற்ரன் கல்லூரி, நாரந்தனை றோ.க.பாடசாலை, சிறிய புஸ்ப மகளிர் கல்லூரி

**19 வயதுப் பிரிவு - பெண்கள்**

யாழ்ற்ரன் கல்லூரி, அனலைதீவு சதாசிவ ம.வி.

**கரபந்து**

**15 வயதுப் பிரிவு - ஆண்கள்**

புனித அந்தோனியார் கல்லூரி, யாழ்ரன் கல்லூரி, கரம்பன் சண்முகநாத வித்தி.

**17 வயதுப் பிரிவு - ஆண்கள்**

யாழ்ற்ரன் கல்லூரி, புனித அந்தோணியார் கல்லூரி, நாரந்தனை றோ.க.பாடசாலை

**19 வயதுப் பிரிவு - ஆண்கள்**

புனித அந்தோணியர் கல்லூரி, அனலைதீவு சாதாசிவ ம.வி, யாழ்ற்ரன் கல்லூரி.

**சதுரங்கம்**

**15 வயதுப் பிரிவு - ஆண்கள்**

கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம், புனித அந்தோணியார் கல்லூரி, யாழ்ற்ரன் கல்லூரி.

**பெண்கள்**

கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்,யாழ்ற்ரன் கல்லூரி, சிறிய புஸ்பமகளிர் கல்லூரி, புனித மரியாள் றோ.க. மகளிர் வித்.

**19 வயதுப் பிரிவு - ஆண்கள்**

கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம், யாழ்ற்ரன் கல்லூரி, புனித அந்தோணியார் கல்லூரி.

**பெண்கள்**

கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம், யாழ்ற்ரன் கல்லூரி, சிறிய புஸ்பமகளிர் கல்லூரி.

**பூப்பந்தாட்டம்**

**19 வயதுப் பிரிவு - ஆண்கள்**

புனித அந்தோணியார் கல்லூரி, யாழ்ற்ரன் கல்லூரி

**பெண்கள்**

சிறிய புஸ்ப மகளிர் கல்லூரி, நாரந்தனை றோ.க. ம.வி., புனித அந்தோணியார் கல்லூரி

**கரம்**

**15 வயதுப் பிரிவு -ஆண்கள்**

தம்பாட்டி அ.இ.த.இ.க பாடசாலை, நாரந்தனை றோ.க.ம.வி., புனித அந்தோணியார் கல்லூரி.

**பெண்கள்**

யாழ்ற்ரன் கல்லூரி, புனித மரியாள் றோ.க. மகளிர் வித்.

**கரபந்து**

**15 வயதுப் பிரிவு - பெண்கள்**

புனித மரியாள் றோ.க. பாடசாலை, தம்பாட்டி அ.இ.த.இ.க. பாடசாலை, நாரந்தனை றோ.க. பாடசாலை

**17 வயதுப் பிரிவு பெண்கள்**

சிறிய புஸ்ப மகளிர் கல்லூரி, நாரந்தனை றோ.க. பாடசாலை, புனித மரியாள் றோ.க. பாடசாலை,

**19 வயதுப் பிரிவு - பெண்கள்**

கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம், புனித அந்தோணியார் கல்லூரி, அனலைதீவு சதாசிவ ம.வி.

**மென்பந்து துடுப்பாட்டம்**

புனித அந்தோனியார் கல்லூரி, அனலைதீவு சதாசிவ ம.வி.,யாழ்ரன் கல்லூரி.

(50-06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கில் இம்முறை வாக்குகள் சிதறும் சூழ்நிலை!

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வடக்கு - கிழக்கு மக்களின் வாக்குகள் பல்வேறு கட்சிகள், அக்கட்சிகளில் பிளவுபட்டு நிற்கும் அணிகள் மற்றும் மக்கள் அபிமானம் பெற்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்றவாறு பிரிந்து செல்வதற்கான வாய்ப்புகள் அதிகளவில் அமையும் பின்புலம் தொடர்பாக ஆராய்கிறது இக்கட்டுரை.

பிரியந்த ஹேவகே 'லங்காதீப' பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் தமிழ் வடிவம் இது.

எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பாக வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் கருமம் கடந்த 26 ஆம் திகதியுடன் முடிவுற்றது. அண்மையில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் வாக்களிப்பு விகிதாசாரத்தின் அளவுப் பிரமாணத்தைப் போன்று அல்லாதுவிடினும் இம்முறை இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் வடக்கு - கிழக்கின் வாக்காளர்கள் எவ்வித பிரதிபலிப்பை வழங்கக் கூடுமென்பதில் அதிகரித்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த வினா குறித்தே -அதாவது வடக்கு , கிழக்கின் வாக்கு அடிதளம் எவ்விதம் அமையப்போகிறது என்பதே - சர்வதேசத்தின் உன்னிப்பான அவதானிப்புக்கு உள்ளாகியுள்ளது. அதற்குக் காரணமும் இருக்கவே செய்கிறது. அதாவது 2004 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் இடம்பெற்ற வேளையில் வடக்கு, கிழக்குப் பகுதியின் பெருமளவு பிரதேசங்களின் நிர்வாகம் விடுதலைப் புலிகள் அமைப்பின் வசத்திலேயே இருந்தது. அன்றைய சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழரசுக் கட்சியின்கீழ் பகிரங்கமாகவே விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதியாகவே களமிறங்கியிருந்தது. விடுதலைப் புலிகள் அமைப்பும் கூட, தமது குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களிக்குமாறு தமிழ்மக்களுக்குப் பகிரங்கமாகவே கோரிக்கை விடுத்து நின்றது.

மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியாவுடன் வன்னி மாவட்டம் மற்றும் கிளிநொச்சியும் உள்ளடங்கும் விதத்தில் யாழ். மாவட்டமும் சேர்ந்தது என் வட மாகாணம் அமைகிறது. கிழக்கு மாகாணமானது, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் திகாமடுல்ல (அம்பாறை) ஆகிய மாவட்டங்களுக்குரிய தேர்தல் தொகுதிகளைக் கொண்டதாகும். கடந்த 2004 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தின் 09 ஆசனங்களுள் 8 ஆசனங்களும், வன்னி மாவட்டத்தில் 6 ஆசனங்களுள் 5 ஆசனங்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 ஆசனங்களுள் 4 ஆசனங்களும், திருகோணமலை மாவட்டத்தில் 4 ஆசனங்களுள் 2 ஆசனங்களும், அம்பாறை மாவட்டத்தில் 7 ஆசனங்களுள் ஒரு ஆசனமும் என்றவாறு வடக்கு, கிழக்குப் பிரதேசத்துக்குரிய 31 ஆசனங்களுள் 20 ஆசனங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைக்குக் கிட்டியது. அதற்கு மேலதிகமாக தேசியப் பட்டியலிலிருந்து இரண்டு ஆசனங்களையும் ஈட்டிக்கொள்வதற்கு அது திறன் பெற்றிருந்தது.

ஆனால், இன்றைய நிலைப்பாடு அன்றைய நிலைக்கு முற்றிலும் மாறானதாகும். தனது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைத்த விடுதலைப் புலிகள் அமைப்பு நிர்மூலமாக்கப்பட்டு அதன் சுவடே அற்றுப் போயுள்ளது. ஆனாலும், விடுதலைப் புலிகள் அமைப்பின் தயவால் நாடாளுமன்றம் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் அரசியல் களத்தில் உள்ளது. அவர்களது தற்போதைய தலைவிதி மற்றும் அவர்களுக்குத் தமிழ் மக்கள் மத்தியில் இன்று கிட்டியிருக்கும் ஸ்தானம் எத்தரத்தில் உள்ளது என்பதை எதிர்வரும் பொதுத் தேர்தலின் பெறுபேறுகளின் மூலம் தெரிந்துகொள்ள முடியும்.

வடக்கு,கிழக்கில் முடிசூடிக்கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இம்முறை இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலிலும் கூட வடக்கு,கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் தனது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளது. ஆனாலும், அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பெறுபேறுகளுக்கு அமைய அவர்களுக்கு 2004 இல் கிட்டியிருந்த பெறுபேறுகளை ஈட்டிக்கொள்ள இயலுமா என்பது சிக்கலுக்குரியதாகவே உள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படுத்தியிருந்த கருத்து இங்கு நோக்கத் தக்கதாகும். அதாவது, ஜனாதிபதித் தேர்தலின் வெற்றி தொடர்பாக சிறுபான்மையினச் சமூகங்களின் வாக்குகள் பெரிதும் முக்கியத்துவம் பெறுகின்றன என்றவாறு அது தெரிவித்திருந்தது.

மேற்படி தேர்தலின்போது அவர்கள் ஒத்துழைப்பு வழங்கிநின்ற ஜெனரல் சரத் பொன்சேகா சிறுபான்மையினங்கள் பெருமளவில் வாழும் வடக்கு , கிழக்கில் வெற்றியீட்டிக்கொண்டிருந்தாலும் கூட, ஒட்டுமொத்த ரீதியில் மஹிந்த ராஜபக்ஷவுக்கே வெற்றி கிட்டியது.

மேற்குறித்த பெறுபேறுகளுக்கு அமைய நோக்கும்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐ.தே.கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், ஜே.வி.பி. உள்ளடங்கும் பல்வேறு கட்சிகள் ஒருங்கிணைந்து பெற்றுக்கொண்ட வாக்குகளின் விகிதாரசாரமானது, 2004 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2010 ஆம் ஆண்டில் குறைவடைந்துள்ளதைக் காட்டி நிற்கிறது.

இங்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வடக்கு, கிழக்கில் வெற்றியீட்டிக்கொண்டிராத போதிலும், அது பெற்றுள்ள வாக்கு விகிதாசாரத்தில் அதிகரிப்பைக் காட்டி நிற்கிறது. எவ்வாறான போதிலும், ஜனாதிபதித் தேர்தலும், பொதுத் தேர்தலும் வெவ்வேறானவையே என்றவாறு ஒருவரால் வாதிட முடிந்தாலும், பெரும்பாலும் கட்சிக்காரரொருவர் அண்மையில் இடம்பெற்ற தேர்தலொன்றில் தாம் வாக்களித்த கட்சிக்கே வாக்களிக்கும் வாய்ப்புகள் அதிகமுள்ளன.

இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வழங்கப்பட்டுள்ள வேட்பு மனுக்களுக்கு அமைய, வன்னிப் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர் மற்றும் கனகரத்தினம், யாழ். மாவட்டத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பத்மினி சிதம்பரநாதன் உள்ளடங்கும் சிலருக்கும் கிழக்கு மாகாணத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் தரப்பொன்றுக்கும் வேட்பாளர் நியமனம் வழங்கப்பட்டிருக்கவில்லை. அவர்களில் பலரும் வேறு கட்சிகள் ஊடாகத் தத்தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். அங்கு விசாலமானதொரு வாக்குத் தொகை மாற்றமுற வாய்ப்பமையாது போனாலும் கூட, அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நெருக்கமாக இருந்த கட்சிக்காரர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களோடு சார்ந்து கட்சியையும் மாற்றிக்கொள்ளக்கூடும். அதுவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இறுதிப் பெறுபேற்றுக்கு ஒவ்வாத விதத்தில் தாக்கத்தை ஏற்படுத்திவிடக்கூடும்.

மேலும், விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலகிச்சென்றதோடு, கிழக்கு மாகாணத் தமிழ்மக்களும்கூட விலகிநின்று கருணா மற்றும் சிவனேசதுரை சந்திரகாந்தனுடன் (பிள்ளையான்) இணைந்து கொண்டதன் காரணமாக 2004 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத் தமிழ் மக்களிடமிருந்து கிட்டிய ஆதரவு 2010 இன் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிட்டும் வாய்ப்புகள் குறைவடையலாம். அத்தாக்கத்தின் இறுதிப் பெறுபேறாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசனங்களின் எண்ணிக்கை அரைப்பங்கு வரையில் குறையலாம்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்குத் தொடர்பாக வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ள பிரதானமான கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியேயாகும். 2004 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இங்கு அவர்களுக்குக் கிட்டியிருந்த ஆசனங்களின் எண்ணிக்கை மூன்றாகும். இன்றைய பொதுத் தேர்தலில் தேசிய காங்கிரஸின் அதாவுல்லா அணி, ஈ.பி.டீ.பி., ஈரோஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற ஆனந்தசங்கரியின் அனுசரணையுடன் களமிறங்கியுள்ள கூட்டணியானது 2004 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது பலமானதொரு நிலையைக் காட்டி நிற்கிறது.

வன்னி மாவட்ட வேட்புமனுத் தாக்கலினுள் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் ரிஷாத் பதியுதீன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர் மற்றும் கனகரத்தினமும் உள்ளடங்குகின்றனர். ரூபவாஹினி சேவையின் ஊடகவியலாளரொருவராகப் பணியாற்றிய உபுல் பாலசூரியவும் வன்னி மாவட்ட வேட்புமனுவில் உள்ளடங்குகிறார்.

யாழ். மாவட்டத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்புமனுக்களுள் டக்ளஸ் தேவானந்தாவும் உள்ளடங்குகிறார். திருகோணமலையின் வேட்புமனுவில் சுசந்த புஞ்சி நிலமேயும் உள்ளடங்குகின்றார். வடக்குக் கிழக்கில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றி எவ்வாறான போதிலும் கடந்த தடவையை விட நாடாளுமன்ற உறுப்பினர் ஆசனங்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன.

ஐ.தே.கட்சியும்கூட வடக்குக் கிழக்கில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ள முன்னணிக் கட்சியொன்றாகும். இங்கு, ஐ.தே.கட்சியின் முக்கிய பலமாக இருப்பது அவர்களது பங்காளிக் கட்சியான முஸ்லிம் காங்கிரஸேயாகும். விசேடமாக வடக்குக் கிழக்கில் வாழும் பெருமளவு முஸ்லிம் மக்களின் பலம் முஸ்லிம் காங்கிரஸுக்கு உள்ளது.

அதேவேளை, 2004 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஐ.தே.கட்சி மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை ஆறு ஆகும். இத்தேர்தலில் ஐ. தே.கட்சியின் யாழ். மாவட்ட வேட்புமனுப் பட்டியலில் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனின் மனைவியான விஜயகலா மகேஸ்வரனும், வன்னி மாவட்டம் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸின் முன்னணிப் பாத்திரமொன்றான நூர்தீன் மசூரும் உள்ளடங்குகின்றனர்.


இவற்றுக்கு மேலதிகமாக வன்னி மாவட்டம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள்

(16ஆம் பக்கம் பார்க்க)

தமிழில் : சரா



விஜயகலா | பத்மினி | சிவாஜிலிங்கம் | கஜேந்திரன் | கஜேந்திரகுமார்



நூர்டின் மசூர் | பிள்ளையான் | கிஷோர் | முரளிதரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்




தொகுப்பு: ஜயந்தன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இங்கு அரும்பணியாற்றிய அதிபர்களின் நினைவாக கட்டடங்களுக்கு பெயர் சூட்டியுள்ளமை அவர்களின் சேவைக்குக் கொடுக்கும் கௌரவமாக கருதப்படுகிறது. முத்து மண்டபம், கந்தையா மண்டபம், சரஸ்வதி மண்டபம், மகாலிங்கம் அ.ரங்கு, நூற்றாண்டுக் கட்டடம் என காட்சியளிக்கும் கட்டடங்களைக் காண முடிகிறது.

கல்லூரியின் நூற்றாண்டு விழா கடந்த 2008ஆம் ஆண்டு அதிபர் வ.நடராசா தலைமையில் நடைபெற்றது. கடந்த 2008ஆம் ஆண்டு நாட்டின் சிறந்த பாடசாலை அதிபராகத் தெரிவுசெய்யப்பட்டு ஜனாதிபதியினால் விருது பெற்ற கா.குணசிங்கம் தற்போது இவ் வித்தியாலயத்தின் அதிபராகன் கடமையாற்றுவதால் கல்வி மற்றும் பௌதீக வளம்சார் துறைகளில் பெருவளர்ச்சி காணும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு பாடசாலையின் முறைசார் கலைத்திட்ட செயற்பாடுகளின் வெற்றிகரமான அடைவு மேம்பாட்டிற்கு இணைக் கலைத்திட்ட செயற்பாடுகள் முழு வடிவம் கொடுத்து வருகிறது.

இந்தவகையில் இவ் வித்தியாலயத்தின் இணைக்கலைத்திட்ட செயற்பாடுகள் பாடசாலையின் வள இயலளவுக்கு ஏற்றவகையிலான செயலடைவுகளைக் கொண்டிருப்பினும் பல் பரிமானத்தன்மைகளைக் கொண்டு விளங்கிவந்துள்ளது. மாணவர்களின் ஆளுமை விருத்திக்கேற்ற வகையில் ஒழுங்கமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ் வித்தியாலய ஆரம்ப யோகத்தை ஈடுசெய்யும் விதத்தில் சமய விழுமியங்களையும் பாரம்பரியங்களையும் மதிக்கும் வகையில் இந்துமாமன்றம் உருவாக்கப்பட்டு சமய வைபவங்களாக காலத்திற்குக் காலம் நடாத்தப்படுகின்றன.சமய குரவர் குருபூசை தினங்கள், நவராத்திரி விழா, பண்ணிசைப்போட்டி, கோலம் போடுதல் போன்றவை மன்றத்தின் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

மாணவர்களுக்குக் கிடைத்த சமய அறிவின் பயனாக 2008 ஆம் ஆண்டு சைவ பரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட போட்டிகளில் வித்தியாலய மாணவன் தி.அஜந்தன் வெண்கலப்பதக்கம் பெற்றுள்ளார்

விளையாட்டுத்துறையிலும் வித்தியாலய மாணவர்கள் சாதனைகளைப்படைத்துள்ளனர்.2005,2006,2008ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றி தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டனர்.

உடற்பயிற்சிப் போட்டிகளில் பங்குபற்றி வலயமட்ட,மாகாணமட்டங்களில் விருதுகள் பெற்றுள்ளனர்.

2007 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதரப்பரீட்சையில் பரீட்சைக்குத் தோற்றிய வித்தியாலய மாணவர்களில் தியாகராசா அஜந்தன் எனும் மாணவன் 9ஏபி சித்தியும், மகாராசா தனுசாளினி என்னும் மாணவி 8ஏ பிஎஸ் சித்தியும்,ஞனசேகரம் நிறுசாந்தி 6ஏ 2பி 2சி சித்தியும் சிவகுமார் சரண்யா 5ஏ 2சிஎஸ் சித்தியுட்பட 7 மாணவர்கள் பத்துப்பாடத்திலும் சித்திபெற்று வித்தியாலய நூற்றாண்டுக்கு வரவேற்புக் கொடுத்து பெருமை சேர்த்தனர்




வித்தியாலயத்தின் தேவைகள்

இவ் வித்தியாலயத்தில் விஞ்ஞான ஆய்வு கூடம், மனையியல் கூடம், நூலகம், கணனிப் பயிற்சி மையம் ஆகியவை இல்லாது பெரும் குறையாக உள்ளது. தரம் 6 தொடக்கம் 11 வரை 130 மாணவர்கள் கல்வி கற்ற போதிலும் விஞ்ஞான ஆய்வுகூடம் இல்லாததால் அலுமாரியில் வைக்கப்பட்டுள்ள உபகரணங்கள் எடுத்துக் கற்பிக்கப்படுகிறது. பாட செய்கை முறைகளுக்கு உகந்தவகையில் காணப்படவில்லை. மனைவியல் பாடம் 63 பிள்ளைகள் கற்கின்ற போதிலும் பாடசாலை சமையலறை பாட பயிற்சிக்கூடமாக இயங்கிவருகிறது. தகவல் தொழில்நுட்பப் பாடம் இவ்வருடம் பாடசாலை யில் அறிமுகப்படுத்தப்பட்டுகின்ற போதிலும் அதற்குரிய கட்டடவசதிகள் இல்லாதநிலை காணப்படுகிறது. அத்துடன் ஒரேயொரு கணனி மட்டும் இங்கு காணப்படுகிறது. இதுவும் பாடசாலைத்தேவைக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

நூலகத்திற்கென திட்டமிட்ட கட்டட வசதியில்லாததால் பெருமளவு புத்தகங்கள் காணப்படுகின்ற போதிலும் மாணவர்கள் அதனைப் பயன்படுத்த முடியவில்லை. இவற்றினை விட முக்கியமானது வித்தியாலயத்தில் 11 வகுப்பறைகள் உள்ள போதிலும் ஒரு வகுப்பில் கூட அலுமாரி இல்லை.மாணவர்கள், ஆசிரியர்கள் தமது கற்றல், கற்பித்தல் சாதனங்களை வைத்துப் பாதுகாக்க முடியாமல் தினமும் வீடுகளுக்குக் கொண்டு சென்று வருவதையும் அவதானிக்க முடிந்தது.

பாடசாலை வளாகத்தில் கட்டாக்காலிக் கால்நடைகள் சுகந்திரமாக நடமாடுகிறது. வளாகத்தில் அழகுற வைக்கப்பட்டிருந்த பூங்கன்றுகளும், விவசாய பாட மாணவர்களால் பாடத்திட்டத்திற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட பயிர் வகைகளை கால் நடைகள் உணவாக உட்கொண்டு வருகின்றன. இவ் வளாகத்தைச் சுற்றி மதில் அமைக்கப்படல் வேண்டும்.வித்தியாலய ஸ்தாபகரின் சந்ததியினர் பாடசாலைகளின் சிறு தேவைகளை அவ்வப்போது பூர்த்திசெய்து வருகின்றனர். வித்தியாலயம் அரசினால் நடத்தப்படுகின்ற போதிலும் ஸ்தாபகரின் நோக்கத்தை நிறைவுபடுத்தும் வகையில் அவரது சந்ததியினர் செயற்பட்டு வித்தியாலயத்தின் ஆரம்ப நோக்கத்தை சிதற விடாமல் பாதுகாத்து வருவது பாராட்டத்தக்கது.

வித்தியாலய மாணவரின் கல்வி வளர்ச்சியில் தன்னலமற்ற சேவையினை வழங்க அதிபர் உட்பட அனைத்து ஆசிரியர்களும் முன்வந்துள்ள போதிலும் வித்தியாலயத் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படுமானால் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள முன்னோடிப்பாடசாலையாக இவ் வித்தியாலயம் பிரதேசத்தின் ஏனைய பாடசாலைக்கு வழிகாட்டிப் பாடசாலையாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. பாடசாலை சமூகத்தினரும் வித்தியாலய வளர்ச்சிக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க முன்வருவார்களாயின் வித்தியாலய வளர்ச்சிக்கு எவரும் தடைபோட முடியாது.

(முற்றும்)

# நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்

தென்மராட்சி வலம்




தென்மராட்சிப் பிரதேசத்தில் நூற்றாண்டினை அண்மித்த நிலையில் உள்ள பாடசாலைகளில் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயமும் ஒன்றாகும்.

1914 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் வித்தியாலயம் அன்று தொடக்கம் இன்று வரை தனது கல்விப்பணியினை சிறப்பாக மேற்கொண்டு வருகிறது.

அன்றைய காலத்தில் கல்விக்காகத் தமது சொத்துக்களையும் வாழ்நாள்களையும் செலவழித்த பெரியோர்கள் நிறையப்பேர் இருந்துள்ளனர். அவர்களின் தன்னலமற்ற சேவைகளின் பயனாக பல பாடசாலைகள் தென்மராட்சிக்கு இன்றும் பெருமை சேர்க்கும் விதத்தில் புகழ்பூத்த பாடசாலைகளாகக் காணப்படுகின்றன.

அந்தவகையில் சாவகச்சேரி நகர்ப்பகுதியிலிருந்து ஒரு மைல் தூரத்தில் அமைந்துள்ள நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் பற்றி ஆராய்வோம்.

நுணாவில் கிழக்குப் பகுதியில் வாழ்ந்த சைவப் பெரியோர்கள் இங்குள்ள சிறுவர்களின் கல்வி வசதியைக் கணக்கிட்டு ஏ-9 வீதியில் தற்போது வித்தியாலயம் இயங்கும் இடத்தில் ஓலைக் கொட்டில் அமைத்து கல்விச்செயற்பாட்டிற்கு வித்திட்டனர்.

சாவகச்சேரிப் பகுதியில் இயங்கிய இந்தப் பாடசாலை நுணாவில் கிழக்குப் பகுதியிலிருந்து சுமார் இரண்டு மைல் தூரத்திற்கு அப்பால் இருந்தாலும், கண்டி வீதியில் செல்லும் வாகனங்களால் இப்பகுதிச் சிறார்களுக்கு ஆபத்து வரக்கூடாது என்ற காரணத்தினாலும் ஊர்ப் பெரியோர்கள் ஒன்றிணைந்து இப் பாடசாலையை உருவாக்கி கணபதிப்பிள்ளை வல்லிபுரம் என்பவரை தலைமை ஆசிரியராக்கி கல்விப்பணியினை ஆரம்பித்தனர்.

வித்தியாலயம் ஆரம்பக்கப்பட்ட தினத்திலேயே 50 மாணவர்கள் இணைந்தனர்.இந்த மாணவர்களின் கல்விக்காக தலைமை ஆசிரியரும் ஊர்ப்பெரியோர்களும் தமது சொந்தச் செலவில் கற்றல் உபகரணங்களை வழங்கி வந்தனர். அந்தக் காலத்தில் ஐந்தாம் வகுப்பு வரை நான்கு ஆசிரியர்களுடன் இயங்கி வந்தது.

1919 ஆம் ஆண்டு தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றதன் பின்னர் ஏற்பட்ட கல்வி வளர்ச்சியினால் வித்தியலயத்தில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. மாணவர்களின் அதிகரிப்பினால் ஏற்பட்ட இட நெருக்கடியினைக் குறைக்க தலைமையாசிரியராகக் கடைமையாற்றிய வேலுப்பிள்ளை குமாரசாமி அவர்கள் வித்தியாலத்திற்கு அருகில் இருந்த தனது காணியினை [illegible] வளர்ச்சிக்காக அன்பளிப்பாக வழங்கினார்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெளியீடு: உதயன்-கல்விச்சுடர்


## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்தும் முன்னோடிப் பரீட்சை - 04


## வினாத்தாள் - I


நேரம் :45 நிமிடங்கள்

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை தருக.

✱ கீழே 01-03 வரையான வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருவுடன் மிக நெருங்கிய தொடர்புடைய உருவைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

01.

(1) (2) (3) (4)

02.

(1) (2) (3) (4)

03.

(1) (2) (3) (4)

✱ கீழே அடைப்புக்குள் உள்ள எழுத்துக்களையும் இலக்கங்களையும் கொண்டு 4-5 வரையான வினாக்களுக்குரிய பொருத்தமான விடைகளைத் தெரிந்து கோடிடுக.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | ம | தீ | ப | | ம |
| க | 3 | | க | | 4 |
| | ப | 9 | | க | |
| 8 | க | ன | 6 | | அ |

04. இங்கு அதிகளவில் உள்ள எழுத்து யாது?
1) ப 2) க 3) ம

05. இங்குள்ள இரட்டை எண்களின் கூட்டுத்தொகை ய்யாது?
1) 30 2) 20 3) 18

✱ கீழேயுள்ள எண் கோலங்களில் வெற்றிக்கூண்டுக்குப் பொருத்தமான எண்ணைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

06. 104 → 100 → 96 → 92 → ?
1) 90 2) 86 3) 88

07.


1) 48 2) 56 3) 15

08. படத்துடன் கருத்து நிறைந்த சொற்கூட்டத்தைத் தெரிந்து அதன் கீழ்க்கோடிடுக.


1) அனைத்தும் உண்ணி, காட்டில் வாழும்.
2) மாமிச உண்ணி, வேகமாக ஓடும்.
3) தாவர உண்ணி, வேகமாக ஓடும்.

✱ கீழேயுள்ள கணித செய்கையை அடிப்படையாகக் கொண்டு 9-10 வரையான வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிந்து கோடிடுக.

$$\begin{array}{r} N\,T\,M \\ +\,N\,T\,M \\ \hline 4\,6\,8 \end{array}$$

09. Tஇன் பெறுமானம் யாது?
1) 6 2) 3 3) 4


10. M + Nஇன் பெறுமானம் யாது?
1) 8 2) 6 3) 4

11. H எனும் ஆங்கில எழுத்தினை முகம் பார்க்கும் கண்ணாடியின் முன் வைத்துப் பார்க்கும்போது இவ் எழுத்து கண்ணாடியில் தோன்றும் சரியான முறை யாது?

1) 2) 3) H

✱ கீழேயுள்ள சொற்கூட்டங்களில் வேறுபட்ட சொல் இடம்பெற்றுள்ள சொற்கூட்டத்தைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

12. 1) கதிரை, மேசை, கட்டில், அலுமாரி.
2) கத்தரி, வெண்டி, மிளகாய், தாவரங்கள்.
3) சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள்.

13. 1) கோழி, காகம், கிளி, புறா.
2) யானை, குதிரை, புலி, சிங்கம்.
3) கார், பேருந்து, வாகனங்கள், மோட்டார் சைக்கிள்.


14. அருகில் காட்டப்பட்டுள்ள உருவில் உள்ள பந்துகளில் 2/3 பங்கு பந்துகளின் எண்ணிக்கை யாது?

1) 4
2) 8
3) 6

15. 1m 50cm நீளமான கம்பித்துண்டில் இருந்து 25cm நீளமான எத்தனை கம்பித் துண்டுகளை வெட்டி எடுக்கலாம்?
1) 4 துண்டுகள். 2) 6 துண்டுகள். 3) 2 துண்டுகள்.

✱ 16ஆம், 17ஆம் வினாக்களின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொற்களைத் தெரிந்து அவற்றின் கீழ்க் கோடிடுக.

16. அரிசி : சோறு எனின் மா : ..............................
1) நெல். 2) பிட்டு. 3) கோதுமை.

17. காகம் : கரையும் எனின் புலி : ..............................
1) காச்சிக்கும். 2) கனைக்கும். 3) உறுமும்.

18. இவ்வுருவினை A காட்டும் திசையில் இருந்து (மேலிருந்து) பார்க்கும்போது தோன்றும் சரியான முறை யாது?



1) 2) 3)

19. "சமரசம்" எனும் சொல் இரகசியக் குறியீட்டில் எழுதப்பட்டுள்ளது. அச்சொல் எழுதப்பட்டுள்ள சரியான முறையைக் காட்டும் விடை யாது?

1) 2)
3)

20. நீர்த் தாங்கி ஒன்றில் 500l நீர் இருந்தது. அதில் 1/5 பங்கு குடிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது எனின், தற்போது தொட்டியில் உள்ள நீரின் அளவு யாது?
1) 100l 2) 400l 3) 250l

✱ கீழே தரப்பட்டுள்ள உருக்களில் இரண்டு சோடி உருக்கள் ஏதோ ஒரு வகையில் ஒத்த உருக்களாகும். ஓர் உரு மட்டும் வித்தியாசமானது. அவ்வுருவின் கீழ்க் கோடிடுக.


21.

(1) (2) (3) (4) (5)

22.

(1) (2) (3) (4) (5)

✱ 23ஆம், 24ஆம் வினாக்களில் வரும் உருவிற்குப் பொருத்தமான சரியான கூற்றுக்கள் அடங்கிய விடைகளை தெரிவுசெய்து அவற்றின் கீழ் கீறிடுக.

23.

1) உணவுப்பொருள், பானம், செடி.
2) உணவுப்பொருள், பானம், குளிர்மை.
3) பானம், உணவு, மாமிசம்.

24.

1) ஒளி, வெப்பம், மின்சாரம்.
2) வெப்பம், ஒழி, பிரகாசம்.
3) பிரகாசம், ஒலி, பயனற்றது.


✱ 25-27 வரையான வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தெரிவுசெய்து அவற்றின் கீழ்க் கோடிடுக.

25. 4 மணி 20 நிமிடங்களைக் காட்டிய கடிகாரம் ஒன்று 10 நிமிடங்கள் முந்தி ஓடியிருந்தது. நான் அதனை 10 நிமிடங்கள் பிந்தி ஓடுவதாக நினைத்தேன். அப்போதைய உண்மையான நேரம் யாது?
1) 4.00 2) 4.10 3) 4.30

26. வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள வாகனம் செல்லும் தூரத்தை அளக்கும் கருவி 990km ஐக் காட்டியது. அது இன்னும் 15km சென்றால் கருவியில் காணப்படும் எண் யாது?
1) 1000km 2) 10005km 3) 1005km

27. 20 பிஸ்கட்டுக்கள் அடங்கிய ஒரு பிஸ்கட் பெட்டியின் நிறை 220 ஆகும். வெற்றுப்பெட்டியின் நிறை 20g எனின், ஒரு பிஸ்கட்டின் நிறை யாது?
1) 10g 2) 20g 3) 50g

✱ 28ஆம், 29ஆம் வினாக்களின் சொற்களும் அவற்றுக்குரிய குறியீடுகளும் தரப்பட்டுள்ளன. அவற்றின் தொடர்பினை இனங்கண்டு கேட்கப்படும் வினாக்களுக்குரிய விடைகளின் கீழ்க் கோடிடுக.

28. படம் என்பது ✶○△ எனவும், அன்பு என்பது ⊗⊙□ எனவும் எழுதப்பட்டுள்ளது எனின், வாத்து என்னும் சொல் எழுதப்பட்டுள்ள சரியான முறை எது?

1) 2) 3)

29. குரங்கு என்பது AXZH என எழுதப்பட்டுள்ளதாயின் பங்காகும் என்பது எழுதப்பட்டுள்ள சரியான முறை எது?
1) MZRHL 2) MZHRL 3) RLZHM

✱ 30ஆம், 31ஆம் வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தெரிவுசெய்து அவற்றின் கீழ்க் கோடிடுக.

30. வயல் + கரை என்ற சொற்கள் சரியாகச் சேர்த்து எழுதப்பட்டுள்ள முறை எது?
1) வயல் கரை. 2) வயற்க்கரை. 3) வயற்கரை.

(13ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 புலமைப்பரிசில் மாணவர்களுக்காக பல மாவட்ட ஆசிரியர்களால் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பெறுமதிமிக்க படைப்பு


31. பின்வருவனவற்றுள் எதிர்காலப் பன்மைச்சொல் எது?
 1) பறந்தன. 2) வருகின்றார்கள். 3) உறங்கும்.

✱ பின்வரும் தரவுகளை அடிப்படையாகக்கொண்டு 12 ஆம், 13 ஆம் வினாக்களுக்கு விடை தருக.
500g சீனியும், 250g தேயிலையும் = ரூபா 121.00
1kg தேயிலை = ரூபா 300.00 எனின்,

32. 1kg சீனியின் விலை யாது?
 1) ரூபா 90.00 2) ரூபா 91.00 3) ரூபா 92.00

33. 750g தேயிலையின் விலை யாது?
 1) ரூபா 225.00 2) ரூபா 200.00 3) ரூபா 250.00

34. கீழே தரப்பட்ட கடிகாரத்தில் உள்ளது போன்று செங்கோண வடிவில் அமையக்கூடிய வேறொரு நேரம் யாது?
 1) 12.00 மணி.
 2) 9.00 மணி.
 3) 6.00 மணி.




✱ கீழே தரப்பட்டுள்ள குறியீடுகளை அவதானித்து 35 ஆம், 36 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அவற்றின் கீழ்க் கோடிடுக.

I A H △ 6 □ 4 3 C P ✱ △ K 9 2 □
△ M 5 R □ ✱ 8 S A 7 ✱ K R 1 3 P R 4

35. மேலே உள்ள கூட்டிற்குள் அதிக தடவைகள் இடம்பெற்றிருப்பவை எவை?
 1) எழுத்துக்கள். 2) உருக்கள். 3) இலக்கங்கள்.

36. மேலே உள்ள அடைப்பிற்குள் எத்தனை உருக்கள் இடப்பட்டுள்ளன?
 1) 8 2) 9 3) 10

37. அருகில் உள்ள உருவிற்கு வரையக்கூடிய சமச்சீர் அச்சுக்கள் எத்தனை?
 1) 4 2) 8 3) 2

✱ பின்வரும் மூன்று வினாக்களுக்கும் ஒவ்வொரு சொல்லில் விடைகளை எழுதுக.

38. எண்பதாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்.
(...................................................)

39. மரத்தின் மேல் காய், காயின் மேல் மரம் உள்ள தாவரம் எது?
(...................................................)

40. எனது முதுகுப்புறத்தில் மூன்று வரிகள் உண்டு. நூல் போன்ற மெல்லிய பொருட் கள் மீது ஓடிச்செல்லும் பொழுது உடலினைச் சமப்படுத்துவதற்கு எனது வாலைப் பயன்படுத்துவேன். பழங்களைக் கோதி அரிப்பதில் அதிக விருப்பமுள்ளவன். அப்படியாயின் நான் யார்?
(...................................................)


(நிறைவுற்றது)

நன்றிக்கும் பாராட்டுக்கும் உரிய ஆசிரியர்கள்:
திரு.எஸ்.தயாளலிங்கம் & திரு.பி.பத்மநேசன்,
ACA கல்விநிலையம், திருமலை.

**கல்விச்சுடர் சம்பந்தான விமர்சனங்களுக்கும் தொடர்புகளுக்கும்....**
உதயன் பணிமனை, இல.365, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 071-8724054/021-2229944/071-4273035


# கல்விச்சாலைக் காட்சிகள்......





எழுவைதீவு முருகவேள் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.
நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் பா.தனபாலன் மங்கள விளக்கேற்றுவதையும், பாடசாலையின் அதிபர் து. கிருபாகரன் மற்றும் விருந்தினர்கள் நிற்பதையும் மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: நந்தன்)






அளவெட்டி அருணாசலம் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
நிகழ்வில் சிறப்பு விருந்திராகக் கலந்து கொண்ட அளவெட்டி தெற்கு கிராம அலுவலர் ந.உமாகாந்தன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி.வடக்கு, தெல்லிப்பழைப் பிரதேச செயலர் க.முரளீதரன் மற்றும் வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் மு.நடராசா அதிபர் கு.ஜெகநாதன் ஆகியோர் நிற்பதை முதலாவது படத்திலும்
வெற்றி பெற்ற மாணவனுக்கு பிரதம விருந்தினர் வெற்றிக் கேடயம் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**தருபவர்: வித்யா**

### மேடம்



மலைபோல வந்த பிரச்சினை ஒன்று பனிபோல விலகி விடலாம். புதிய வேலை முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. அரசியல் தொடர்புடையவர்கள் அலைச்சல்களுக்கு ஆட்படலாம். உத்தி யோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறுவது தள்ளிப் போகலாம். பெண்களால் சந்தோஷமான அனுபவம் உண்டு.

### இடபம்




மனைவி வழியில் எதிர்பாராத அன்புத் தொல்லைகளுக்கு ஆள்படலாம். மற்றவர்களை நம்பி உறவினர்கள் யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். சுபகாரிய விடயங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகள் தள்ளிப் போகலாம். சிலரிடம் கோபமாக, வேகமாக பேசலாம். மற்றவர்கள் வேலைக்காக நீங்கள் அலையலாம்.

### மிதுனம்



கணவன் மனைவி இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்விற்கு வரும். பிள்ளைகளின் செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லி பெருமைப்படுவீர்கள். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளை வெளிப்படையாக விமர்சிப்பதைத் தவிர்க்க வேண்டும். எண்ணக் கனவுகள் நனவாகும். சுகமான அனுபவம் உண்டு.

### கடகம்



கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிக்கும் நாள். அரசியல்வாதிகள் நீண்ட தூர பயணங்கள் செல்ல வாய்ப்பு உருவாகும். வழக்கு விவகாரங்களில் சுமூகமான நிலைமை காணப்படும். நோய் உபாதைகளில் இருந்து விடுபட்டு தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும்.

### சிங்கம்



குடும்ப விடயம் ஒன்றை நினைத்துக் கவலைப்படுவதால், மனதில் படபடப்பு ப்படபடப்பு உண்டாகும். தொழில் கூட்டாளிகளிடம் அனுசரணையாக நடந்து கொள்ளவும். பெண்கள் காலை முதல் மாலை பரபரப்பாக செயற்பட நேரிடலாம். கோயில் தொடர்பான காரியங்களுக்காக, பயணங்களுக்காகச் செலவு செய்யலாம்.

### கன்னி



வீண் பிடிவாதங்களால் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். உடல் உபாதைகளைத் தவிர்க்க உணவு விடயங்களில் எச்சரிக்கை அவசியம். வில்லங்கமாகப் பேசி சிலரிடம் வம்பில் மாட்டிக் கொள்ளலாம். கணிசமான பணத்தை ஆதாயமாகப் பெறலாம் என நினைத்து செய்த காரியம் கடைசி நேரத்தில் கைநழுவி விடலாம்

### துலாம்



காலை நேரத்தில் சிறிய அளவு பணவரவுகளையும், மாலையில் கணிசமான செலவுகளையும் சந்திக்கலாம். உத்தியோகத்தர்கள் நினைத்த காரியங்கள் நல்ல விதமாக முடியும். மற்றவர்கள் உங்களைப் பார்த்து பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். தேவையில்லாத சில பொருள்களை வாங்குவீர்கள்.

### விருச்சிகம்



மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு நடந்து கொள்வீர்கள். தந்தை வழியில் உருவான தொல்லைகள் குறையும். சக ஊழியர்கள் சிலரின் வேலைகளை நீங்கள் ஏற்றுச் செய்ய நேரிடலாம். வியாபாரிகள் எதிர்பாராத திடீர் பணவரவுகளைப் பெறலாம். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள்.

### தனுசு



சோர்வு, சோம்பலாக இருந்தாலும், அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளை செய்து முடிப்பீர்கள். வீடு, மனை வாங்க மேற்கொண்ட முயற்சிகளில் இடையூறு ஏற்படலாம். பொருள் ஒன்றை வாங்க பல இடங்களுக்கு அலைந்து திரியலாம். சிலர் தங்களின் பிரச்சினைகளை உங்களிடம் சொல்லி ஆலோசனை கேட்கலாம்.

### மகரம்



நேரம் பார்த்து காரியம் சாதிக்க நினைக்கும் உறவினர்களை அடையாளம் கண்டு கொள்வீர்கள். வேலையாள்களால் உருவான தொல்லைகள் குறையும். சக ஊழியர்கள் விடுமுறையால் உத்தியோகத்தர்கள் கடும் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். மனைவி உடல் நலன் தொடர்பான விடயங்களில், எச்சரிக்கை அவசியம்.

### கும்பம்



ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகள் தடைபட்டு முடியும். குடும்பத்தாருடன் பிரச்சினை வந்து நீங்கும். உங்கள் மீது சிலர் வீண்பழி சுமத்துவார்கள். வியாபாரத்தில் வசூல் மந்தமாக இருக்கும். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

### மீனம்



திட்டமிட்ட வேலைகளில் மாற்றங்களைச் செய்யலாம். கணவனிடம் காரசாரமாகப் பேசுவதைத் பெண்கள் தவிர்க்க வேண்டும். உடன் பிறப்புக்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். வறட்டு பிடிவாதத்தை தவிர்த்து பொறுமையாக செயற்பட வேண்டிய நாள். தாய் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம்.

## 'அமைதியின் வாக்கியங்கள்' அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச்19

யாழ்ப்பாணம் ஜீவசக்தி சங்கத்தினர், அமைதியின் வாக்கியங்கள்' என்னும் அறிமுகநிகழ்வினை நாளை சனிக்கிழமை நடத்தவுள்ளனர்.

சாவகச்சேரி , சிவன்கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலை மன்றத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் ஜீவசக்தி சங்கப் பிரமுகர் பிரேம்ராவத் கருத்துரை வழங்குவார். (1-207)

## பிறன்புப் பணிக்கு அடிப்படையானது அன்பே

மாற்றங்களுக்காக நீங்கள் செய்யும் ஒவ்வொரு தியாகச் செயலையும் இறைவன் விரும்புகிறார். இறைவனை மகிமைப்படுத்தும் செயல்களையே செய்யுங்கள். இறைவனை மகிமைப்படுத்தி வாழ்ந்தவர்கள் இன்றும் போற்றப்படுகின்றார்கள். இந்தவகையில் சிறந்த உதாரணமாக அன்னை திரேசா தன் வாழ்வைப் பிறருக்காகவே அர்ப்பணித்தார். ஒரு நாள் ஒரு பையன் அன்னையிடம் சிஸ்ரர் ஒரு சகோதரனும் சகோதரியும் நேற்று ஒன்றும் சாப்பிடவில்லை. இன்றைக்கும் அவர்கள் சாப்பிட ஒன்றுமில்லை என்றான். அன்னையிடம் மாலையில் வீடு போய்ச்சேர பணம் இருந்தது. அந்தத் தூரத்தை பஸ்ஸில் இல்லாமல் நடந்து போகத் தீர்மானித்தார். பொங்கல் சோறும் இரண்டு முட்டையும் வாங்கி இரண்டு பிள்ளைகளின் பசியைத் தீர்த்தார். ''மிகச் சிறியோராகிய என் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்தவையெல்லாம் எனக்கே செய்தீர்கள்'' (மத் 25:40) இதன் மூலம் அவர்களிலே அன்னை இறைவனைக் கண்டார்.

**தவக்காலச் சிந்தனை**



அன்பின் அளவு கோல் சிலுவைப் பலியின் மூலம் எமக்குத் தரப்பட்டுள்ளது. தன்னையே பலியாக அர்ப்பணித்த உயர்ந்த தியாகம் அன்பின் ஊற்றாகத் திகழ்கின்றார். இயேசு எமக்குத் தந்த அன்புக் கட்டளை '' உன் மீது நீ அன்பு கூர்வது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக'' (மத் 22:39). எனவே நாமும் அன்னையின் வாழ்வை முன் மாதிரிகையான வாழ்வாக எடுத்துக் கொண்டு மற்றவர்களில் இறைவனைக் கண்டு எம் வாழ்வினை நாம் மாற்றி அமைக்க வேண்டும்.

ராதிக்கா அன்ரன் பீற்றர்,
பருத்தித்துறை.

## வளமுடன் வாழ்க!



| மணமகன் | மணமகள். |
| --- | --- |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| ஜீவபிரதாப் | ஷயந்தினி |

இடம்–இணுவில்
பரராசசேகரப்பிள்ளையார் கோயில் திருமண மண்டபம்

இன்றைய நன்னாள்
இல்லறம் சிறக்க
இணைந்திடும் இருமனம்
திருமணம் காண
அன்றிலும் பேடுமாய்
அகமொத்து வாழ
அளித்திடும் வாழ்த்துக்கள்
ஆனந்தம் தரவே
பெற்றோர், உற்றோர்
பெருமிதம் கொள்ள
பிரதாப்–ஷயந்தினி இணைந்திடும்
நல்லறம்
வள்ளுவன் வழியினில்
வளமுடன் வாழ
வாழ்க! வாழ்க! நீடு வாழ்க!

வாழ்த்துவோர்:
விஸ்டா விஷன் நிறுவனத்தினர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை மாவட்டத் தமிழர்களின் நிலைகள் மாற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் அணிதிரள்க!

## வேட்பாளர் ஹென்றி மகேந்திரன் அறைகூவல்

அம்பாறை, மார்ச் 19

''அம்பாறை மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்கள் கடந்த காலங்களில் பல்வேறு துன்ப, துயரங்களை அனுபவித்து வந்தனர். தமிழ்ப் பிரதேசங்கள் அபிவிருத்திப் பணிகளில் புறக்கணிக்கப்பட்ட நிலைமையே நீடித்து வந்தது. இந்த நிலைமைகள் மாறி நாம் தலைநிமிர்ந்து வாழவும், நமது தனித்துவத்தை மீண்டும் உணர்த்தவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் தமிழ் மக்கள் அணிதிரள வேண்டும்.''

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திகாமடுல்ல (அம்பாறை) மாவட்ட வேட்பாளரும், கல்முனை மாநகரசபை எதிர்க்கட்சித் தலைவருமான ஹென்றி மகேந்திரன் கூறினார்.

மல்வத்தைக் கிராமத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் வீ.தங்கத்துரை தலைமையில் இந்த மக்கள் சந்திப்பு இடம்பெற்றது.

வேட்பாளர் ஹென்றி மகேந்திரன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த கையோடு, பொதுத் தேர்தல் நம்மீது திணிக்கப்பட்டுள்ளது.

பேரினவாத சக்திகள் போடும் பிச்சைக்காகவும், தமது சுயநலன்களுக்காகவும், தமிழ் மக்களைக் காட்டிக் கொடுக்க நினைத்தவர்களுக்கும், நமது ஒற்றுமையைச் சிதறடிக்கவும், அபிவிருத்தி என்ற மாயையைக் காட்டித் திரிந்தவர்களுக்கும் ஜனாதிபதித் தேர்தலில் நல்ல பாடத்தை நமது மக்கள் புகட்டினர்.

அற்ப சலுகைகளுக்காக ஏமாந்து தமது தனித்துவ அடையாளங்களையும், கொள்கைகளையும், உரிமைகளையும் அடகு வைப்பவர்களாகத் தமிழ் மக்கள் இருப்பவர்கள் அல்லர் என்பதை அந்தத் தேர்தலில் நாம் உணர்த்தினோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலம் தமிழ் மக்களென்பதும், தமிழ் மக்களது பலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பதும் அசைக்கமுடியாத உண்மையும், யதார்த்தமுமென்பதை மக்கள் என்றும் புரிந்து கொண்டுள்ளனர். இதனால், எவருக்கும் சோரம் போகவோ, பசப்பு வார்த்தைகளில் மயங்கவோ நாம் தயாரில்லை என்பதை நம் மக்கள் நிரூபணமாக்கி வருகின்றனர்.

ஆரம்பகால சாத்வீக ரீதியான போராட்டம் தொடக்கம் ஆயுத ரீதியான போராட்டம் முடிந்தது முதல் இன்று ஏற்பட்டுள்ள சூழ்நிலை வரை பெற்ற அனுபவங்களைக் கொண்டு எமது சமூகத்தின் எதிர்கால சுபீட்சத்திற்காக வியூகங்களை வகுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படும் என்பது உறுதியாகும்.

ஒதுங்கிநின்று எதிர்ப்பு அரசியல் செய்வதோ, சரணாகதி அரசியல் செய்வதோ எமது நோக்கமல்ல. மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் கிடைக்கும் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்கள் மூலம் பேரம்பேசும் அரசியல் வாய்ப்பு நிச்சயம் எமக்குக் கிடைக்கும்.

எமது வாக்குகளைச் சிதறடிக்கச் செய்ய எடுக்கப்படும் கோடரிக்காம்புகளின் முயற்சிகள் முறியடிக்கப்பட வேண்டும்.

சர்வதேசம் கூட, எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தமிழினத்தின் தனித்துவத்தையும், ஒற்றுமையையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் அணிதிரள்வதன் மூலம் நிரூபிக்க வேண்டும். இதன்மூலம் நமது பலம் நிரூபிக்கப்பட்டு மறுக்கப்பட்டுள்ள, மறைக்கப்பட்டுள்ள தமிழினத்தின் பல பிரச்சினைகளுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் விடிவு பிறக்கும்'' - இவ்வாறு அவர் கூறினார்.

(ளி)




# மாணவர்களின் இடை விலகல் தரவு குறித்து இரண்டாம் தவணை ஆரம்பத்தில் நடவடிக்கை

## கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 19

''கிழக்கு மாகாணத்தில் இரண்டாம் தவணை ஆரம்பமாகியதும், ஒவ்வொரு வகுப்பிற்கும் சென்று நேரடியாக கணக்கெடுப்பை நடத்தி உண்மையான, சரியான இடைவிலகல் மாணவர்களைக் கணக்கெடுக்க வேண்டும். இதற்காக உங்களுக்கு வேண்டிய சகல ஒத்துழைப்பும் வழங்கப்படும்.''

- இவ்வாறு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அல்ஹாக்.எம்.ரீ.ஏ.நிசாம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள 15 கல்வி வலயங்களில் முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் திட்ட உத்தியோகத்தர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் முறைசாராக் கல்வி அபிவிருத்தி பற்றிய செயலமர்வு கடந்த திங்களன்று (15ஆம் திகதி) திருகோணமலை துளசிபுரம் மனிதவள அபிவிருத்தி நிலையத்தில் மாகாண உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ். நாகராஜா தலைமையில் நடைபெற்றது.

அங்கு பணிப்பாளர் நிசாம் சுமார் 2 மணி நேரம் கல்வி அதிகாரிகளோடு கலந்துரையாடி குறைநிறைகள் பற்றிக் கேட்டறிந்தார். மாகாணக் கல்விப் பணிப்பாளர் நிசாம் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பாடசாலைக்கு ஒருபோதும் செல்லாத பிள்ளைகள் மற்றும் இடைவிலகியோர் தொடர்பாகக் கூடுதல் கவனமெடுக்க வேண்டிய தருணம் வந்திருக்கிறது. எனினும், இவர்கள் தொடர்பாக இங்கு அனுப்பப்படும் தரவுகள், தகவல்களை நான் நம்பத் தயாரில்லை என்னைப் பொறுத்தவரை அவை பொய்யானவையாகும்.

அநேக இடைவிலகல்கள் பாடசாலைகளிலேயே மறைக்கப்படுகின்றன. பாடசாலைத் தொகை மற்றும் போசணை வழங்கல் போன்ற இன்னோரன்ன காரணங்களால் பல அதிபர்கள் உண்மைத் தகவல்களை மறைக்கின்றனர் என முறைப்பாடுகள் வந்திருக்கின்றன.

அதிபரிடம் பெறும் தகவலுக்கும், வகுப்பறைக்கு நேரடியாக பெறும் தகவலுக்குமிடையே நிறைய வித்தியாசங்கள் இருப்பதைக் காண்கிறோம். இடைவிலகல் கணக்கெடுப்பை சீர்தூக்கிப்பாக்கின்ற போது 2007இல் 598 ஆகவும் உள்ளது இதனை நம்பமுடியுமா?

ஏனவே, முதலாம் தவணை முடிந்து இரண்டாம் தவணை ஆரம்பமாகியதும் நீங்கள் ஒவ்வொரு பாடசாலைக்கும் சென்று, உண்மையான தகவலைப் பெறவேண்டும். உங்களைப் பூரணமாக அதற்கு பயன்படுத்த சகல அதிகாரங்களையும் தருகின்றேன். இடைவிலகல் மாணவர் தொகை கூடுதலாக இருப்பின் அப்பாடசாலை கூடாத பாடசாலை என்பார்கள். மாறாக குறைவாக இருப்பின் நல்ல பாடசாலை என்பர். நீங்களும் இனிமேல் வெறுமனே பயிற்சி வகுப்புகளுக்கு மட்டும் முன்னிலை வழங்காது இடைவிலகல், பாடசாலைக்குச் செல்லாதோர் பற்றிய பூரண விவரங்களைப் பெற்று மீண்டும் பாடசாலைக்குச் சேர்க்கும் வழி முறைகளைக் கையாள வேண்டும் என்றார் (ளி)

# சகல இனத்தவருக்கும் சேவை செய்யும் அரசியல் தலைவர்களே இன்று தேவை

## அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே கருத்து

திருகோணமலை, மார்ச் 19

சகல இன மக்களுக்கும் சேவை செய்யக் கூடிய அரசியல் தலைவர்களே தற்போது நாட்டுக்குத் தேவைப்படுகின்றனர். இதனை உணர்ந்து மக்கள் செயற்பட வேண்டுமென தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே தெரிவித்தார்.

தேசத்தைக் கட்டியெழுப்பும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் கீழ் வடக்கு, கிழக்குக் கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டத்தினரால் அமைத்து கையளிக்கப்பட்ட திருகோணமலை ஆசிரியர் வீடமைப்புச் சங்க உவர்மலை சமூகக்கற்கை நிலையத்தின் கட்டடத்திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

திருகோணமலை ஆசிரியர் வீடமைப்பு சங்க, உவர்மலை சமூகக்கற்கை நிலைய செயலாளர் ஒ.குலேந்திரன் தலைமையில் கடந்த புதன்ழமை (10ஆம்திகதி) மாலை நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் புஞ்சி நிலமே மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலங்களில் அரசியல்வாதிகள் பலர் இன ரீதியாக செயற்பட்டதன் காரணமாக நாட்டில் பிரச்சினைகள் ஏற்படக் காரணமாக இருந்தன. எதிர்காலங்களில் இப்படியான தவறுகள் ஏற்பட இடமளிக்கக் கூடாது. ஆகவே, சகல இன மக்களையும் சமமாக மதித்து செயற்படக்கூடிய அரசியல் தலைவர்களை தெரிவு செய்ய வேண்டியது பொது மக்களின் கடமையாகும் எனத் தெரிவித்தார். (ளி)

# பிரதேச வாதங்களைப் பேசுவதன் மூலம் பிரதிநிதித்துவத்தைப் பெற முடியாது

## ஐ.தே.க. வேட்பாளர் கூறுகிறார்

மட்டக்களப்பு, மார்ச் 19

பிரதேசவாதம் பேசுவதன் மூலம் முஸ்லிம் பிரதிநிதித்துவங்களைப் பெற்றுக்கொள்ள முடியாது. இதனால், கிடைக்கக்கூடிய பிரதிநிதித்துவங்கள் கூட நழுவிப் போகக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுவிடும் - இவ்வாறு திகாமடுல்ல மாவட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணியில் போட்டியிடும் வேட்பாளர் எம்.ஏ.ஹஸனலி தெரிவித்தார்.

கடந்த செவ்வாயன்று கல்முனையில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

திகாமடுல்ல மாவட்டத்தில் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசிய முன்னணியும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் போட்டியிடுகின்றன. இந்த நிலையில் எங்களுக்கு இருக்கின்ற ஒன்றுக்கு மேற்பட்ட விருப்பு வாக்குகள் மூலம் பிரதேசவாதங்களை மறந்து, சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கான சரியான உயர்கல்வித் திட்டங்கள், தொழில் வாய்ப்புகள் என்பனவற்றுக்கான திட்டங்கள் இந்த அரசிடம் இல்லை. பொருளாதாரப் பிரச்சினை மற்றும் விதவைகள், அனாதைகளுக்கான திட்டங்கள் என எதுவும் இல்லை. ஒன்றுக்கு மேற்பட்ட முஸ்லிம் பிரதிநிதிகள் போட்டியிடும் திகாமடுல்ல மாவட்டத்தில் சிந்தித்து வாக்களிப்பதன் மூலமே எமது முஸ்லிம் பிரதிநிதிகளை நாடாளு மன்றத்திற்கு அனுப்ப முடியும்.

(ளி)

# நற்பிட்டிமுனை கிராமங்களில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு

மார்ச் 19

க்ல்முனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை தமிழ்க் கிராமங்களில் கடந்த 5 தினங்களாகக் குழாய்த் தண்ணீர் விநியோகம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது என நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

வறட்சி மிகுந்த இக்காலகட்டத்தில் குழாய்த் தண்ணீர் விநியோகம் இவ்வாறு பாதிக்கப்பட்டிருப்பதால் பொதுமக்கள், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புகளை அலுவலகத்திடம் கேட்டபோது, அம்பாறையில் இருந்துவரும் குழாய்தண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டிருப்பதே இதற்குக் காரணம் என பதிலளிக்கப்பட்டுள்ளது.

இதனால், குடிதண்ணீருக்காக மக்கள் அலைய வேண்டியுள்ளது. கிணற்றுக் காணிகளிலும் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது. குளிப்பதற்கு ஆறு, குளம் என்று அலைய வேண்டியுள்ளது. தாகத்திற்குத் தண்ணீர் தாராளமாகக் குடிக்க முடியாமலிருக்கிறது என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த இரண்டு கிராமங்களிலும் சுமார் 900 குடும்பங்கள் குழாய்த்தண்ணீர் பாதிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளன.

(சு-214)

# கந்தளாய்குளப் புனரமைப்புக்கு 13 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

திருகோணமலை, மார்ச் 19

உலக வங்கியின் நீர் முகாமைத்துவ திட்டத்தின் கீழ் பெறப்பட்ட 13 கோடி ரூபா கடன் உதவியைக் கொண்டு கந்தளாய்க் குளம் புனரமைக்கப்பட்டுள்ளது என பிராந்திய நீர்ப்பாசனப் பணிப்பாளர் எஸ். சிவானந்தன் தெரிவித்துள்ளார்.

1986 ஆம் ஆண்டு கந்தளாய்க் குளக் கட்டு உடைப்பெடுத்த பின்னர் மேற்கொள்ளப்படும் பாரிய புனர்நிர்மாணப்பணி இதுவாகும். இத்திட்டத்தின் கீழ் அதன் சுருசு வெளிச்செல்லும்கால்வாய், நீர்க்கால்வாய் உட்பட அதன் பிரதான அங்கங்கள் புனர் நிர்மாணம் செய்யப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்குளத்திலிருந்து நீர் கந்தளாய், தம்பலகாமம், முள்ளிப் பொத்தானை, கிண்ணியா போன்ற இடங்களிலுள்ள சுமார் 216 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் நெற்செய்கைக்கு பிரதானமாகப் பயன்படுத்தப்படுகிறது.

மேலும் இம்மாவட்ட மக்களின் குடிதண்ணீர் தேவையையும் இக்குளத்திலிருந்தே பெறப்படுகின்றது. இக்குளத்தின் நீர்க் கொள்ளளவு 1 இலட்சத்து 14 ஆயிரம் கன அடிகளாகும், இப் புனர்நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த பின்னர் இலகுவான பாசனமுறை மேற்கொள்ளலாம் எனக் கருதப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பெரிய குளங்களுள் கந்தளாய்க்குளமும் பிரதானமானது என்பது குறிப்பிடத்தக்கது.

(ளி)

# தேர்தல் பிரசார வாகனம் மோதியதில் இரண்டு மாணவிகள் படுகாயம்

மட்டக்களப்பு, மார்ச் 19

மட்டக்களப்பு மகிளூரில் பிரசாரத்திற்காக சென்ற முன்னாள் அமைச்சர் அமீர்அலியின் பிரசார வாகனம் மோதியதில் இரு மாணவிகள் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருபவை வருமாறு:-

மகிளூர் கிராமத்திற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை வேளையில் தேர்தல் பிரசாரத்திற்காக வந்த அமைச்சர் அமீர் அலியின் ஆதரவாளர்களை ஊர் மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து திருப்பி அனுப்பினர். இவர்கள் வந்த மூன்று வாகனங்களும் மக்கள் எதிர்ப்பால் வேகமாக திரும்பிச் சென்றன. இந்நேரம் மாலை வகுப்புக்கு சென்று திரும்பிக்கொண்டிருந்த செல்வி அனுசியா, செல்வி நிவேசியா ஆகிய இரண்டு உயர் வகுப்பு மாணவிகளை இந்த வாகனங்கள் மோதியுள்ளன. இதனைத் தொடர்ந்து மகிளூர் மக்கள் மத்தியில் பாரிய எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இரண்டு மாணவிகளும் தற்போது களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத் தேர்தல் - 2010



தேர்தல் மாவட்டம் இல. 10
யாழ்ப்பாண மாவட்டம்.

சுயேச்சைக் குழு இல. 11

X



தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக
அதனை நன்கு புரிந்து கொண்ட
அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின்
தலைமையைப் பலப்படுத்த
இலங்கை மக்கள் கட்சியில் இணைந்துள்ளேன்.
உங்கள் வாக்கை மாங்கனி சின்னத்திற்கு இடுவதுடன்
விருப்பு வாக்கை எனது இலக்கமான
4 இற்கு அளிக்குமாறு வேண்டுகின்றேன்

வாக்களிக்கும் முறை

X கலாநிதி கந்தையா குணராசா 4
(செங்கை ஆழியான்)

புத்திலங்கை


## வடக்கு -கிழக்கில்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினரான ராஜா குகனேஸ்வரன் சுயேச்சையாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சிவாஜிலிங்கம் புதிய இடதுசாரி முன்னணியின் சார்பாகவும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

இவர்கள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் குறைவே என்ற போதிலும் ஏனைய கட்சிகளின் (குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்) வாக்கு அடித்தளத்துக்கு ஏற்படுத்தப்படும் தாக்கங்கள் அதிகமே.

புளொட் அமைப்பும் வன்னி மாவட்டம் தொடர்பாக இம்முறை வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளது. அதன் தலைவரான தர்மலிங்கம் சித்தார்த்தனின் தலைமையிலான அணியும் கூட, நாடாளுமன்ற ஆசனமொன்றைத் தட்டிக்கொள்வதற்குப் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு வருகிறது.

வவுனியா மாவட்டத்தில் ஆறாயிரம் முதல் பத்தாயிரம் வரையிலான நிலையான வாக்கு வங்கியொன்றைக் கொண்டிருக்கும் அவர்களும் கூட குறைத்து மதிப்பிட இயலாத தொரு குழுவினராவர். *


# தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணி



மக்களெல்லாம்....
மக்களெல்லாம்
தமிழ்த் தேசியத்தின் பக்கம்....
மக்கள் படை என்றைக்கும்
தமிழ்த் தேசியத்திற்கான
முன்னணியுடனே இருக்கும்
என்பதை உணர்த்திட
வாக்களிப்போம்

கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

2

உண்மையின் வடிவம்
உறுதியின் நிலையம்
தமிழ்த் தேசியமே .... தனது
தணியாத தாகமாக
உறுதியோடு பயணிக்கும்
உங்கள் நம்பிக்கை
தலைவன்

கஜேந்திரகுமார்
பொன்னம்பலம்
அவர்களை வெற்றிவாகை
சூட வைப்போம்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் X

(95549) யாழ்.மாவட்ட புத்திஜீவிகள்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி
**யோகநாதன் தாரகா**
(தவசிக்குளப்பு, சாவகச்சேரி)

பிறப்பு
09★05★1992

இறப்பு
18★02★2010

கடந்த 18.02.2010 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்பு மகளின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (20.03.2010) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
சு.யோகநாதன் (தந்தை).
(95999)


## 15 ஆம் ஆண்டு நோக்கி....
# தூரிகை நுண்கலை வளாகம்



வடமராட்சியில் எமது
நவீன சேவை நிலையம்

மணப்பெண் ஒப்பனை, பேஷியல், இமை சீர் செய்தல், முடிநேராக்குதல், முடிசுருளாக்குதல், முடி நிறமூட்டுதல் இன்னும் உங்கள் அழகை மெருகூட்டும் அழகுக் கலைச் சேவைகளுடன் பிறந்தநாள், திருமண, நீராட்டுவிழா ஐசிங் கேக் மனங்கவர் வடிவமைப்பில் பெற்றுக் கொள்ளலாம்

தூரிகை,
ம.ம.வி.வீதி,
நெல்லியடி.
0214901358,
0779480824

(சி/565796)


## 31 ஆம் நாள் நினைவுப் பதிவு

மண்மகிழ
19
★
04
★
1922

கண்நெகிழ
18
★
02
★
2010



அமரர் "கர்மஜோதி"

**இளையதம்பி நடராஜா (ஆசாரியார்)**

மண்ணெல்லாம் போற்ற மலர்வாய் வாழ்ந்தவரே!
மதிநலத்தால் ஓங்கி மைந்தரெமைக் காத்தவரே
தண்ணிலவேதவப்பயனே தாங்கொணா வேதனையில்
தவிக்கவெமை வைத்துநீர் போய்விட்ட மர்மமென்ன?
கண்ணதிலே நீர்சுமந்து கலையமுதே உமையுன்னி
காலமெலாம் வாழ்ந்து உம்பேர் பொறித்திடுவோம்
எண்ணமெலாம் நீரே என்றென்றும் மறவோமே
எந்தாய் இறைபாதம் இனிதே அமைதிகொள்க!

கடந்த 18.02.2010 அன்று சிவபதடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (20.03.2010) சனிக்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மீனாட்சி அம்மன் கோயில் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.
குடும்பத்தினர்.


திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது



# திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்
## தவக்கால ஆற்றுகை
# வெள்ளியில் ஞாயிறு

காலம்: மார்ச் 22-28, 2010
(திங்கள் முதல் ஞாயிறு வரை-7 நாள்களுக்கு)
நேரம்: மாலை 6.45 மணி
(வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணி)
இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு



(திருப்பாடுகளின் காட்சி)

பார்வையாளர்கள் ஆசனங்களுக்கான பதிவுகளை
யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்.
இறைமகனின் பாடுகளின் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
T.P./Fax: 0212222393
(சி/565781)
திருமறைக் கலாமன்றம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பிரதேசங்களின் அபிவிருத்திக்கும் சுயநிர்ணய உரிமை அவசியமானது

## கூட்டமைப்பு வேட்பாளர் சரவணபவன் சொல்கிறார்



வடக்கு-கிழக்கில் நாம் எந்த அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டுமென்றாலும் அதனைச் சுயநிர்ணய உரிமையுடன்தான் மேற்கொள்ள முடியும். அதாவது அபிவிருத்தித் திட்டங்களை நாமே சுயமாக நிர்ணயித்து அவற்றை நிறைவேற்றும் பூரண உரிமை எங்களுக்கு இருக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வேட்பாளரும் உதயன், சுடரொளி பத்திரிகைகளின் நிர்வாக இயக்குனருமான ஈ.சரவணபவன்.

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது பிரசாரக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை ஆவரங்கால் சிவன் கோயிலுக்குத் தெற்குப் புறம் உள்ள வயல்வெளி மைதானத்தில் நடைபெற்றது.

அங்கு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் பேசியதாவது,

காலம் காலமாக எமது போராட்டங்களுக்கு அடியெடுத்துக் கொடுத்தது ஐக்கிய தேசியக்கட்சிதான். இறுதியாக எமது போராளிகளைப் பிளவுபடுத்தும் கைங்காரியத்தைச் செய்ததும் அந்தக் கட்சிதான். ஆனால் பலர் நான் ஐ.தே.கட்சியைச் சேர்ந்தவன் என்று கட்டுக்கதைகளைப் பரப்பி வருகின்றனர்.

ஆனால், நாம் கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக தமிழ்த் தேசியத்துக்கான பாதையில் நடந்து வருவதைப் பலரும் அறிவர். தேசியத்திற்கான எமது கொள்கைகளும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கொள்கைகளும் ஒன்றாக இருப்பதனாலேயே என்னால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைய முடிந்தது.

எமது பத்திரிகை தமிழர்களின் உரிமைகளுக்காகவும் தமிழ்த்தேசியத்திற்காகவும் அஞ்சாமல் குரல் கொடுத்த காரணத்தினால் பலப்பல விதமான அச்சுறுத்தல்களையும் இழப்புக்களையும் சந்தித்து வந்துள்ளது. கடந்த மூன்று வருடங்களில் மட்டும் எமது பணியாளர்கள் அறுவரின் உயிர்களைப் பலி கொடுத்துள்ளோம்.

இதேவேளை தமிழர்களுக்கு எதையாவது பெற்றுத்தர வேண்டுமெனில் அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் மட்டுமே முடியும். இதை நன்கு உணர்ந்தே ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தைப் பிரிப்பதற்காக-உடைப்பதற்காக தற்போது பல சுயேச்சைகளைக் களத்தில் இறக்கியுள்ளார்.

இப்போதைய ஜனாதிபதி இதற்கு முன்னரும் தமிழர்களின் ஒற்றுமையைச் சின்னாபின்னமாக்கி எத்தனையோ பிளவுகளை கனகச்சிதமாகச் செய்துவந்துள்ளார். அந்தவகையிலே பல வருடங்களாக இணைக்கப்பட்டிருந்த வடக்குக் கிழக்கைப் பிரித்துள்ளார். எமது விடுதலைக்காகப் போராடி வந்த போராளிகளைப் பிரித்துள்ளார். இவரது வலையில் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சிக்கவிடாது மக்கள் அனைவரும் தமது வாக்குகளை எமக்கு அளிப்பதன் மூலம் அதிகளவு ஆசனங்களை வழங்க வேண்டும்.

வடக்கின் வசந்தத்தின் மூலம்

தற்போது வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் யாழ். நகரில் உள்ள பல கடைகளைப் பார்த்து இங்கு ஏதோ அபிவிருத்தி நடைபெறுவதாக நினைக்கின்றனர். ஆனால் வடக்கின் வசந்தத்தில் இதுவரை எந்தக் கட்டடமும் புதிதாகக் கட்டப்படவில்லை. ஆனால் பழைய கட்டடங்களுக்கு வர்ணம் பூசித் தீட்டப்பட்ட நிலையே காணப்படுகின்றது. இதுவா அபிவிருத்தி?




நான் தற்போது பல பாடசாலைகளுக்கு விஜயம் செய்து பார்த்தபோது அவை உரிய வசதிகள் எதுவுமற்ற நிலையே காணப்படுகின்றன. உரிய குடிதண்ணீர் வசதிகளற்ற நிலையும் சில பாடசாலைகளில் வேலிகள் இல்லாமலும் உள்ளன. இங்கும் ஓர் அமைச்சர் செயற்படுகிறார். அவர் நினைத்தால் ஏன் இவற்றைச் சீர் செய்ய முடியாதுள்ளது? ஆனால் அவரும் இந்தப் பிரித்தாளும் சூழ்ச்சிக்குள் அகப்பட்டுவிட்டார். அதேவேளை அவரது அணியில் போட்டியிடும் சிலர் ஆளும் கட்சியின் நேரடி வேட்பாளர்களாகவும் போட்டியிடுவதாகக் கூறுகிறார்கள்.

இப்போதைய தேர்தல் அமளிக்குள் தமிழர்களது அபிவிருத்தியை நேரடியாக எதிர்த்துவரும் ஜே.வி.பியினரின் சோமவன்ச, சந்திரசேகரன் போன்றவர்கள் எதிர்வரும் நாள்களில் யாழ்.வர இருக்கிறார்கள். இவர்களது வருகையை தமிழர்கள் புறக்கணிக்க வேண்டும். குடாநாட்டு மக்களின் சொந்த இருப்பிடங்களே பறிபோகின்ற சூழ்நிலை உருவாகிவரும் இக்காலகட்டத்தில் அனைவரும் தமது பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும் - என்றார். (50-11-16)

# வடக்கு - கிழக்கின் எல்லா மாவட்டங்களிலும் போட்டியிடும் ஒரே தமிழ் அரசியல் கட்சி கூட்டமைப்பே

## அவ்வாறிருக்க அது தமிழ்த் தேசியத்தைக் கைவிட்டதாகக் கூறுவது வேடிக்கை



யாழ்ப்பாணம், மார்ச் 19

தாயகக் கோட்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைவிட்டுவிட்டது எனக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. இது முற்றிலும் தவறான கருத்தாகும். வடக்கும் - கிழக்கும் இணைந்ததே தமிழ்த் தேசியத் தாயகம் என்றால், அங்குள்ள எல்லா மாவட்டங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தி தேர்தலில் போட்டியிடும் ஒரேயொரு தமிழ் அரசியல் கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்புத்தான் என்பதிலிருந்து நாம் தாயகக்கோட்பாட்டைக் கைவிடவில்லை என்பதும் தெளிவாகும்.

இவ்வாறு நேற்று முன்தினம் புதன்கிழமை அல்வாயில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டடைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய முன்னாள் மாநகரசபை ஆணையாளரும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு வேட்பாளருமான சி.வி.கே. சிவ ஞானம் தெரிவித்தார்.

சட்டத்தரணி சபா ரவீந்திரன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது, என்னைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியம், தாயகம், தன்னாட்சி மற்றும் சுயநிர்ணய உரிமை ஆகிய கோட்பாடுகளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இறுகப் பற்றிக் கொண்டிருப்பதனாலேயே யாழ். தேர்தல் மாவட்டத்தில் இருபத்தாறு கட்சிகளும் சயேட்சைக் குழுக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மட்டும் குறிவைத்து தாக்கிச் சிதைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன- அப்படியிருந் தும் அவர்கள் தமக்கிடையே ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை; மேலும் பணபலம் எந்த அளவுக்கு ஆதிக்கம் செலுத்துகிறது என்பதை மாவட்டம் பூராவும் ஒட்டப்பட்டிருக்கும் சுவரொட்டிகளே சான்றுபகரும்.

இதற்கும் மேலாக - தமிழ்த் தேசியக் கூட்டடைப்பு வடக்கு, கிழக்கு இணைப்பு தமது மிக முக்கிய அடிநாதக் கொள்கையாக முன்னெடுத்துவரும் இரா. சம்பந்தன் அவர்களைத் தலைவராகக் கொண்டிருப்பதும் அதன் தாயகக்கோட்பாட்டுப்பற்றை வெளிக்காட்டி நிற்கும். வேறெந்தக் கட்சிக்கும் இல்லாத வடக்கு, கிழக்கு இணைந்த தலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே உண்டு.

இந்த தலைமையைச் சிதைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதித்துவ பலத்தை அழித்து எமது உரிமைக் குரலை, கோரிக்கைகளை அழித்துவிடவே தென்னிலங்கை முயல்கின்றது- இதை முறியடித்து தமிழ் பேசும் மக்கள் இத்தனை இன்னல்களுக்கும் உட்படுத்தப்பட்ட போதும் தனது இனத்துவ தனித்துவத்தையும் தாயகத்தையும் விட்டுக்கொடுக்கத் தயாரில்லை என்பதை எடுத்துக் காட்டும் படியாக இந்தத் தேர்தலில் தமது உறுதியான தீர்ப்பைத் தெரிவிக்க வேண்டும். அதைப் பார்த்து தென்னிலங்கையும் உலகமும் வியந்து நிற்கவேண்டும். தமக்குக் கிடைத்த இந்த ஜனநாயக சந்தர்ப்பத்தை மக்கள் சரியான முறையில் பிரயோகிக்க வேண்டும் - என்றார். வேட்பாளர்களான எஸ். குலநாயகம், பொ. ஐங்கரநேசன் அ.விநாயகமூர்த்தி ஆகியோரும் சிறப்புரையாற்றினார்கள்.

# மொனராகலை வேட்பாளர் பெயர் விவகாரம்; ஐ.தே.க. புலனாய்வுப்பிரிவிடம் முறைப்பாடு

கொழும்பு,மார்ச் 19

மொனராகலையில் பட்டியலில் இருந்த வேட்பாளரின் பெயரை " டிப்பெக்ஸ்" பூசி மறைத்து வேறொருவரின் பெயரை உட்புகுத்திய சம்பவம் குறித்து புலனாய்வுப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதம செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

தான் நேரடியாகவே பொலிஸ் புலனாய்வுப் பிரிவிற்குச் சென்று இம்முறைப்பாட்டைச் செய்ததுடன், இதுபற்றிய பூர்வாங்க விசாரணையை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.


அத்துடன், "டிப்பெக்ஸ்" பூசி மறைக்கப்பட்ட இடத்தில் தனது போலிக் கையொப்பம் இடப்பட்டுள்ளது என்றும் அவர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்பீடத்தால் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட வேட்பாளர் பட்டியலில் இருந்த திஸ்ஸ குட்டியாராட்சியின் பெயர் அழிக்கப்பட்டு அவ்விடத்தில் வேறொருவரின் பெயர் கட்சியின் அங்கீகாரம் இன்றி உட்புகுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் ஐ.தே.க. உறுப்பினர் ரஞ்சித் மத்துமபண்டார ஏற்கனவே சகல கட்சிப் பதவிகளில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

தற்போது கொடுக்கப்பட்டுள்ள பொலிஸ் முறைப்பாட்டுக்கு மேலதிகமாக அவர் மீது கட்சி ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் மேற்கொள்ள உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (சி)

# பொதுக் கொள்கையின் கீழ் பட்டதாரிகளுக்கு விரைவில் நியமனங்கள் வழங்கப்படும்

## ஈ.பி.டி.பி. வேட்பாளர் சந்திரகுமார்



யாழ்ப்பாணம், மார்ச்.19

பொதுக் கொள்கையின் கீழ் பட்டதாரிகளுக்கான நியமனங்கள் விரைவில் வழங்கப்படும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் வேட்பாளருமான எம்.சந்திரகுமார் தெரிவித்தார்.

நல்லூர்ப் பிரதேச பட்டதாரிகளைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நூற்றுக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் கலந்துகொண்ட இச்சந்திப்பு, நல்லூர் நாவலர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதுவரையில் யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் நியமனங்கள் தொடர்பிலான பிரச்சினையை நாம் முற்று முழுதாகத் தீர்த்து வைக்கவில்லை என்ற போதிலும் அரசாங்கத்துடன் கலந்துரையாடி, அழுத்தங்களைக் கொடுத்தும் கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி நியமனங்களை வழங்கியுள்ளோம். எதிர்காலத்தில் பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு தொடர்பிலான பிரச்சினைகளை ஒரு பொதுக் கொள்கையுடன் தீர்த்து வைப்போம்.

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஊடாக நியாயமான முறையில் பட்டதாரிகளின் அனுசரணையுடன் எதிர்கால நியமனங்கள் வழங்கப்படும். ஈ.பி.டி.பியினராகிய எமக்கு அரசியல் பலம் அதிகரிக்கும் நிலையில் கடந்த காலத்தை விட வேகமாக இந்நியமனங்கள் தொடர்பில் எம்மால் நடவடிக்கைகளை எடுக்க முடியும் - என்றார். (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்றத் தேர்தல் 2010
## யாழ் மாவட்டம்

—அழிந்து போன விவசாய உற்பத்திகளை திரும்பவும் ஏற்றுமதி தரத்திற்கு தரமுயர்த்துவதற்குத் துணை நிற்பேன்





# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 19

கந்தரோடை, கோட்டன்கட்டு ஞான வைரவர் ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 6 மணிக்கு யாக பூசை, தீபாராதனை, ஸ்தூபிகள் அபிஷேகம் என்பவனவும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஆசியுரை நிகழ்த்துவார். (204)

* * *

நாயன்மார்க்கட்டு வெயிலுகந்த விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (50-204)

* * *

ஏழாலை பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழா நடைபெற்று பி.ப. 4 மணிக்கு கொடியிறக்க நிகழ்வும் இடம்பெறும். (50-204)

* * *

வட்டு.சங்கரத்தை, பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரர் சுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (50-204)

* * *

தாவடி ஸ்ரீ வட பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த குளிர்த்தி நாளை சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது.

குளிர்த்தியை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை பி.ப. 5 மணிக்கு விளக்கு வைத்து தினமும் விசேட பூசை இடம்பெற்று வருகிறது.

இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு விசேட அபிஷேகம் இடம்பெற்று, பி.ப. 4.30 மணிக்கு காளி அம்பாள் அழகிய காராம் பசு வாகனத்தில் எழுந்தருளி கிராம அருள் பவனி வருவார்.

நாளை சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு ஸ்நபன அபிஷேகம், விசேட பூஜை இடம்பெற்று நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூஜை இடம்பெறும். (50-204-115)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

றோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

PACKED BY: Industries Colombo 12

ROYAL T.P 0777277670

அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சீலா
நறுமணப்
பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இலவசம் அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!

எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.


## ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 05
திகதி - 17.03.2010
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: Y | அதிர்ஷ்ட இலக்கம்: 4 | வெற்றி இலக்கம்: 8 1 4 9 0

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இலக்கம் | | | | | | பரிசுத் தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Y | 4 | 8 | 1 | 4 | 9 | 0 | ரூ. 19,163,434.00 | - |
| 1 பரிசு | | 4 | 8 | 1 | 4 | 9 | 0 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | | | 8 | 1 | 4 | 9 | 0 | ரூ. 100,000.00 | 04 |
| 3 பரிசு | | | | 1 | 4 | 9 | 0 | ரூ. 10,000.00 | 36 |
| 4 பரிசு | | | | | 4 | 9 | 0 | ரூ. 1,000.00 | 324 |
| 5 பரிசு | | | | | | 9 | 0 | ரூ. 50.00 | 3198 |
| 6 பரிசு | | | | | | | 0 | ரூ. 20.00 | 30934 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இலக்கம் | | | | | | பரிசுத் தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 8 | 1 | 4 | 9 | | ரூ. 1,000.00 | 33 |
| 8 பரிசு | | | 8 | 1 | 4 | | | ரூ. 100.00 | 331 |
| 9 பரிசு | | | 8 | 1 | | | | ரூ. 50.00 | 3239 |
| 10 பரிசு | Y | | | | | | | ரூ. 20.00 | 12770 |
| 11 பரிசு | Y | 4 | | | | | | ரூ. 100.00 | 1469 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,492,930.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2435631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 19,689,397.00


# கொமர்ஷல் பாங்க் ஓப் சிலோன் பிஎல்சி

## மூத்த பிரஜைகளுக்கு வட்டி மீது 20% போனஸ் கொடுப்பனவுக்கான இலங்கை மத்திய வங்கியின் திட்டம்

மூத்த பிரஜைகள் வைத்திருக்கும் ரூபா வைப்புக்களின் மீது ஈட்டும் வட்டிக்கு 2010 ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து 20% போனஸ் வழங்குவதற்கான திட்டமொன்றை இலங்கை மத்திய வங்கி ஆரம்பித்துள்ளது.

**தகைமையான வாடிக்கையாளர்கள்:**

60 வயதுக்கு மேற்பட்ட, செல்லுபடியான தேசிய அடையாள அட்டையை வைத்திருக்கும் சகல இலங்கைப் பிரஜைகளும் தகைமையுள்ளவர்கள்.

**போனஸ் பெறத் தகுதியுள்ள கணக்குகள்**

வைப்புச் சான்றிதழ்கள், சேமிப்புச் சான்றிதழ்கள் மற்றும் திறைசேரி உண்டியல் வைப்புகள் தவிர்ந்த கீழே பட்டியலிடப்பட்டுள்ள சகல இலங்கை ரூபா வட்டி ஈட்டும் வைப்புக் கணக்குகளும் இத்திட்டத்துக்கு தகுதியுடையவை.

1. சிரேஷ்ட பிரஜைகளின் நடைமுறையிலுள்ள அல்லது புதிய தனிநபர் மற்றும் கூட்டு வைப்பு கணக்குகள்
2. துணைவருடனான மூத்த பிரஜை ஒருவரின் நடைமுறையிலுள்ள அல்லது புதிய கூட்டு வைப்புக் கணக்குகள்
3. 2010 ஜனவரி 1ஆம் திகதிக்கு முன்னர் செயற்பாட்டிலுள்ள, 60 வயதுக்கு கீழ்ப்பட்டவருடனான (துணைவர் தவிர்ந்த) மூத்த பிரஜைகளின் கூட்டு வைப்புக் கணக்குகள்.

(துணைவர் தவிர்ந்த) மூத்த பிரஜையில்லாத வருடன் மூத்த பிரஜைகளினால் 2010 ஜனவரி 1ஆம் திகதிக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட புதிய கணக்குகள் இத்திட்டத்துக்கு தகுதி பெறமாட்டாது.

**போனஸ் அளவு:**

1. மூத்த பிரஜைக்கு ஆண்டுக்கு கூடுதல்பட்சம் ரூ.120,000 என்ற வரையறைக்குள் மாதாந்தம் ஈட்டும் வட்டியின் 20% க்குச் சமமான தொகை போனஸாக அமையும்.
2. இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட மூத்த பிரஜைகள் வைத்திருக்கும் கூட்டு கணக்குகளைப் பொறுத்த வரை போனஸ் பிரித்து தனித்தனி கணக்கிற்கு அல்லது நியமிக்கப்பட்ட கணக்கிற்கு வரவு வைக்கப்படும். கூட்டு கணக்கானது சிரேஷ்ட பிரஜை(கள்) மற்றும் சிரேஷ்ட பிரஜை(கள்) அல்லாதவர் வைத்திருப்பின் சிரேஷ்ட பிரஜை(கள்) பெறக்கூடிய வட்டி மட்டுமே போனஸ"க்கு தகைமையுடையது.

நிலையான வைப்புகள் மீது போனஸ் பெறத் தகைமையுள்ள சிரேஷ்ட பிரஜைகள் போனஸ் தொகையை வரவுவைப்பதற்கு ரூபா சேமிப்பு அல்லது நடைமுறை கணக்கை குறிப்பிட வேண்டும். அவ்விதம் ஒரு கணக்கு குறிப்பிடப்படாதவிடத்து பிரஜையின் சம்பந்தமான கணக்கொன்றுக்கு அல்லது மூத்த பிரஜையின் பெயரின் கீழ் புதிதாக திறக்கப்பட்ட கணக்கிற்கு போனஸை வரவு வைக்கும்.

கணக்குகளைத் திறக்கும்போது தமது தேசிய அடையாள அட்டை இலக்கத்தைச் சமர்ப்பிக்காத, அல்லது (தேசிய அடையாள அட்டை தவிர்ந்த) வேறு அடையாள முறையுடன் கணக்குகளைத் திறந்த சிரேஷ்ட பிரஜைகள், தங்களின் பதிவேடுகளைச் சீரமைப்பதற்காக கணக்குகளை வைத்திருக்கும் கிளைக்கு தேசிய அடையாள அட்டை விபரங்களைச் சமர்ப்பிக்கக் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

இந்த் திட்டத்தின் தேவைகளை அனுசரிக்கும் வகையில் மூத்த பிரஜைக்கு ஆண்டுக்கு ரூ.120,000 க்கு மேலதிகமாக வழங்கப்பட்ட போனஸ் தொகையை தமது கணக்கில் கழித்து மீள்வசூல் செய்ய வங்கிக்கு அதிகாரமளிக்கும் பிரகடனமொன்றினைச் சமர்ப்பிக்கவும் வேண்டும். பிரகடனப் படிவங்களை எமது எந்தவொரு கிளைகளிலும் அல்லது எமது இணையத்தளம் www.combank.lk இலும் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணமாகப் பூர்த்திசெய்யப்பட்ட படிவம் 2010 மார்ச் 31அன்று அல்லது அதற்கு முன் ஏதாவதொரு கிளைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் அல்லது கீழ்க்கண்ட முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**பிரதான முகாமையாளர் ஐ. சி. பி. எஸ்**
கொமர்ஷல் பாங்க் ஓப் சிலோன் பிஎல்சி
இல.21, பிரிஸ்டல் வீதி,
கொழும்பு 01.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் தயவுசெய்து அண்மையிலுள்ள கிளையை நாடுங்கள்.

COMMERCIAL BANK


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கொடை நிறுவனம்

# ...ம்பிகை மண்டப

# ...றப்பிதழ்- 19.03.2010

## ...க் காணும்

## ...திரன்



...லும், மற்றவர்களாலும் பாராட்டப் படுவதும் செய்தியாக

...ந்தபோதும் தன் னாட்டுக்கு மட்டுமன்றி இந்தியாவின் ...களுக்கும் அன்னாரின் கருணைப் பார்வை கிடைத்தது

...தும் எம் மனித...த்தின் மாணிக்கமாக வந்துதித்த ... தனது சொந்த உழைப்பின் உதவிகளை இலங்கையின் ...வாழ்வாதாரத்தினை உயர்த் தியது, உயர்த்திக் கொண் ...ள்ளது.

★ மிக மிக வறிய கிராமங்கள் பலவற்றில் மலசல கூடங்களை வழங்கி சுற்றுச் சூழல் சுகாதாரத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளது. இதில் வெற்றியும் கண்டுள்ளது.

★ புற்று நோயாற் பாதிக்கப்பட்டு மன உளைச்சலுடன் இருக்கும் நோயாளிகளில் உதவி தேவைப் படுபவர்களுக்கு மாதாந்தம் ரூபா 500/= வழங்கப்பட்டு வருகின்றது.

★ ஆண்களின் துணை இன்றி பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களுக்கு, தங்கள் சொந்த வருமா னத்தில் நிற்கும் வரை உதவிப்பணம் வழங்கப்பட்டுவருகின்றது.

★ சுழற்சிக் கடன்கள் பல வழங்கப்பட்டு வருகின்றது.

★ தொழில் வாய்பின்றி இருக்கும் பெண்களுக்கு இலவச தையல் வகுப்புக்கள் நடத்தி உயர்வடையச் செய்யப்பட்டுள்ளது.

★ ஆடை தயாரிப்புத் தொழிலில் பெண்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

★ சூழற் சமநிலையினைப் பாதுகாக்கும் நோக்குடன் தென்னம் பிள்ளைகள், விதைகள், நீண்டகாலப் பயிர்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

★ பேருவளையைச் சேர்ந்த 50 வறிய மாணவர்களுக்கு மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மரக்கார் தலைமையில் இன, மொழி, பேதமின்றி, தியாகி அறக்கொடை நிலைய உதவிகளை வழங்கியுள்ளார். இதனால் அம் மாணவர்கள் உயர் வடைந்துள்ளனர். வவுனியாவில் மூவினத்தையும் சேர்ந்த 110 மாணவர்களுக்கு கல்வி கற்பதற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ முதியோர்களில் தெரிவு செய்யப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்வடையச் செய்வதற்கான உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

★ முதியோர்களில் தெரிவு செய்யப்பட்ட சிலருக்கு ஆரோக்கியம் தரும், ஆயுள்வேத மூலிகை முறையில் தயாரிக்கப்பட்ட, சத்துநிறைந்த ஆரோக்கிய சத்துணவு வாராந்தம் வழங்கப்பட்டுவருகின்றது.

★ நல்லூரில் தாட்சாயினி என்ற பெயரில் மருத்துவ நிலையம் அமைத்து ஏழை மக்களுக்காக செயற் படுத்தப்பட்டு வருகின்றது.

★ உள்ளக ரீதியில், யுத்தத்தினாலும், இயற்கை அனர்த்தங்களாலும் இடம் பெயர்ந்த மாணவர்களுக்கும் மக்களுக்கும் தேவையான உதவிகள் பல லட்ச ரூபா செலவில் செய்யப்பட்டது.

★ 2009 ஆம் ஆண்டின் வன்னி இடப்பெயர்வின் இடைத்தங்கல் முகாங்களில் கல்விக்கு தவித்த மாணவர்களுக்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கையின் பிரபல ஆசிரியர்கள் மூலம் கல்வி புகட்டப்பட்டது.

...ந்துள்ள
...மாணிக்கப்பட்ட
...வெள்ளிக்கிழமை
...அ.வேதநாயகம்
...ள்ளுமாறு
...ம்.

★ 2006 ஆம் ஆண்டு கீழ் வரும் தரத்தில் உள்ள பெருமளவானவர்களுக்கு தியாகி அறக்கொடை நிறுவனம் ரூபா 500 உதவியளித்து மகிழ்ந்துள்ளது.

1- புற்றுநோயாளர்கள், காசநோயாளர்கள், கால் ஊனமுற்றவர்கள், கண்பார்வை குறைந்தவர்கள், மன நோயாளர்கள், பெற்றோரை இழந்த சிறுவர்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், கணவன் நோயாளி யாக உள்ள குடும்பத்தினர், பாடசாலை செல்லாத சிறுவர்கள் ஆகியோர்.

★ விதவைகளுக்கும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்களுக்கும், அவர்களது சுயதொழிலை மேம்படுத்தும் நோக்கத்துடன், ஆடு, மாடு, கோழி வளர்ப்புக்களுக் கும், வீட்டுத்தோட்டம் போன்ற சிறு தொழில்களை ஆரம்பிப்பதற்கும் வட்டியில்லாக் கடன்களாக ஏறக்குறைய 110 பயனாளிகளுக்கு உதவி வழங் கப்பட் டதுடன் தொடர்ந் தும் வழங்கப்பட்டு வருகின்றது.

★ பெற்றோரை ஏதோ வகையில் இழந்த பெண் குழந்தைகளுக்கு சட்டப்படியான நீதிமன்ற உத்தரவுக் கமைய குழந்தைகள் பாதுகாப்பு நிலையம் அமைத்து நீண்ட நாள்களாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

★ சுனாமி, நிசாபுயல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளும் ஒத்தாசைகளும் வழங் கப்பட்டது.

★ பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் உயர்வுக்காக தையல் மெசின்கள் வழங்கப்பட்டுள்ளது.

★ பாடசாலை மாணவர்களுக்கு சங்கீத உபகரணங்கள், சீருடைகள், கழுத்துப் பட்டிகள், பாதஅணிகள், தளபாடங்கள், தற்காலிக கூடங்களுக்கான மூலப் பொருள்கள், பல்லாயிரம் லீற்றர் கொள்ளளவுடைய பிளாஸ் ரிக் தண்ணீர்த் தாங்கிகள் வழங்கப்பட்டது.

★ காது கேட்காத , கண்தெரியாத விசேட தேவை உடையவர்களுக்கான உதவிகளும் வழங்கப்பட்டு வரு கின்றது.

★ கச்சாய் பெண்கள் கிராம அபிவிருத்தி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட மிருகங்களுக்கான மிருக வைத்திய உதவி வழங்கப்பட்டது.

★ பல்வேறு கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தியாகி அவர்களின் உதவி மூலம் நிதி பெற்று தமது கிராமப் பெண்களின் வாழ்வாதாரத்தினை உயர்வடையச் செய்துள்ளனர்.

**1- அளவெட்டி மேற்கு பெண்கள் அபிவிருத்திச் சங்கம்**
**2 - மல்லாகம் பெண்கள் கிராம அபிவிருத்திச் சங்கம்**
**3- வெள்ளாம்போக்கட்டி கிராம அபிவிருத்திச் சங்கம்**
**4- கச்சாய் பெண்கள் அபிவிருத்திச் சங்கம் போன்றன.**

★ தற்போது சமுதாயத்தில் ஆதரவற்றிருக்கும் வயோதிபர்களின் சீரிய வாழ் வாதார மேம்பாட்டிற்காக ஏறக்குறைய 250 பேருக்கு மாதாந்தம் ரூபா 500 வழங்கப் பட்டு வருகின்றது.

## தியாகி அறக் கொடை நிலைய பல்பொருள் வாணிபம்

தியாகி அவர்களின் கடும் முயற்சி காரணமாக தனது ஓய்வு நேரம் முழுவதையும் வேலை நேரமாக்கி அதில் இருந்து கிடைக்கும் வருமானத்தினை மேற்காட்டப்பட்ட பல்வேறு வேலை திட்டங்கள் சிறப்பான முறையில் நடை முறைப்படுத்திக் கொண்டு செல்வதற்கு உதவி புரிகின்றது. ஆயினும் ஒரு மனித வலுவின் காலம், வரையறைக்கு உட்பட்டது. அவ்வாறான வரையறைகள் செயற்படும் காலத்திலும், வள்ளல் தியாகி அவர்களினால், ஆரம்பிக் கப்பட்ட பல நூற்றுக் கணக்கான செயற்திட்டங்கள் செயலி ழக்கக் கூடாது என்ற தீர்க்க தரிசனமான உணர்விற்கு மதிப்பளித்து தியாகி அவர்கள் தொடர்ந்தேர்ச்சியான வருமானம் ஒன்ற ஈட்டித்தரக் கூடிய கட்டுப்பாட்டு விலை வர்த் தக நிலையத்தை ஆரம்பித்தது எவருக்கும் தோன்றமுடியாத வலுவான முடிவாகும்.

இந் நிறுவனத்தின் இரண்டாவது இலக்கு நிறுவனத்தை நாடி வரும் மக்களுக்கு தர மான நேர்த்தியான பொருள்களை அவர்கள் விரும்பத்தின் படி எடுக்க வைப்பதுமாகும்.

அது மாத்திர மன்றி ஆதரவற்ற, நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு தமது வாழ்வாதாரத்தை உயர்வடையச் செய்யக் கூடிய வருமானம் தரும் தொழில் ஒன்றை பெற்றுக்கொள்ள வாய்ப்பளிப்பதாகும். இதன் அடிப்படையில் இந் நிறுவனத்திலும் நிறுவனம் சார்ந்த ஏனைய துறையிலும் ஏறக்குறைய நாற்பது பணியாளர்கள் தொழி லாள ராகவும்,அதற்கு மேலாக நிறைவான சேவையாகவும் செய்து வருகின்றமை பார்ப்போர் எவராயினும் நெஞ்சம் நெகிழ்வர்.

இந் நிறுவனம் பல பிரிவுகளைக் கொண்டதாக இயங்கி வருகின்றது.

**★ T.C.T. ஆடை தயாரிக்கும் நிலையம்**
**★ T.C.T. பல்பொருள் விற்பனை நிலையம்**
**★ T.C.T. உற்பத்தி நிலையம்**
**★ T.C.T. உல்லாசப் பயணிகள் தங்ககம்**
**★ T.C.T. யின் சொர்ணாம்பிகை மண்டபம்.**

## T.C.T. பல்பொருள் வாணிபம்

இந்நிறுவனம் 25.03.2005 அன்று மாண்பு மிகு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சந்திரசேகரன் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. அன்றிலிருந்து மக்கள் சேவையை முன்னிறுத்தி இதன் பணிப்பா ளர் திரு செ.கமலநாதன் அவர்களும், அவரது செயற்குழு உறுப்பினர்களும் செயற்பட்டு வருவதுடன் உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் கொள்வனவிலும் விற்பனையிலும் கூடிய கவனம் செலுத்தி வருவதுடன் அறக்கொடை நிறுவனம் தொடர்ந்து இயங்குவ தற்கான நிதியினையும் உழைப்பின் மீதியாகப் பெற்றுவருகின்றது.

இந்நிறுவனத்தில் கடமைபுரிபவர்களின் இனிமையான வரவேற்பும் கனிமையான மொழிநடையும் யாழ்.குடாநாட்டின் வேறெந்த அங்காடிகளிலும் இல்லை என்ற உணர்வோடு நுகர்வோர்கள் உள்ளேவந்து நிறைந்த மனத்திருப்தியுடன் வெளியே செல்வதைப் பலமுறை அவதானித்திருக்கின்றேன். மற்றவர்கள் பேசக் கேட்டிருக்கின் றேன். இது தியாகி அவர்களின் நிறைவான மனதிற்குக் கிடைத்த வெற்றியாகும்.

## T.C.T. சொர்ணாம்பிகை மண்டபம்

திரு.வாமதேவா- சொர்ணாம்பாள் தம்பதிகளின் அருமைப் புதல்வராகத் தோன்றி யவர்தான் தியாகி தியாகேந்திரன் அவர்கள். தர்மத்தின் வழி அறநெறிவாழ்வு வாழ்ந்த இவர்கள், தமது புதல்வரின் இன்றைய நிலை கண்டு களிக்க தந்தை இல்லையாயி னும் தாய் மனம் மகன் கொடைகண்டு பூரிக்கும் என்பதில் ஐயம் இல்லை.மகன் தியாகி போன்று தாயும் கருணை உள்ளம் கொண்டவர். தன் மகன் தர்மத்தின் வழி நிறை வான காரியங்களைச் செய்து வந்த போதும் ஒரு குறைதான் மனதை வாட்டுவதை மகன் அறிய விளம்பியதனால் மலர்ந்தது தான் அம்மா பெயர் அமைந்த மங்கள வைபவங்களுக்கான மண்டபம். வலுவிழந்தவர்கள் தங்கள் சலுகை அடிப்படையில் நிகழ்வு களை நடத்த தனது இடத்தில் ஒரு நிலையம் வேண்டுமென்பதை உணர்ந்து சகல வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டிருக்கும் மண்டபம் 19.03.2010 வெள்ளியன்று பி.ப.2 மணிக்குத் திறந்து வைக் கப்படும் போது பூரிப்படையும் தாயுள்ளத்தின் உயர்வை எங்கனம் நாம் மதிப்பிட முடியும். முடியவே முடியாது.

மேற்கூறப்பட்ட திட்டங்கள் யாவும் பல கோடிக்கணக்கான ரூபா முதலீட்டில் செய் யப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் திரு.வாமதேவா தியாகேந்திரன் ''தியாகி'' அவர்கள் இட்ட கொடை யாண்மை விதை தொட்ட இடமெல்லாம் முளைத்து ஆல்போல் கிளைபரப்பி, மிகப் பரந்த விருட்சமாகி,விழுதூன்றி பாதுகாப்பு எடுத்து மற்றவர்களுக்கும் உற்றார்க்கும் உறுதுணை நிற்பது கண்டு நெகிழ்கிறதே பலர் மனம் காண்கின்றேன் மனக்கண் ணால்.

கல்விக்கு,வறுமைக்கு, அறிவுக்கு, சிகிச்சைக்கு, தொழிற்பயிற்சிக்கு,வாழ்வின் எழுச் சிக்கு வழிசமைத்த தியாகி கொடை மழையின் கொடையை விட அதிகமென்றே கூறலாம்.

வசதி படைத்த பலர் தமது வருமானத்தை மேலும் பெருக்கி, சமுதாய நலனுக்காக, அவர் தம் உயர்ச்சிக்காக எதனையும் செய்யாது. சமுதாய சொத்துக்களைச் சுரண்டி, உறிஞ்சி மேலும் பாவத்தைச் சேர்ப்பதை நாம் கண்டிருக்கின்றோம். இறைவனால் வழங் கப்பட்ட செல்வத்தை எப்படி ஏன், செலவு செய்கின்றோம் என்பதனைத் தெரியாது வாழ்ப வர்களே நம்மிடையே அதிகம் உள்ளனர். இருப்பதைப் பகிர்ந்து மற்றவர்களும் வாழ, வாழ் வில் உயர, அவர்களிடம் இருக்கும் திறமையைப் பயன்பெறவைக்க வழிய மைத்து நிற்கும் கொடையாளர்கள் சிலரையே எமது சமுதாயத்திற் காணமுடியும். அதில் தியாகேந்திரன் [தியாகி] அவர்களும் ஒருவராகிவிட்டமை தமிழ் இனத்துக்கே பெருமை சேர்க்கும் விடய மாகும்.

**வாழ்க அவர் பணி**
**சிறந்து ஓங்குக**
**தியாகி வாழ்வு**
**என வாழ்த்துகிறேன்.**

**மாணிக்கராசா** கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
(யாழ். வலயம்) நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகச் சிந்தனைகள்

இறைவன் மட்டுமே பூரணத்துவம் உடையவன். அவனது படைப்பான இந்த உலகில் முழுமை, நிறைவு என்பதை எல்லாவற்றிலும் காணமுடியாது. இவை அமையப்பெற்ற மனிதர்களும் இல்லை. அமைப்புக்களும் இல்லை. உள்ளதை உள்ளபடி ஏற்றுக் கொள்வதே பொருத்தம்.

எல்லாவற்றிலும் நல்ல அம்சங்களும் உள்ளன. நல்லது அல்லாதவையும் உள்ளன. இவற்றுள் நல்ல தன்மைகள் மிகுதியாக உள்ளவற்றைத் தேர்ந்தெடுத்து அவை மூலமாக நம்மைத் திருத்தி மேம்படுத்திக் கொள்ளப் பழக வேண்டும்.

வெளியிலிருந்து உதவியை எதிர்பார்ப்பதைவிட நமக்கு நாமே உதவும் பழக்கமே சிறந்தது . ஆனால் இதன் விளைவாகச் சுயநலத்தைப் பெருக்கிக் கொள்வது தவறாகும். சுவாமி பிரம்மானந்தர், உங்கள் உள்ளத்தையே உங்கள் குருவாகக் கொள்ளுங்கள்'' என எங்களுக்குக் கூறுவதுண்டு.

நம் உள்ளம் நமக்குக் குருவாக இருக்க வேண்டும் என்றால் அது தூய்மையாக இருக்க வேண்டும். நம்முள்ளே இருக்கும் எல்லா ஆசான்களுக்கும் ஆசானாகிய ஆன்மாவுடன் தொடர்பு கொள்ளத்தக்க அளவுக்குத் தூய்மையாக இருக்க வேண்டும்.

இதுவே நான் உங்களுக்குத் தருகின்ற சிறந்த அறிவுரை, நம்மால் ஒன்றுமே முடியாது என்று எண்ணி எண்ணி நம்மை நாமே பலவீனர்களாக்கிக் கொள்வது தவறாகும். எல்லாவற்றுக்கும் வெளியிலிருந்து உதவியை எதிர்பார்த்து வாழ்வதை விட்டுவிட வேண்டும். நமக்குள்ளே ஒளிவீசுகின்ற குருவை உள்ளன்புடன் பிரார்த்திக்க வேண்டும். இருட்டினுள் ஒளி பிறக்கும். நமக்கு அந்த ஒளி சரியான வழியைக் காட்டி உதவும்.

பிறர் இன்பம் கண்டு நீ மகிழப் பழகு.

நம் எல்லோரிடமும் நல்ல தன்மைகளும் குறைகளும் இருப்பது உண்மை. அவற்றை நாம் பரிசீலனை செய்தால் குறைகளைவிட நிறைகளே மிகுதியாக இருப்பது தெரியவரும். நாளடைவில் இந்தக் குறைபாடுகளையும் நீக்கிவிட வேண்டும்.

இந்தக் குறைபாடுகளைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் உனக்கு உற்சாகக் குறைவு ஏற்படலாம். ஆனால் கடந்த சில ஆண்டுகளில் உன்னிடமே எத்தனை நல்ல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இதை நினைத்துப் பார்க்கையில் உனக்குப் புதியதொரு நம்பிக்கை பிறக்கும். இப்படியே திருத்தமாக வாழ்ந்து வந்தால் மற்றக் குறைகளையும் களைந்துவிடலாம் என்ற உறுதி பிறக்கும்.

இறைவன் உனக்கு என்றும் துணையாக இருக்கிறான் என்ற உணர்வோடு உளமாரப் பிரார்த்தனை செய்து கொண்டும், முழுமனத்தோடு செய்யும் பணிகளைச் செய்து கொண்டும் வாழப் பழக வேண்டும்.




இறைவன் எனும் சக்தியிடமிருந்து இவற்றைச் செய்யும் திறமையைப் பெறவும் பழக வேண்டும். இப்படியே வாழப்பழகினால் உங்கள் வாழ்க்கை ஆன்மீக மயமாக மாறிவிடும். உங்கள் கனவு உங்கள் எதிர்பார்ப்பினை விடப் பெரிதும் உயர்ந்த தரத்தில் அமைந்துவிடும்.

நமது இலட்சியம் மிகப் பெரியது. மிக உயர்ந்தது. அதை நெருங்க நெருங்க இன்னும் எத்தனை தூரத்தைக் கடந்து செல்ல வேண்டும் என்பது நமக்குப் புலப்படுகிறது. இது நன்மைக்கே ஏனென்றால் நாம் மேலும் மேலும் முயல்வதற்கு இது தூண்டு கோலாக அமையும்.இந்த முயற்சி செய்வதில் நமக்குக் கிடைக்கும் சிறிதளவு இன்பம் முடிவில் நமக்குக் கிடைக்க இருக்கும் பேரின்பத்தை நினை வூட்டும். நாம் மேலும் முயன்று முன்னேற அதுவே தூண்டு கோலாக அமையும்.

## தெய்வீகச் சொற்பொழிவு

திருகோணமலை காளி அம்பாள் கோயிலில் இன்று வெள்ளிக் கிழமை மாலை 6 மணிக்கு இந்து இளைஞர் மன்ற ஆதரவில் நடைபெறவுள்ள உற்சவத்தில் யாழ்ப்பாணம் சிவநெறிக்கலா நிதி இராசையா ஸ்ரீதரன் ''அம்பிகையின் அருள்'' என்னும் பொருளில் தெய்வீக சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (ஒ)



ஏழாலை மத்தி, ஏழாலை
வசந்தி கோவிலென விளங்கும்
அருள்மிகு பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்

## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2010

கொடியேற்றம் - இன்று (19.03.2010) வெள்ளி ந.ப. 12.00 மணி
தீர்த்தோற்சவம் - (29.03.2010) திங்கட்கிழமை மாலை 4.00 மணி

மஹோற்சவ குரு: சிவஸ்ரீ தியாக கெங்காதரக்குருக்கள்

05.04.2010 குளிர்த்தி பூசை மிகச் சிறப்பாக நடை பெறும்.

✱ கற்பூரச்சட்டி, பாற்காவடி நேர்த்தி செய்வோர் முன்கூட்டியே அறியத்தரவும்.

அடியார்கள் அனைவரும் வருகை தந்து அம்பாளின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

(95657) வசந்தி அம்மன்.

## இலங்கை மின்சார சபை-யாழ்.பிரதேச அலுவலகம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

திருத்த வேலைகள் காரணமாக 20.03.2010 சனிக் கிழமை காலை 08.30 மணி தொடக்கம் மாலை 5மணி வரை யாழ்.குடாநாடு முழுவதும் மின் விநியோகம் தடைப் பட்டிருக்கும் என்பதை மின்பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் வேலைகள் முடிவுற்றால் உடன் மின்சாரம் வழங்கப்படும்.

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

பிரதேச மின்பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ்.பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

''சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்குக் கைகொடுக்கும்''
இலங்கை மின்சார சபை (சி/565902)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

அ/இ/விஸ்வப் பிரம்ம சங்கம், யாழ்ப்பாணம்

## பொதுக் கூட்டம்

நாளை மறுதினம் நாளை (21.03.2010) ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு அங்கத்தவர்களும் விஸ்வப் பிரம்ம சமூகத்தவர்களும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

அ/இ/வி/பி/சங்கம்,
213/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (95847) செயலாளர்.

## முக்கிய அறிவித்தல்

பூநகரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. எனவே புதிதாக அமைக்கப்படவுள்ள/ திருத்தம் செய்யப் பட வேண்டியுள்ள கட்டடங்கள், வியாபார நிலையங்கள் அனைத்தும் பிரதேசசபையின் அனுமதியைப் பெற்று செயற்படுமாறு கேட்டுக்கொள்கிறேன். அனுமதியின்றி செயற்படுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதோடு கட்டடங்கள் இடித்து அகற்றப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

க.தனபாலசிங்கம்,
விசேட ஆணையாளர்,
பிரதேசசபை, பூநகரி. (சி/565789)

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சிப் பிரதேச செயலர்
திரு.செ.ஸ்ரீநிவாசன் அவர்களின் பாசமிகு மாமி

### திருமதி குமாரு மீனாட்சி

அவர்கள் 12.03.2010 அன்று அமரத்துவம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவருக்கு இதய பூர்வமான அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதேச செயலகம், முகாமையாளர்களும்
தென்மராட்சி, சாவகச்சேரி. சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும். (95654)

## முதலாம் வருட நினைவுதினம்

மண்ணக வாழ்விற்கு 14 . 10 . 1938



விண்ணக வாழ்விற்கு 19 . 03 . 2009

### திருமதி மரியாஸ்ரெலா சிறில்

(இளைப்பாறிய ஆசிரியை)

''உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்
உயிர் வாழ்க்கையில் என்னில் விசுவாசம்
கொள்பவன் எவனும் ஒருபோதும் சாகான்''
-இயேசு கிறிஸ்து (யோவான் 11:25)

42/1,கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி.
(நாரந்தனை மேற்கு,ஊர்காவற்றுறை) (95659) குடும்பத்தினர்.

## எமது இன .....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

நம்பகத் தன்மையுடையதுமான ஒரு கட்டமைப்பு இதற்காக உருவாக்கப்பட வேண்டும்.

கே: இன்று நாம் எதிர்கொள்ளும் பண்பாடு, தொழில், நிலம் சார்ந்த நெருக்கடி கள் குறித்து சொல்லுங்கள். அதனுல் விளையப்போகும் அல்லது எமது சமூகம் எதிர் கொள்ளப்போகும் விபரீதங்கள் குறித்து குறிப் பிடுங்கள்.

ப: எமது மக்கள் எமக்கென தனியான பண்பாட்டு, கலாசார விழுமியங்கள் உண்டு என்பதை உணர்ந்து அவற்றை பாதுகாக்க முன்வர வேண்டும் என மிகவும் பணிவன் போடு வேண்டுகிறேன். எமது இழந்த இன அடையாளங்களை அழித்துவிட பல வழிகளில் செயற்பாடுகள் முன்னெடுக்கப் படுகின்றன. சிறுபான்மை இனமே இங்கு இல்லை என்று கூறுவதும் இதன் ஒரு அம்சமே. இப்பொழுதே நாம் விழித்துக் கொள்ளா விட்டால் தமிழினம் என்று ஒன்று இந்த நாட்டில் இல்லை என்ற நிலையை தென்னிலங்கை அரசும், இனவாதிகளும் மிக விரைவில் உருவாக்கி விடுவார்கள். எமது மக்கள் விழிப்படைய வேண்டும்.

கே: கடந்த காலத்தில் யுத்தம் நடந்து கொண்டிருந்த பொழுது களத்தில் அதாவது யாழ்ப்பாணத்தில் நீங்கள் இருந்தீர்கள். அந்த உணர்வையும் அனுபவித்த நெருக்கடிகளையும் பகிர்ந்து கொள்ள முடியுமா?

ப: இத்தகைய கொடுமை, அதிலும் ஒரு பெரிய நிலப்பரப்பல் மக்களும் உட்கட்டமைப்புக்களும், சொத்துக்களும், உடமைகளும் ஒட்டு மொத்தமாக அழிக்கப் பட்டதும் சுமார் முப்பதாயிரக்கு மேற்பட்ட அப்பாவி பொதுமக்களும் மூன்று நாள்களிலும் சாட்சியமின்றி கொல்லப்பட் டதும் என் ஆத்மாவை எப்பொழுதும் வருத்திக் கொண்டிருக்கிறது. அவல ஆத்மாக்களின் மண்ணுக இந்தப் பெரு நிலம் மாறியிருப்பதும் நெஞ்சை நெருடிக் கொண்டிருக்கிறது.

கே: புலம் பெயர்ந்து வாழும் எமது உறவுகளிடம் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

ப: அன்புக்குரிய எமது புலம்பெயர் உறவுகளே உங்களது உறவுகளின் மீள்குடியேற்றம் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் உங்களின் உதவியையும் தாயகம் வேண்டி நிற்கிறது. இனி வரும் காலத்தில் நீங்களும் நாங்களும் இணைந்து இராஜ தந்திரமாக செயற்பட வேண்டும்.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை இராசலிங்கம்



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கு, ஆஸ்பத்திரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இராசலிங்கம் 12.03.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மூத்த மருமகனும், மீனாட்சி அம்மாவின் அன்புக் கணவரும், விக்னேஸ்வரன் (சு.ப. நோ.கூ.ச.), சிவனேஸ்வரன் (சு.ப. நோ.கூ.ச.), மகேஸ்வரன், விக்னேஸ்வரி, சிவனேஸ்வரி(யா/இணுவில் இந்துக் கல்லூரி), சர்வேஸ்வரன்(வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்), சண்முகேஸ்வரன் (கனடா), மகேஸ்வரி, கெங்கேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயசோதி, வில்வராஜன், சச்சிதானந்தன்,விக்னேஸ்வரி, பவானி, புனிதா, கிரிஜா, திருமகள் (கனடா), தர்சினி ஆகியோரின் அன்பு மாமனும், ஐங்கரன், அபிராமி, வைஷ்ணவி ,லிகிதரன், துஸ்சந்தினி, கீர்த்தனா, கிருஸ்த்திகா,கீர்த்திகன், அஜீத், அஜிந்தா, எழிலன், இந்துஜன், கார்த்திகன், விஸ்வாக்சன், பாகினி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, செல்லத்துரை (சோதிடர்), இராசம்மா, செல்லம்மா மற்றும் யோகம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ் சென்ற பாலசுந்தரம் மற்றும் திருமதி மங்கையர்க்கரசி இலகுநாதன், வைத்தீஸ்வரன்(கனடா), திருமதி லீலாவதி செல்வேந்திரம், திருமதி புஸ்பராணி தர்மலிங்கம்(கனடா), நித்தியானந்தன் (கனடா), விவேகானந்தன் (ஜேர்மனி), பாலசோதி (கனடா), காலஞ்சென்ற திருமதி பாக்கியவதி மற்றும் கந்தசாமி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (13.03.2010) சனிக்கிழமை தாவடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரியடி, தகவல்: மனைவி,மக்கள்,
இணுவில் மேற்கு. மருமக்கள், பேரப்பிள்ளைகள் (95656)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த பிரஜைகளுக்கான மேலதிக வட்டி; தற்போது கொடுப்பனவு வழங்கப்படுகிறது

## இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

மூத்த பிரஜைகளால் உரிமம் பெற்ற வங்கிகளில் பேணப்படும் ரூபாவிலான வைப்புக்களுக்கு விசேட வட்டிக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அறுபது வயதிற்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளினால் உரிமம் பெற்ற வங்கிகளில் பேணப்படும் சேமிப்பு மற்றும் நிலையான ரூபா வைப்புக்கள் மீதான வட்டியின் மீது 20 சதவீதமாக மேலதிக வட்டியை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி வருடமொன்றுக்கு ரூபா 120,000 என்ற வரையறைக்குட்பட்டு இந்த வருட ஆரம்பத்தில் இருந்து வழங்க முடிவு செய்யப்பட்டது.

ஜனவரி மாதத்துக்குரிய வட்டிக் கொடுப்பனவு நேற்று முதல் வழங்கப்பட்டு வருகிறது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மேலதிக வட்டி பெறக் கூடிய வைப்புக்களாக -

* மூத்த பிரஜைகளினுடைய ஏற்கனவே உள்ள அல்லது புதிய மற்றும் கூட்டு/தனி சேமிப்பு அல்லது நிலையான ரூபா வைப்புக்கள்.
* வாழ்க்கைத்துணையுடன் கூட்டாகப் பேணும் ஏற்கனவேயுள்ள அல்லது புதிய வைப்புக் கணக்குகள்,
* இவ்வருடம் ஜனவரிக்கு முன்னர் தொழிற்படும் அறுபது வயதிற்குட்பட்ட தனி நபர் அல்லது தனிநபர்களுடன் இணைந்த மூத்த பிரஜைகள் பேணும் கூட்டு வைப்புக்கணக்குகள்.

இவ்வாறு வட்டிவீதங்களைப் பெறும் மூத்த பிரஜைகள் தமது வங்கிக் கணக் கிற்குரிய வைப்புக் கணக்குக்குரிய வங்கிகளில் தொடர்புகொள்ள முடியும் எனவும் இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ஒ-10)

# பண்டத்தரிப்பில் தையல் அழகியல் பொருள்களின் கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 19

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கத்தின் ஏற்பாட்டில் சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் தையல் அழகியல் பொருள்களின் கண்காட்சி பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சங்கானை பிரதேச செயலர் திருமதி தேவநந்தினி பாபு, கிராம அபிவிருத்தித் திணைக்கள மாவட்ட உத்தியோத்தர் திருமதி ந.அ.ஜெயராயன் ஆகியோர் கலந்துகொள்வர். (ஒ-10)

# அழிவடைந்த மாநகரசபை கட்டடத்தை மீளக்கட்டியெழுப்ப திங்கள் அடிக்கல்.

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடுவார்

யாழ்ப்பாணம், மார்ச் 19

அழிவடைந்து சிதைந்து போயுள்ள யாழ். மாநகர சபையின் கட்டடத்தை மீளக்கட்டி எழுப்புவதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 12.20 மணிக்கு சுப நேரத்தில் இடம்பெறவுள்ளது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அடிக்கல்லை நடுவார்.

மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கலந்துகொள்வார்.

சர்வமதத் தலைவர்களின் ஆசியுரை, மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவவின் வரவேற்புரை, வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன் ஆகியோரின் சிறப்புரைகள் என்பன நிகழ்வில் இடம்பெறும். (ஒ-1)

# கிழக்கு மாகாண சபை முதல்வர் டெங்குக் காய்ச்சலால் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 19

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 12 ஆம் திகதி அவர் இந் நோயால் பாதிக்கப்பட்டு மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். நோய் குணமடையாததால் அவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஹெலிக்கொப்டர் மூலம் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டு தனியார் வைத்தியசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டார்.

அவர் தீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட பின்னர் தற்போது குணமடைந்து வருகின்றார் என்று அவரது ஊடகப் பிரிவு நேற்றுத் தெரிவித்தது. (அ-சி)

## அண்மைக்காலத்தில் மீளக்குடியமர்ந்த

# வேலணை, மருதங்கேணி மக்களுக்கு ரூ.25ஆயிரம் கொடுப்பனவுக் கடிதம்

யாழ்ப்பாணம் மார்ச் 19

குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு 'நிக்கொட்' நிறுவனத்தி னரால் வழங்கப்பட்டு வரும் 25ஆயிரம் ரூபா வாழ்வாதாரக் கொடுப்பனவுக்கான அனுமதிக் கடிதங்கள் வேலணை பிரதேச செயலர் பிரிவு, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆகிய இடங்க ளில் குடியேறிய குடும்பங்களுக்கு நாளை வழங்கப் படவுள்ளதாக அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார். வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் 147குடும் பங்களுக்கும், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 545 குடும்பங்களுக்கும் கொடுப்பனவுக்கான அனுமதிக் கடிதங்கள் வழங்கப்படவுள் ளன. எனவே உரியவர்கள் தேசிய அடை யாள அட்டை அல்லது பிறப்புச் சான் றிதழ், குடும்ப அட்டை, வங்கி வைப்பு புத்தகம் என்பனவற்றுடன் சென்று அனுமதிக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஒ-10)

# குடாநாட்டில் நாளை மின் தடை

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்.குடா நாடு முழுவதும் நாளை சனிக்கிழமை மின்விநியோகம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திருத்த வேலைகள் மேற்கொள்ளும் பொருட்டே நாளை காலை 8.30மணி முதல் மாலை 5மணிவரை மின் விநியோகம் தடைப்படும் என்று இலங்கை மின்சார சபையின் யாழ்.பிரதேச அலுவலக பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஒ-14)

---

# விடுதலைப் புலிகள் கேட்டதை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'ஸ்ரெய்ட் ரைம்ஸ்' பேட்டியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

**கேள்வி:** எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் உங்களது கட்சிக்கான வெற்றி வாய்ப்புகள் குறித்து எவ்வாறு மதிப்பிடுகிறீர்கள்? மூன்றில் இரண்டு பெரும்பான்மை சாத்தியமா?

**பதில்:** எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் குறித்து நான் பதற்றமற்ற நிலையில் உள்ளேன்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்பது எனக்கு முக்கியமான விடயமல்ல.

ஏனென்றால், நான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட வேளை என்னிடம் பெரும்பான்மை இருக்கவில்லை. நாடாளுமன்ற சபாநாயகரை எதிர்க்கட்சியினரே நியமித்தனர்.

நான்கு வருடங்களுக்குப் பின்னர் நாடாளுமன்றத்தை நான் கலைத்த வேளை, சபாநாயகர் உட்பட 47 புதியவர்கள் எனது கட்சியில் இருந்தனர். எனக்கு பெரும்பான்மையும் இருந்தது.

ஆகவே, நான் எண்ணிக்கை குறித்து கவலையடையவில்லை. நாங்கள் சிறந்த வெற்றியைப் பெறுவோம்.

எனினும், மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்பது அரசமைப்பை மாற்றுவதற்கு உதவும்.

இந்த விடயத்தில் எதிர்க்கட்சிகள் எனக்கு ஒருபோதும் ஆதரவளிக்க வில்லை.

**கேள்வி:** விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் இன்னமும் செயற்படுகிறார்களா?

**பதில்:-** இலங்கைக்குள் செயற்படுவதை விட, அதற்கு வெளியேதான் அதிகளவிற்கு செயற்படுகின்றனர்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் ஈழத்தை வைத்தே வாழ்க்கை நடத்துகின்றனர்.

அவர்களுக்கென நிகழ்ச்சி நிரல் உள்ளது. அவர்கள் இதில் வாழ்கின்றனர்.

கடந்த காலம் போன்று தமிழர்கள் தற்போது நிதி வழங்க முன்வராததால் விடுதலைப்புலிகளுக்காக வெளிநாடுகளில் நிதி திரட்டியவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக அவர்களைப் பொறுத்தவரை இங்கே ஏதாவது நடக்கவேண்டும்.

**கேள்வி:** நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை குறித்து என்ன சொல்கிறீர்கள்? அதன் அதிகாரங்களைக் குறைப்பீர்களா?

**பதில்:** இதனை நாடாளுமன்றமே தீர்மானிக்கவேண்டும். நாடாளுமன்றம் இவ்வாறான விடயங்களை கடந்த காலங்களில் கையாண்டுள்ளது. ஆகவே, நாடாளுமன்றமே இதனைத் தீர்மானிக்கட்டும்.

**கேள்வி:** நாடாளுமன்றம் நீங்கள் சொல்வதைத் தானே செய்யும்?

**பதில்:** எனக்குத் தெரியும். அவ்வாறே கருதுகிறேன். என்றாலும், சில மாற்றங்கள் நிகழவேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

நாடாளுமன்றத்திற்குப் பதிலளிக்கும் கடப்பாடுடைய ஜனாதிபதி முறையை நான் விரும்புவேன். அல்லது இவை அனைத்தையும் விட்டுவிட்டு நாடாளுமன்றத்திற்குப் பதிலளிக்கும் பிரதமரையும் விரும்புவேன். அல்லது ஓய்வுபெற்று சிங்கப்பூரின் லீ-குவான் யூ போன்று அரசிற்கு ஆலோசனை வழங்க விரும்புவேன்.

ஆனால், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில்லாவிட்டால் யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வந்திருக்க முடியாது.

**கேள்வி:** பூரண நல்லிணக்கத் திட்டம் குறித்து எழுதியிருந்தீர்கள். அதன் அர்த்தம் என்ன?

**பதில்:** இதனையே நான் நம்புகிறேன். சமாதானம் இல்லாமல் அபிவிருத்தி இல்லை. இதேபோன்று அபிவிருத்தி இல்லாமல் சமாதானம் இல்லை.

கிராமமொன்றிற்கோ அல்லது நலன்புரி முகாமிற்கோ சென்று உங்களுக்கு அரசமைப்பு மாற்றம் வேண்டுமா எனக் கேளுங்கள். எங்களுக்கு இருப்பதற்கு வீடு வேண்டும், எனது குழந்தைக்கு கல்வி வேண்டும் என்ற பதிலே வரும்.

இந்தப் பகுதிகளை அபிவிருத்தி செய்தால் புதிய நடைமுறையும், புதிய அரசியல்வாதிகளும் உருவாகலாம்.

இதற்காகவே நான் தேர்தலை நடத்தினேன். வடபகுதி மக்கள் எனக்கு ஆதரவளிக்க மாட்டார்கள் எனத் தெரிவித்திருந்தும் தேர்தலை நடத்தினேன்.

என்றாலும் எனக்குக் கிடைத்த வாக்குகள் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளன.

**கே:-** தீர்வு என்ற வகையில் சமஷ்டி கொள்கை தகுதிவாய்ந்தது இல்லையா? இந்தியா, சுவிட்ஸர்லாந்து போன்ற நாடுகளில் இது பலனளித்துள்ளதே?

**பதில்:-** சமஷ்டி என்பது இலங்கையைப் பொறுத்தவரை மிகக் கேவலமான வார்த்தை. அது பிரிவினையுடன் தொடர்புபட்டுள்ளது.

அரசியலிலிருந்து ஒதுங்குவது அல்லது விலகத் தீர்மானித்தால் சமஷ்டி பற்றிப் பேசுவதே சிறந்த வழி, அதற்குப் பின்னர் அவர்கள் என்னை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

நான் ஓர் அரசியல்வாதியல்லவா? உண்மையான நிலைவரம் என்னவென்றால், இது இந்தியா போன்று பாரிய நாடல்ல. இலங்கையின் வரலாற்றை மறக்க முடியாது.

தற்போது அனைத்து முதலமைச்சர்களும் எனது கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை என்னால் கட்டுப்படுத்த முடிகின்றது.

என்றாலும், அவர்களுக்கு அதிகளவு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் பாதுகாப்புச்சபைக் கூட்டத்தைக் கூட்டுகின்றனர்.

அவர்களுக்கு மேலும் அதிகாரத்தை வழங்கினால் தாங்கள் நினைத்ததை எல்லாம் செய்வார்கள்.

இந்தியத் தமிழர்கள் தமது பகுதிக்கு வரமுடியாது என அவர்கள் தெரிவிக்கவும் கூடும்.

**கேள்வி:-** அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து என்ன கருதுகிறீர்கள்? குறிப்பாகப் பொலிஸ் மற்றும் காணி மீதான அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்குவது குறித்து என்ன கருதுகிறீர்கள்?

**பதில்:-** இதுகுறித்து நாங்கள் ஆராய வேண்டும். 13 ஆவது திருத்தம் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது.

பொலிஸ் அதிகாரத்தைத் தவிர, ஏனையவற்றை மாகாணசபைகளுக்கு வழங்கிவிட்டோம். நிலங்கள் தொடர்பாகச செய்வதற்கு எதுவுமில்லை.

வடக்கில் மாகாணசபை இல்லாத போது என்னால் என்ன செய்யமுடியும்?

எவ்வாறெனினும், மத்திய அரசின் கட்டுப்பாடும் இருக்கவேண்டும்.

நீர்ப்பாசனக் குளங்களைத் தமது நண்பாகளுக்கும் வர்த்தகர்களுக்கும் சிலர் வழங்குகின்றனர். பொலிஸ் அதிகாரத்தைப் பொறுத்தவரை எனது மக்கள் இதனை வழங்கவேண்டாம் என்றே தெரிவிப்பர்.

சோனியா காந்தி உத்தரப்பிரதேசத் திற்குச் சென்றவேளை, என்ன நடை பெற்றது என்பதைப் பாருங்கள். அவரது தொகுதிக்குள் அவரை நுழைவதற்கு அந்த மாநில முதலமைச்சர் அனுமதி வழங்க மறுத்தார்.

அவர்கள் பொலிஸின் கட்டுப்பாட்டிற்காக அடிபணிகின்றனர்.

**இந்தியாவிடமிருந்து பாடம் கற்றுள்ளேன்**

நான் இந்தியாவிடமிருந்து பாடம் கற்றுள்ளேன். இதே தவறை நான் செய்வேன் எனக் கருதுகிறீர்களா?

**கேள்வி:-** விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டனர் எனக் கூறுவீர்களா?

**பதில்:-** இல்லை. செயற்படாமல் இருக்கும் உறுப்பினர்கள் உள்ளனர். குறிப்பாக இலங்கைக்கு வெளியே அவர்கள் உள்ளனர். தலைமைத்துவம் அழிக்கப்பட்டதால் அனைத்தும் முடிவடைந்து விடவில்லை. யுத்தம் முடிவடைந்து ஒன்பது மாதங்களே ஆகின்றன. பயிற்றுவிக்கப்பட்ட தற்கொலைப் போராளிகள் செயற்படாமலுள்ளனர்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் தற்கொலைப் போராளிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை நடத்தினர். அவர்கள் கொழும்பிலும் ஏனைய வெளிநாடுகளிலும் உள்ளனர். பலர் அவர்களைப் பயன்படுத்தலாம்.

**பொன்சேகா ஒரு முட்டாள் மன்னிப்பு வழங்கு சாத்தியம் இல்லை**

**கேள்வி:-** பொன்சேகா குறித்த உங்களது உணர்வலைகள் என்ன? நீங்கள் திட்டமிட்டுள்ள தேசிய நல்லிணக்கத்தின் கீழ் அவரையும் அரவணைக்க முடியாதா?

**பதில்:-** அவர் ஒரு முட்டாள். நவம்பர் 16ஆம் திகதி அவர் இங்கு எனக்கு முன்னால் அமர்ந்திருந்தார். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்புகிறீரா என நான் அவரைக் கேட்டேன். அவர் இல்லையென்றார்; அதுபற்றிச் சிந்திக்கவில்லை என்றார். இறுதியாக என்னைச் சந்தித்த போது கூட அவர் இதுபற்றிக் கூறவில்லை.

நான் அவரிற்கு ஆலோசனை வழங்கினேன். அரசியல், இராணுவத்திற்குரியது அல்ல என்றேன்.

இராணுவத்தில் நீங்கள் உத்தரவிட்டால் அவர்கள் பின்பற்றுவார்கள். அரசியலில் வேறு மாதிரி. உங்களை விமர்சித்தவர்களிடமே நீங்கள் செல்கிறீர்கள் என்றேன்.

அவர் இதுவும் அரசியல்தானே என்றார்.

நான் நீங்கள் அவதானமாக இருங்கள், அவர்கள் ஒருநாள் உங்களைக் கைவிடுவார்கள் என்றேன் -

சரத்பொன்சேகாவிற்கு மன்னிப்பு வழங்கியதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

அவர் தன்னை அரசியலுக்குத் தயார்ப்படுத்தாத முட்டாள்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுக் கடைத் திறப்பு விழா அழைப்பு

*எம்மால் புதிதாக அமைக்கப் பெற்ற*

### 'விக்னேஸ்வரா நகைப் பூங்கா'

என்னும் புதிய கடைத் திறப்பு விழா
இன்று (19.03.2010) வெள்ளிக்கிழமை நண்பகல்
12மணியளவில் நடைபெறவுள்ளது. இவ்வைபவத்தில்
வாடிக்கையாளர், நண்பர்கள் அனைவரையும் கலந்து
கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.205/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தங்கள் நல்வரவை நாடும்
**உரிமையாளர்**
*விக்னேஸ்வரா நகைப் பூங்கா*

(95668)

குறிப்பு: ஆகாய, கடல்மார்க்கமான சர்வதேச பொதிகள் சேவைகளுக்கு
நாடுங்கள் விக்னேஸ்வரா நகைப்பூங்கா

## மயானத்தில் சிரமதானம்

யாழ், மார்ச் 19

உள்ளூராட்சி மறுசீரமைப்பு செயற்றிட்டங்களின் கீழ் சாவகச்சேரி நகர சபையினரின் ஏற்பாட்டில் நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் இந்து மயானத்தில் எதிர்வரும் 30ஆம் திகதி சிரமதானம் நடைபெறவுள்ளது. (ஒ-207)

## நம்பினால் நம்புங்கள் Belive it or not

[illegible]

அழையுங்கள் **வித்தியா**
Home visited
Chemistry

A/L

25 வருட அனுபவம்

சுழற்றுங்கள்
0777730838,
0717730838

வீடுவந்து கற்பித்தல்

G.C.E.A/L (இருமொழிகளிலும்) London edexcell-AS,A2

Biology

**யாழ்ப்பாணம் 20.03.2010** Science Hall (கன்னாதிட்டி)
சனி 1 p.m. Revision Biology, 3 p.m. Revision Chemistry

**வடமராட்சி 21.03.2010** Becon (நெல்லியடி) வசந்தம் (Net) Hall
ஞாயிறு 8 a.m. Revision Chemistry, 10 a.m. Revision Biology

(95877)

சுருக்க வழிகள் அத்துடன் Study Pack, Study guide
Express Yourself Teaching Method.

## வேலை ஆள்கள் உடனடியாகத் தேவை

**துவிச்சக்கர வண்டி (Bicycle)**
**கழற்றிப் பூட்டக் கூடிய**
**வேலை ஆள்கள் தேவை.**

குறிப்பு:- ஒரு துவிச்சக்கர வண்டி கழற்றிப் பூட்ட ரூபா 500/=
இடம்:- கிளிநொச்சி
★ தங்குமிட வசதியும் உண்டு.

**தொடர்புகளுக்கு:-**
**0772336771**
**0719457457**
**0716903510**
**0717310202**

(95682)

## காசாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் ஹோட்டல் ஒன்றுக்கு அனுபவம் வாய்ந்த காசாளர் தேவை. நேரம் காலை 7.30 a.m. - 8.30 p.m. சம்பளம் நேரில் பேசித் தீர்க்கலாம். உடன் தொடர்பு கொள்ளவும். T.P. 0774714636 (95680)

## சாரதி தேவை

உள்ளூரில் பொருள்கள்
டெலிவரி செய்வதற்கு
லொறிச்சாரதி தேவை.
சாரதி அனுமதிப்பத்திரத்துடன்
நேரில் வரவும்.

**ஜமுனா பர்னிச்சர்**
181, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 1092
0777422604

(95670)

## தவறிவிட்டது

203-9329 இலக்கமுடைய முச்சக்கர வண்டியின் வாகன அனுமதிப்பத்திரம் நல்லூருக்கும் இருபாலைச் சந்திக்கும் இடையில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
ரவி ரெயிலர், கோண்டாவில் வீதி, இருபாலைச்சந்தி.
தொ.பே.இல. 0778575184 (95675)

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தில் கடமை ஆற்றிவரும்
குணேஸ்வரனின் அன்புத் தந்தையார்

### சின்னப்பு பொன்னுத்துரை

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வடமாகாணம்.
மாகாண காணி ஆணையாளரும்,
(95676) உத்தியோகத்தர்களும்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பன் குணேஸ்வரன் அவர்களின் அன்புத்
தந்தையார்

### சின்னப்பு பொன்னுத்துரை

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது
ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்,
ரகு, வேல், சோபி, மயூரன், ரமேஸ், தர்மா.

(95677)

## 31ஆம் நாள் நினைவு ஆராதனை



### செல்லர் தங்கராஜா

மலர்வு
22.02.1957



உதிர்வு
17.02.2010

இன்று (19.03.2010) வெள்ளிக்கிழமை முற்பகல்
11மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் நினைவு
ஆராதனையிலும், தொடர்ந்து இடம்பெறும் மதிய
போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்,
நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

1ச் றோட், உடுவில், சுன்னாகம். (95671) **குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது செயற்குழு உறுப்பினரும் வர்த்தகத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய வி.சிறீதரன் அவர்களின் தந்தை

### தர்மிமுத்து விநாசித்தம்பி

அவர்கள் 18.03.2010 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றது.

யாழ். பல்கலைக்கழக
(95673) ஆசிரியர் சங்கம்

## மரண அறிவித்தல்கள்



### பிலோமினா சேவியர்

2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாற்சதுர சுவிசேஷசபை விசுவாசியாகிய பிலோமினா சேவியர் 17.03.2010 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் யாழ்ப்பாணம், 2ஆம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற இராஜேந்திரம்-கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், இராசதுரை- செல்லம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சேவியரின் (சிறைச்சாலை உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், செல்வக்குமார் (ஜேர்மனி), றோகினி, யோகராணி (உபதபால திபர்), சறோஜினி (ஆசிரியர், கொழும்பு மத்திய இந்து மகா வித்தியாலயம்), குமுதினி, ஜெசிக்கா (சவுதி) ஆகியோரின் அன்புத் தாயாரும், புளோரன்ஸ், சிவராஜா, உதயராஜ், அன்ரன், மரியதாஸ் (டோகா), சிறிராஜசேகரன் (சவுதி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சட்டத்தரணி பிரான்சிஸ், பொன்ராஜா, அருளப்பா மற்றும் இம்மானுவேல், ஆரோக்கியநாதன், ஜோஜினா (அவுஸ்திரேலியா), மரியநாயகம் (பாலு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சியாமா, யுகதீஸ், சங்கீதா ஜனுசன், ஜனுசியா, ஜொயல், லிசானி, றொசானி, சலோனி, சாலினி, எலன், அன்று, யோசுவா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சமீராவின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் இன்று (19.03.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணியளவில் நடைபெற்று பூதவுடல் இருபாலை இராஜவீதியில் உள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

189, 2nd Cross Street,
Jaffna.
Tel: 0213218858,
0773296407

(சி/565913)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 05 ★ 02 ★ 1945



விண்ணில் 17 ★ 02 ★ 2010

அமரர்

### மு.க.சங்கரப்பிள்ளை துரைரெத்தினம்

(நேரக்கணிப்பாளர், நயினாதீவு-குறிகாட்டுவான் தனியார் படகு சேவை, முதலாம் வட்டாரம், நயினாதீவு)

அன்பிற்கோர் தெய்வமே!
பண்பின் திருவுருவே!
பாசத்தின் புகலிடமே
சொரிதரும் மக்கள் சேவைசெய்தாய்
குலமயம் ஓங்கச் செய்தாய்
அன்பினால் அரவணைத்தாய்
சேவை முடிந்ததென-இடையே
தவிக்கவிட்டு சென்றதேனோ!
ஆறமுடியாது ஆண்டவனை
ஆறுதலுக்காய் தேடுகின்றோம்
பெறுக நீர் சாந்தி ஐயா!
மீண்டும் ஒரு பிறப்பு உங்களுக்கு
இருந்தால் காத்திருப்போம் - நீங்கள்
எங்கள் உறவாகக் கிடைக்க!

*முதலாம் வட்டாரம்,*
*நயினாதீவு.*

என்றும் உம் பிரிவால் மீளாத் துயருறும்,
**குடும்பத்தினர்.**

(C/565907)

## வாடகைக்கு தேவை

யாழ் நகரத்திற்கு அண்மித்த பகுதியில் 2, 3 அல்லது 4 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு அல்லது குத்தகை அடிப்படையில் உடன் தேவை.

**தொடர்புகளுக்கு**
**0777 267027**

(C/565804)

## T.V. கள் விற்பனைக்குண்டு

புதிய Sony - WEGA 21" (F.M.Radio மொடல் உட்பட) பல மொடல்களிலும் 26,000/=, பாவித்த Sony T.V.கள் 21" - 10,000/= - முதல், Pentiam - 4 Computerகள், ரேடியோக்கள் மிக மலிந்த விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 1393670
**இ.மகேஸ்வரன்** (அப்பளக் கொம்பனி),
(சீனிப்புளியடி ஆரம்பப் பாடசாலை அருகில்)
K.K.S.வீதி, இணுவில். (95665)

## மணமகன் தேவை

மலேசியாவில் வசிக்கும் யாழ்.இந்து கௌரவ குடும்பம், வயது 37, பொறியியலாளர், உயரம் 5'5", சிவந்த அழகிய மணமகளுக்கு டாக்டர் மணமகனை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்பு: 077 4419523 (95661)

## வேலையாள்கள் தேவை

மிக்சர் வேலையில் அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்பும் பெண்பிள்ளைகளும் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

வேல்வன் மிக்சர்,
630, பருத்தித்துறை வீதி,
[illegible]

56, கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில்.
[illegible]

தொலைபேசி இல. 0770236661

### சுந்தரம் யோக்கியம்



வல்வெட்டித்துறை, ஊரிக்காட்டைப் பிறப்பிடமாகவும் சோந்தம்பையை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் யோக்கியம் 17.03.2010 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை -பொன்னம்மா தம்பதியரின் புதல்வியும் செல்லத்துரை சுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து கணபதிப்பிள்ளை, இராசம்மா வெள்ளைத்தம்பி, சகுந்தலையம்மா, வைரமுத்து, நல்லம்மா நடராஜா, வேலுப்பிள்ளை பாலசிங்கம், பாக்கியம், சிவப்பிரகாசம், விசாலரத்தினம், பாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும் பரந்தாமன் (ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர், துணுக்காய்), பத்மசுந்தரம், பால ஜோகினி ஆகியோரின் பாசமிகு தாயும் சறோஜினிதேவி, வரதலக்சுமி (வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி), அமரர் தவபுத்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியும் கிருஸ்ணகுமார் தர்சினி (கனடா), சுதர்சன் (ஆசிரியர், மு/மாங்குளம் ம.வி), சுதர்சினி (ஆசிரியை, ஒலுமடு த.வி), காலஞ்சென்ற தவபுத்திரன் பிரணவன் மற்றும் ரவிக்குமார் தாரகா (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும் கீர்த்தனா, தர்சிகன், தேசிகன், தேனிதன், தேசினி, றொசான், அபிஷன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நேற்று (18.03.2010) வியாழக்கிழமை பி.ப. 12.30 மணியளவில் மயிலியதனை இந்து மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

*சோந்தம்பை,*
*வல்வெட்டித்துறை*

(95672)

*தகவல்:*
சு.பரந்தாமன் (மகன்)
தொ.பே.: 0771131334
0213001768

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










சுழிபுரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் கோயிலுக்கு முன்பாக நேற்று மாலை நடைபெற்ற தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசையை அடுத்து ஆலயக்குருக்கள் இரா.சம்பந்தன், ஈ.சரவணபவன் ஆகியோருக்கு ஆசிவழங்குவதையும் - யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம் மங்கள விளக்கேற்றுவதையும் மேல் வரிசையிலும் - கூட்டத்தில் திரண்டிருந்த மக்களையும், வேட்பாளர்களும் பிரமுகர்களும் மேடையில் நின்று மௌன அஞ்சலி செலுத்துவதையும் நடுவரிசையிலும் - வேட்பாளர்கள் அமர்ந்திருப்பதையும் வழக்கம்பரை ஆலய பிரதமகுரு, இரா.சம்பந்தன், முல்லைத்தீவு வேட்பாளர் டாக்டர் ஜெயகுலராஜா, பிரபல சட்டத்தரணி சுமந்திரன், யாழ். வேட்பாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் உரையாற்றுவதையும் கீழ் வரிசையிலும் காணலாம். *(படங்கள்: அதிரன்)*

# விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் பிரிட்டனில் அடைக்கலம் கோரலாமாம்

## அந்த நாட்டு நீதிமன்றம் ஒன்று தீர்மானம்

லண்டன், மார்ச் 19

விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களும் பிரிட்டனில் அடைக்கலம் கோரலாம் என அந்த நாட்டின் நீதிமன்றமொன்று புதன்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பில் 1992ஆம் ஆண்டு இணைந்துகொண்ட நபர் ஒருவர் தொடர்பாகவே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பில் 2006ஆம் ஆண்டு வரை பணியாற்றிய குறிப்பிட்ட நபர் பின்னர் பிரிட்டனிற்குத் தப்பிச் சென்று அங்கு அடைக்கலம் கோரியிருந்தார் எனக் கூறப்படுகின்றது.

இலங்கைக்குத் திரும்பச் சென்றால் விடுதலைப் புலிகள் அமைப்புடனான தொடர்பிற்காகத் தான் சித்திரவதை செய்யப்படலாம் என அவர் தெரிவித் துள்ளார்.

எனினும் பிரிட்டன், குறிப்பிட்ட நபர் யுத்தக் குற்றங்களை இழைத்திருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன எனக் கூறி அவரது கோரிக்கையை நிராகரித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட நபர் இதற்கு எதிராக மேன்முறையீடு செய்திருந்தார்.

இந்த வழக்கு புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளை, மேன்முறையீட்டு நீதிமன்றம் குறிப் பிட்ட தனிநபர் யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டார் எனக் கருதுவது தவறானது எனத் தெரிவித்துள்ளதுடன், இவ்வாறான யுத்தக் குற்றங்களில் அவர் ஈடுபட்டாரா என்பதற்கான ஆதாரங்கள் உள்ளனவா என பிரிட்டன் ஆராய்ந்திருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

(அ-சி)

# யாழ்.கல்வியியல் கல்லூரியில் கல்விமாணி ஆங்கிலப்பாடநெறி

## நாளை ஆரம்ப வைபவம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

தேசிய கல்வி நிறுவனத்தில் கல்விமாணி ஆங்கில பாடநெறி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரியில் நாளை சனிக்கிழமை காலை 8.30மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்தில் தேசிய கல்வி நிறுவக ஆசிரிய வலுவூட்டல் திணைக்கள பணிப்பாளர் கலாநிதி நிகால் விக்கிரமசிங்க, பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், செயற்திட்ட அதிகாரிகள், இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தம் நிகழ்வும் அன்றைய தினம் நடைபெறவுள்ளது.

கல்விமாணி ஆங்கிலப்பாடநெறி இந்த ஆண்டிலேயே மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. யாழ்.மாவட்ட ஆசிரியர்கள் மகரகம சென்று பயில்வதில் இடர்பாடுகள் மற்றும் யாழ்.மாவட்டத்தில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் ஆசிரியர்களின் உயர்கல்வி வாய்ப்புக்களை கருத்தில் கொண்டு பணிப்பாளர் கலாநிதி நிகால் விக்கிரமசிங்க யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியிலும் மேற்படி பாடநெறியை நடத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

பட்டம் மற்றும் பட்டப்பின் டிப்ளோமா இரண்டிற்கும் சமமான தகைமைகளை கல்வி மாணி என்ற ஒரே பட்ட பாட நெறியை பூர்த்தி செய்வதனூடாக ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் இப் பாட நெறியில் கல்வி மற்றும் தொழில்சார் பாடங்கள் முழுமையாக ஆங்கில மொழி மூலம் இடம்பெறும். என்றும் [illegible] தின் இணைப்பாளர் [illegible] திரம்பிள்ளை தெரிவித்துள்ளார். (ஓ-10)

# வவுனியா வளாகத்தில் உளச்சார்புப் பரீட்சை

யாழ்.பல்கலைக்கழகத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கற்கை நெறி 2009/2010இற்கு விண்ணப்பித்த மாண வர்கள் தமக்கான உளச்சார்புப் பரீட்சை விண்ணப்பங்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பிரதேச செய லாளரின் பரிந்துரையுடன் வவுனியா வளாக சிரேஷ்ட உதவிப்பதிவாளரிற்கு அனுப்பி வைக்குமாறு யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக முதல் வர் அறிவித்துள்ளார்.

பரீட்சைக்கட்டணமாக 500ரூபா வினை மக்கள் வங்கிக் கணக்கு இல 08610012 1190316இற்கு வைப்புச் செய்து அப் பற்றுச் சீட்டு மற்றும் ஜி.சி.ஈ (உ/த), ஜி.சி.ஈ (சா/த) சான்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட பிரதி மற்றும் தேசிய அடையாள அட்டை அல்லது தபால் அடையாள அட்டை பிரதிகளையும் மேற்படி விண்ணப்பங்களுடன் அனுப்பி வைக்குமாறும் இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கு 024222 3317 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளு மாறும் அவர் கூறினார்.

மேற்படி பரீட்சைகள் அடுத்த மாதம் 25 ஆம் திகதி கொழும்பு, கண்டி, மிகுந்தலை, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து இடங்களில் நடைபெறவுள்ளன. இப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை இணைய வழித்தளத்தினூடு விண்ணப்பிக்க வேண்டும் என்பது கட்டாயமாக் கப்பட்டி ருந்தது. எனினும் மீள்குடி யேறிய மாணவர்களின் வசதி கருதி மேற்படி மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (6-16)

# வாசனா சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, மார்ச் 19

தேசிலய லொத்தர் சபையின் வாசனா சம்பத 811ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் 'Z' என்ற ஆங்கில எழுத்தும் 01/37/63 /69 ஆகிய இலக்கங்களும் அதிர்ஷ்டத்திற்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. 65போனஸ் இலக்கமாக தெரிவாகியது.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. நான்கு இலக்கங்களும் சரியாகக் கொண்ட சீட்டை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 6பேருக்கு இரண்டாம் பரிசாக தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கும்.

மூன்று இலக்கங்கள் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 296பேருக்கு மூன்றாம் பரிசாக தலா இரண்டாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

இரண்டு இலக்கம் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14242பேருக்கு நான்காம் பரிசாக தலா நூறு ரூபா கிடைக்கும்.

ஒரு இலக்கம் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 200225 பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ஒ-10)


# 31 நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 19 - 02 - 1929



உதிர்வு 17 - 02 - 2010

## திருமதி நல்லதம்பி அழகம்மா

(பிரபல வர்த்தகர்)

அன்புடனே எம்மை வளர்த்து அறிவூட்டி
இன்பமுடன் வாழ வைத்து ஏற்றமுற நாம்வாழ
எல்லாம் எமக்களித்தாய் -
நெஞ்சிருக்கும் வரைக்கும்
நாம் மறவோம் உன் நினைவால் வாழ்ந்திருப்போம்.

எமது இல்லத்தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்து ஆறுதல், அனுதாபங்கள் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

எமது இல்லத்தில் இன்று (19.02.2010) வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பத்தைமேனி,
அச்சுவேலி

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்...

# முகாம்களிலுள்ள முன்னாள் போராளிகள் 1,565 பேர் வாக்களிக்க அனுமதி கோரல்

கொழும்பு, மார்ச் 19

வவுனியா உட்பட புனருத்தாபன முகாம்களில் உள்ள முன்னாள் போராளிகளில் ஆயிரத்து 565 பேர் எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிக்க அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளனர் - என்று வவுனியா உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

இவ்விண்ணப்பங்களின் மீதான தேர்தல்கள் ஆணையாளரின் அங்கீகாரம் இன்று கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

2008 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் பதிவுபெற்ற இவர்களுக்கு முகாமுக்குள் விசேட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது எனவும், அதனைப் பாவித்து கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அவர்கள் வாக்களித்துள்ளனர் எனவும் உதவி ஆணையாளர் மேலும் சுட்டிக் காட்டினார்.

## கணிதபாட மதிப்பீட்டுப்பணி; இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை கணித பாட மதிப்பீட்டுப்பணி . குடும்பப் பாடசாலைகளின் முதன்மைப்பாடசாலையில் நடை பெறவுள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல் இன்று மு.ப. 11 மணிக்கு வலயக் கல்வி பணிமனையில் இடம்பெறும்.

இந்தக் கலந்துரையாடலில் முதன் மைப் பாடசாலை அதிபர் மற்றும் பொறுப்பான ஒரு கணிதபாட ஆசிரியருடன் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (ஒ-10)

## வேட்பாளரின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், தேர்தலின் போட்டியிடும் அரசியல் கட்சிகளினதும் சுயாதீனக் குழுக்களினதும் தலைவர்களின் உத்தியோக பூர்வ அங்கீகாரக் கடிதத்தைச் சமர்ப்பிக்காதவர்கள் வாக்குச்சாவடிகளில் பணியாற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் அவ்வாறான அங்கீகாரக் கடிதங்களில் மாற்றங்கள் செய்தோ, மேலதிகமாக விவரங்கள் சேர்க்கப்பட்டிருந்தாலோ அத்தகைய கடிதங்கள் நிராகரிக்கப்படும் என்றும் தேர்தல்கள் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

## 'சனல் 4' சேவைக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டில் இதனைத் தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளர் டலஸ் அழகப் பெரும அங்கு மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் போது விடுதலைப் புலிச் சந்தேக நபர்களை இலங்கை இராணுவம் சுட்டுக் கொல்வது போன்ற வீடியோவை வெளியிட்ட 'சனல் - 4' தொலைக்காட்சிக்கு ஜெனரல் சரத் பொன்சேகா கடிதமொன்றை அனுப்பியுள்ளமையை அரசு முழுமையாக எதிர்க் கின்றது.

குறிப்பிட்ட வீடியோவை 'சனல் -4' தொலைக்காட்சி தயாரிப்பதற்கு சரத் பொன்சேகா உதவியிருக்கலாம் என நாங்கள் தற்போது சந்தேகிக்கிறோம்.

குறிப்பிட்ட பேட்டி 'சனல் - 4' தொலைக்காட்சியைச் சென்றடைவதற்கு ஜே.வி.பியே காரணம்.

குறிப்பிட்ட கடிதமும் பேட்டியும் பொய்யானவை.

இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர் ஒருவர் குளிரூட்டி, சுடு தண்ணீர் போன்ற வசதிகளைக் கோருவது இதுவே முதல் தடவையாகும் - என்றார்.

## மனோ எம்.பியின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட கலஹா பிரிவைச் சேர்ந்த குண்டர்களால் இவர்கள் தாக்கப்பட்டனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெல்தோட்ட தோட்டப்பகுதியில் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதும் அங் கிருந்து சம்பவ இடத்திற்குச் சென்று காயமுற்றவர்களை கண்டிப்போதான வைத்தியசாலையில் சேர்த்துள்ளார்.

கலஹா பொலிஸாரிடம் இச்சம்பவம் குறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## தமிழர்களை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுழிபுரம் வழக்கம்பரை அம்மன் ஆலய முன்றலில் நேற்று மாலை நடைபெற்ற தமிழத் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சித் தீர்வே அவசியம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதில் உறுதியாகவும் தெளிவாகவும் உள்ளது.

### கூட்டமைப்பை சிதைக்க பல முனைகளில் முயற்சி

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை அசைக்கவோ-உடைக்கவோ முடியாது. அது பலம் வாய்ந்த சக்தி-அமைப்பு. அதனை சிதைப்பதற்குப் பலர் இப்போது பல முனைகளில் இருந்தும் முயன்றுகொண்டிருக்கிறார்கள். அந்த முயற்சிகள் அனைத்தும் ஏப்ரல் 8ஆம் திகதி தவிடு பொடியாகிவிடும். அதனைச் செய்வதற்கு எமது மக்கள் இப்போது தயாராகிவிட்டார்கள்.

இந்த நாடாளுமன்றத் தேர்தல் மூலம் பெரும் சவாலை யாழ்.மக்கள் எதிர்கொண்டுள்ளனர். நாம் ஒரு தனித் தேசிய இனம். எமக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. நாங்கள் இந்த நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறோம். எமது மக்களுக்கு அற்ப சொற்ப சலுகைகளை வழங்கி அவர்களை விலைக்கு வாங்கிவிடலாம் என சிலர் நினைக்கிறார்கள். எமது மக்கள் அடிப்படை உரிமைகளை மறந்துவிடுவார்கள் என அவர்கள் எண்ணுகிறார்கள். ஆளும் கட்சிக்கு இந்த எண்ணம் இருக்கிறது. இதற்கு எமது மக்கள் பதிலளிக்க வேண்டும். அது உறுதியான திடமான பதிலாக இருக்க வேண்டும். உரிய வேளையில் அவர்கள் தகுந்த பதிலை அளிப்பார்கள்.

நாம் சிங்களப் பெரும்பான்மை மக்களை நேசிக் கின்றோம். நீங்களும் சிறப்பாக வாழ வேண்டும். அதே நேரம் எங்களையும் வாழவிடுங்கள். உரிமையைத் தவிர நாம் வேறெதையும் கேட்கவில்லை. இந்த நாட்டின் சகல உரிமைகளையும் அனுபவிக்க எமக்கும் உரித்துண்டு.

### அரச சேவையில் தமிழர்கள் மூன்றரை வீதத்தினரே!

இளைஞர்களே!, யுவதிகளே! உங்களின் பிரச்சினைகளை நாங்கள் உணராமல் இல்லை. அவற்றை நாம் உதாசீனம் செய்ய முடியாது. ஆனால் அவை நிரந்தரமாக தீர்க்கப்பட வேண்டும். இன்று அரச சேவையில் தமிழர்களின் விகிதாசாரம் மூன்றரை வீதம் முதல் நான்கு வீதமாக உள்ளது. அது முன்னர் 25வீதமாக இருந்தது. அது இவ்வாறு குறைந்ததற்கு காரணம் என்ன?

### அபிவிருத்தி சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில்

இங்கு அபிவிருத்தி நடைபெறவில்லை. அபிவிருத்திக்கான பணமும் அரசினுடையது இல்லை. அது சர்வதேச நாடுகள் வழங்குகின்ற உதவிகள். அதில் பெரும் பகுதி எமது மக்களுக்கு கிடைப்பதில்லை. அதை வேறு பலர் அபகரித்துக் கொள்கிறார்கள்.

அபிவிருத்தி என்பது எமது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் நாம் தீர்மானிக்க வேண்டியது. அது எமது மக்களின் இறைமையில் ஓர் அங்கம். அது எமக்குத் தேவை என்பதை நாம் தான் தீர்மானிக்க வேண்டும். அதை இந்தத் தேர்தல் மூலம் நாம் நிரூபிப்போம்.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையே இப்போது ஒரு ஆழமான உறவு ஏற்பட்டு வருகின்றது. ஒருவருக்கு ஒருவர் தேவை என்பதை அவர்கள் (முஸ்லிம் மக்கள்) உணர்ந்துள்ளார்கள். இந்தத் தேர்தலில் அந்த முடிவு திடமாக உறுதிப்படுத்தப்படும். எனவே எமது மக்கள் யாழ்.மாவட்டத்திலிருந்து கூட்டமைப்பின் சார்பில் 9 பேரை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும்-என்றார். இந்தக் கூட்டத்தில் கூட்டமைப்பின் வேட்பாளர்களான சி.[illegible]தரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், அ.விநாயகமூர்த்தி, க.அருந்தவபாலன், ஈ.சரவணபவன், மாவை சேனாதிராசா, சீ.வி.கே.சிவஞானம், எஸ்.இராஜேந்திரன், பேராசிரியர் இ[illegible] சிவசந்திரன், மு.றெமிடியஸ், எஸ்.குலநாயகம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். (ஒ-50-6)




MOTHERBOARD
Asrock G31 5000/-
Foxconn G31 5250/-
Esonic G31 4900/-
Intel DG31 PR 6900/-
Asus P5KPL-AM SE 6100/-

PRINTER
HP D 1663 4200/-
HP Laser Jet 1005 14750/-
Samsung Laser Jet ML 1640 10900/-
Epson T10 4400/-

HARD DISK
40 GB SATA 2000/-
160 GB SATA 4600/-
250 GB SATA 5400/-
Portable 250GB SATA 9500/-

DVD WRITER
LG SATA 3000/-
Samsung SATA 3250/-
Sony 24X SATA 3650/-
HP 24X SATA 3300/-

NETWORK
D-Link 8 Port Switch 2250/-
Normal 8 Port Switch 1750/-
Wireless Adapter TP-Link 2500/-

CASING
ATX Casing 2400/-
(with Power Supply 500W)

PROCESSOR
Intel 2.8 Ghz Duo Core 8000/-
Intel 2.7 Ghz Duo Core 8100/-
Intel 2.93 Ghz Core 2 Duo 13900/-

DONGLE
HSDPA Modem (SIM Model)
Prolink (New Edition) 6750/-
D-Link 8500/-
RECOVERY CARD 1200/-

PAP2 LINKSYS
PAP2 Linksys 7000/-
(No.1 Green Light)

SCANNER
Mustek USB 4900/-
Canon Lide 100 USB 5750/-
HP G2410 7250/-

WEBCAMERA
Normal Camera 900/-
AD Tech (068) 1500/-

MONITOR
LG 16" LCD 13250/-
LG 19" LCD 15500/-

ACCESSORIES
Network Cable 300M Box 3500/-
Optical Mouse SONY 225/-
Normal Keyboard 325/-
Genius Speaker 300/-
Head Phone with Mic 250/-
USB Capture Card 2900/-
Power Supply 450W 1200/-
UPS 650 VA 4000/-
UPS Battery 12/7 1000/-

Computer Table (XXL) Rs. 2,400.00 Only
Computer Chair Rs. 2,990.00 Only
SAMSUNG Digital Camera 12.2 Mega pix 14500/- Only

VISA Credit Cards & Debit Cards are acceptable
* Warranty Value 1-3 years
* Stock Available

MUSIC WORLD & COMPUTERS (PVT) LTD.
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. தொலைபேசி/பக்ஸ்: 021 222 6654
Email: musicworld@dialognet.lk (ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)



தவணைக்கட்டண அடிப்படையில்
மாதாந்தம் 12,000/= வீதம் செலுத்தி GN 125மோட்டார் சைக்கிள் ஒன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
T.P No. 0777427777
பூபதி காட்சியறை, யாழ்.மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை
(C/565924)



அன்றும் இன்றும் இனி என்றும்
உங்கள் செவிகளில் தேனிசை வார்க்க
"ராஜன்ஸ்" இசைக்குழுவினர்
தொடர்பு: 242, பிறவுண்வீதி,யாழ்ப்பாணம். தொ.பே: 0776510165
(95666)


### யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

**21ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்**

தலைவர் : திரு. க.சண்முகசுந்தரம்
இடம் : யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பேராசிரியர் அ.துரைராஜா நினைவு மண்டபம்
காலம் : 28.03.2010 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10மணி

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பழைய மாணவர் சங்கம்,
யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,
வல்வெட்டித்துறை. (95660)

பொ.சுரேஸ்குமார், (செயலாளர்).


வந்து விட்டது வெற்றித்தேர்வு
தரம் 5, தரம் 4 வெற்றித்தேர்வு தொடராக வெளிவருகின்றது. புத்தகசாலைகளில் பெறலாம்.
தரம் 4 முதல் O/L வரையான 1ஆம் தவணைப் பரீட்சை வினாப் பத்திரங்கள் இன்றே பெறலாம்.
பூபாலசிங்கம், அன்னை புத்தகசாலைகளில் அக்கடமி வெளியீடு என்று கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்.
சயன்ஸ் அக்கடமி, நல்லூர், அரியாலை
(சி/565921)


## மரண அறிவித்தல்

### சங்கநாதபிள்ளை பரமேஸ்வரி



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கநாதபிள்ளை பரமேஸ்வரி நேற்று (18.03.2010) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2010) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காரைக்கால் சிவன்கோயிலடி, இணுவில்.

தகவல்: நல்லையா (தயாளன்)


BITSMANS
கல்விநிறுவனம், மானிப்பாய்.
A/L வரலாறு
ஆசிரியர்: M.பத்மன் B.A (HONS) M.A.
A/L 2011/2012 புதிய வகுப்புக்கள்
ஆரம்பம்: 20.03.2010 சனி 4 p.m



கணக்கீடு
P.பகீரதன் B.B.A (FM.Spl)
தொடர் பரீட்சையும் கருத்தரங்கும் - 2010
★ 8 பரீட்சைகளும், கருத்தரங்குகளும் நடைபெறும்.
★ பரீட்சைக்கட்டணம் ரூ 500
★ மாணவர்கள் பதிவுகளை NEC யில் மேற்கொள்ளலாம்.
20/03/2010 (சனி) 1.30 மணிக்கு கணக்கீடு I பரீட்சை NEC யில் நடைபெறும்.



கொள்கையில் நாம் உறுதியாய் இருப்போம். நம்புங்கள்! நாளை தமிழர் வாழ்வு சிறக்கும்!

2010 ஏப்ரல் 08 பாராளுமன்றத் தேர்தலில்



பத்மினி சிதம்பரநாதன்
B.A(Hons),P.G.Dip.in.ed

போர் கொண்டு சிதைத்தனர் தமிழரை
இப்போ பண்பாடு சிதையுண்டு போகிறது.

எம் கண்முன்னே நாவலர் கட்டிக்காத்த
நல்லூரின் புனிதம் அழிக்கப்படுகிறது.
இப்படி எத்தனை சீரழிவுகள் இதறகிடையில்

இது பொறுக்காது மனம் வருந்துபவர்களே...
வாருங்கள், ஒன்றாவோம்.
புதிய தமிழ்ச் சமூகத்தை மீளக் கட்டியெழுப்புவோம்.

இலங்கையிலும் உலகிலும் தமிழர்களின் நியாயத்தை நிலைநாட்டி
இலங்கையில் இனங்கள் சமாதானமாக வாழும் வகையில்

இருதேசம் ஒருநாடு காண உழைப்போம்
கருத்துப் பகிர்வுக்கு :- 021 222 3940

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org